பதிவு இலக்கம் : 105267
வார இதழ்


# தீபம்

23.06.2019 தீபம் – 187
பக்கங்கள் - 24 விலை ரூபா 30.00

யாழ் அகி ஐஸ்கிறீம்
ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்
இல. 46,
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
021 791 7585
077 023 2328




பக்கம் 05




பக்கம் 04




## போர்ப்பதற்றம் சொல்லும் செய்தி




# கப்பல்



கப்பலின் உண்மையான எடை எவ்வளவு இருந்தாலும், அது கடலில் செல்லும்போது... செல்லும் திசையினால் எடை மாற்றம் ஏற்படும். மேற்கு நோக்கிச் சென்றால் எடை அதிகமாகவும், கிழக்கு நோக்கி செல்லும் போது, எடை குறைந்தும் இருக்கும். காரணம் பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுழல்வதே.




## அறிவு மொழிகள்

- பயம் தான் நம்மைப் பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறிவோம்.
- நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.
- உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.
- உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.
- தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகிறான்.

## பொதுஅறிவு வினாக்கள்

1. உலகில் அதிக அளவு சிலை வடிக்கப்பட்ட மனிதர் யார் ?
2. மில்லினியம் டோன் எங்குள்ளது ?
3. உலகிலேயே அதிக முட்டையிடும் உயிரினம் எது ?
4. பைசா கோபுரம் எதனால் கட்டப்பட்டது ?
5. லில்லி பூக்களை உடைய நாடு எது ?
6. பகவத்கீதை எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?
7. யானையின் கர்ப்பகாலம் எத்தனை மாதம் ?
8. சோகத்தை குறிக்கும் ராகம் எது ?
9. நதிகள் இல்லாத நாடு எது ?
10. சாணத்திலிருந்து என்ன வாயு கிடைக்கிறது ?

### 09.06.2019 பொது அறிவு வினாவிற்கான விடைகள்

1. குறிப்பறிதல்
2. நாகமரம்
3. 1498 ஆம் ஆண்டு
4. உதயதாரகை
5. சிறிமாவோ பண்டாரநாயக்கா
6. சிறிமாவோ பண்டாரநாயக்கா
7. பெங்களூர்
8. கோமுகம்
9. Postal IndexCode
10. ஆறுமுகநாவலர்

இந்த வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி ரூபா 500 பணப் பரிசினை வெல்லுங்கள்!

தீபம்,
பொது அறிவு வினாப் போட்டி,
இல.10, வில்வந்தெரு
ஒழுங்கை கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**வெற்றிபெற்றோர் விபரம்**

செல்வி பிரதீபா சிவபாலு
போடிங்றோட், புலோலி மத்தி,
பருத்தித்துறை.

# தங்கத் தூண்டில்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், "சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேலும் உணவு தாருங்கள்!" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

தங்கத் தூண்டில் இதைப் பார்த்த சுந்தர், "அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது!" என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

"சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!" என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.

"இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!" என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.


பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். "என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்துக்கு தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், "நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா!" என்று கத்தினான். ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!" என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்தைப் பார்த்து அவர், "நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

**3D படம்** நன்றாக உற்றுப் பாருங்கள் உங்களை ஆச்சரியப்படுத்தும் ஒன்றைக் காணுவீர்கள். அது என்ன என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



தீபம்
வார இதழ்
"யாமார்க்கும் குடியல்லோம்"
23.06.2019 இதழ் -187
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# மதம் தவிர்த்து மனிதம் கொள்க...

நாளுக்கு நாள், நாட்டில் இனங்களுக்கிடையேயான முரண்பாட்டு நிலை அதிகரிக்கும் வகையிலான அநாகரிக அரசியல் செயற்பாடுகள் மறைமுகமாக மட்டுமல்ல வெளிப் படையாகவும் பதவி வெறிபிடித்த மூன்றாந்தர ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படுவதை அன்றாடம் வெளிவரும் ஊடகச் செய்திகள் உறுதி செய்து வருகின்றன.

இந்த நாட்டில் இது ஒன்றும் நடக்க முடியாத அதிசயச் செய்திகள் அல்ல. நடைபெறக்கூடிய அபத்தமான செயற்பாடுகள் தான் என்பதை கடந்தகால வரலாற்றுப் பதிவுகள் ஆவணப்படுத்தியுள்ளன.

நாட்டை நாசப்படுத்திய அனைத்து போராட்டங்களுக்கும் இன–மத மற்றும் சாதீக ரீதியிலான அனைத்துக் கலவரங் களுக்கும் சூத்திரதாரிகளாக இருந்தவர்கள் அரச பீடத்தையும், மத பீடங்களையும் சேர்ந்த கடும் போக்கு சிந்தனையாளர்கள் மட்டுமே காரணம். அரசியலையும் ஆன்மீகத்தையும் அசுத்தப்படுத்தி அதனூடாக ஒரு அழகான வளமான சிறிய நாட்டை உலகோர் அச்சத்துடனும் அசிங்கமா கவும் பார்க்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் அதனையே இன்னமும் தொடர்ந்து ஒருவித வன்மத்துடன் மேற்கொண்டு வருவதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்யவே அரசியல் மற்றும் ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுவதாகத் தம்மைத்தாமே பிரசாரப்படுத்திக் கொள்ளும் இந்த இன, மத மேலாதிக்க அதிகார வெறிகொண்டவர்கள் தொடர்ந்தும் தமது பதவிக் கதிரைகளில் ஒட்டிக்கொள்ளப் பகீரதப் பிரயத்தனம் எடுத்து வரும் சூழலில், கடந்த ஆறுமாத காலமாக இங்கு நடந்துவரும் சம்பவங்கள் அனைத்துமே அரசியல் சுயநல அயோக்கியத் தனத்தின் அதியுச்ச நடவழக்கைகளாக அமைந்து வருவது சமூக அக்கறையுள்ள அனைவருக்கும் அதிர்ச்சிதரும் விடயமாகும்.

மதத் தீவிரவாதம் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத அடி முட்டாள் தனமான செயற்பாடுகளுக்கே வழிவகுக்கும் என்பது யதார்த்தமே. ஆனால் அதுவே சிறிலங்காவின் அரச இயந்திரத்தை இயக்கும் அல்லது இயங்காது முற்றாக நிறுத்தி வைக்கும் சக்தியாக மாறி இருப்பது தான் எதிர்காலத்தில் நிகழப் போகும் பேரழிவுக்கான மூல காரணியாகப் போகிறது என்பதற்கு பேரினவாதத்தை நெறிப்படுத்தும் பௌத்தமத பீடங்கள் மறைமுகமாகவும் அரச அதிகார பீடத்தை கட்டுப்படுத்தும் அல்லது கட்டவிழ்த்துவிடும் சக்தியாக முழு மூச்சுடனும் இயங்கத் தொடங்கியுள்ளமை, உணர்த்தி நிற்கிறது.

இது ஆரோக்கியமான ஆன்மீகச் செய்தியல்ல, ஆபத்தான அரசியல் அதிகார வலுப்படுத்தும் அச்சுறுத்தலாகும்.


மத அடிப்படைவாதமென்பது சகல மதங்களையும் அதன் ஆதார சுருதியாக இருப்பதாக கூறப்படும். அன்பு மற்றும் இரக்கத்தின் அடிப்படையிலான மானிட நேயத்தையும் தகர்த்தெறிந்து விடும் என்பதற்குச் சுதந்திரத்திற்கு பின்னரான சிறிலங்காவின் அரசியல் வரலாறு ஒரு அழுத்தமான உதாரணமாகும்.

அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளாதவர்கள் ஆட்சி அதிகார பீடத்தில் இருந்தாலும், ஆன்மீக அதிகார பீடத்தில் இருந்தாலும், தேசத்திற்கும் மக்களிற்கும் அவமானத்தை யும் அவலத்தையும் ஏற்படுத்துபவர்களேயாவார்.

அவர்கள் நாட்டையும் மக்களையும் அதலபாதாளத்துள் தள்ளும் வெறியுடன் செயற்படுவார்களேயாவர். வரலாறு இவர்களை ஒரு போதுமே அங்கீகரிக்காது. இன்று இந்த நாடும் மக்களும் நாளும்எதிர்கொண்டுவரும் அனைத்துத் துயரங்களில் இருந்தும் மக்கள் விடுபட **'மதமார்க்கங்களைத் தவிர்த்து மனித மார்க்கங்களைத் தேட'** வேண்டிய அவசியம் மக்களுக்கு உண்டு.

அவர்கள் சிந்தித்து செயற்படும் தருணங்களை அலட்சியப் படுத்தி, தவறவிடும் போது தங்களுக்கான புதைகுழிகளைத் தாமே தோண்டிக் கொள்பவர்களாகி விடுவர் என்பதே உண்மை...


மனிதராய் எழுவீர் ... மனிதராய் உயர்வீர்.



"யோசிக்காமல் அதிகாரத்திற்கு அடிபணிந்து போவதுதான், உண்மைக்கு மிகப்பெரிய எதிரி"

- ஐன்ஸ்டைன்

## பாரதீ...




**ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!-பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?**

**மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்!-எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே
தெய்வமென்
றோதி யறியீரோ?**

**சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ?-பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?**

**யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே!-உன்தன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்
உன்னை-மாயையே!**

## தாய் நாட்டின் தவப்புதல்வன்




(1970 களில் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்துச் சிரிப்பு ஓவியம் இது. பாருங்கள் இன்றும் இதே நிலைதான்...)



# கல்முனையில் பதற்றம்... தரமுயர்த்த இணக்கம்!

**கல்முனை கனகராஜ்**

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோரி, சர்வமத குருமார்களால் நான்கு நாட்களாக உணவுத் தவிர்ப்பு போராட்டமும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தடை செய்யக் கோரி, முஸ்லிம் பிரதிநிதிகளின் சத்தியாகிரக போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த மாவட்டங்களில் நிர்வாக முடக்கல் போராட்டம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு உடன்பட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று அரசியல்வாதிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு சகலரும் உடன்பட்டு வரும் நிலையில் அதனை தடை செய்யக் கோரி, முஸ்லிம் பிரதிநிதிகள் கல்முனை ஐக்கிய சதுக்க முன்றலில் சத்தியாகிரக போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளமை இனங்களுக்கிடையில் முரண்நிலையைத் தோற்றுவிக்கும் செயல் என அவதானிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இனத்துவ அடிப்படையிலும் நிலத் தொடர்பற்ற வகையில் உருவாக்கப்பட எத்தனிக்கும் பிரதேச செயலகத்தை தடை செய்யுமாறு அவர்கள் கோருகின்றனர்.

ஒரே இனத்தை சேர்ந்த முஸ்லிம் மக்கள், கல்முனை மாநகரசபையில் இருந்து முற்றாக பிரிந்து தனி நகர சபை வேண்டும் என போராடும் போது, சகோதர இனத்தைச் சார்ந்த தமிழ் மக்கள், தமது உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் என போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது என்று மக்கள் கேட்கின்றனர்.

இப்பிரச்சினை இன்று தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. எனவே கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு உடன்பட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேசம், சாய்ந்தமருது பிரதேசம், கல்முனை தெற்கு பிரதேசம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதுதான் கல்முனை மாநகரசபையாக இருக்கின்றது. இதில் சாய்ந்தமருது, கல்முனை தெற்கு ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது, கல்முனை வடக்கு பிரதேசத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

இந்நிலையில் சாய்ந்தமருது பிரதேசம், ஏற்கனவே தனியொரு பிரதேச செயலகமாக மாற்றப்பட்டு, இன்று சாய்ந்தமருது பள்ளிவாசல் தலைவர்கள் தலைமையில் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள், தமது பிரதேச செயலக பிரதேசத்தை, கல்முனை மாநகரசபைக்கு முற்றிலும் வெளியே பிரித்தெடுத்து முழுமையான நகரசபையாக்கும்படி போராடுகிறார்கள்.

அதுபோல் கல்முனை வடக்கு தமிழ் சமூக தலைவர்கள் தமது உப பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த கோரி கடந்த பல்லாண்டுகளாக போராடி வருகிறார்கள்.

ஒரே இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள், கல்முனை மாநகரசபையில் இருந்து முற்றாக பிரிந்து தனி நகர சபை வேண்டும் என போராடும் போது, சகோதர இனத்தைச் சார்ந்த தமிழ் மக்கள், தமது உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் என போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது.

> ஏற்கனவே ஹிஸ்புல்லா போன்ற முஸ்லிம் தலைவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்களால் அறிக்கைகளாலும் சிங்கள முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தொடர்ந்து தற்போது கல்முனையில் நடைபெற்றுவரும் போராட்டங்கள் தமிழ் முஸ்லிம் மக்களிடைய ஒரு பதற்ற நிலையையும் இரு இனங்களுக்குமிடையேயான நல்லுறவை நாசமாக்கும் வகையில் தீவிரமடைவது இருதரப்பினருக்கும் நல்லதல்ல.

இந்த கல்முனை வடக்கு தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் தர்க்கரீதியாக எடுத்து கூற வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கல்முனை வாழ் தமிழ் மக்களுக்காக தனக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இப்போதே தூக்கியெறிந்து செல்லத் தயார் என்ற போதிலும் தனியொருவருடைய இராஜினாமா எந்தவொரு பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்ற வரலாற்று பூர்வ யதார்த்தத்தை தாம் அறிந்துள்ளதாகவும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் தெரிவித்துள்ளார்.

பதவிகளை மக்கள் வழங்குவது அவர்களது பிரச்சினைகளை தீர்க்கவேயன்றி பிரச்சினை வரும் போது வீர வசனம் பேசி விட்டு அதன் சொகுசுகளை அனுபவிக்க வல்ல எனவும் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

எனவேதான் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒட்டு மொத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்வதன் ஊடாக கல்முனை மக்களின் நீண்ட நாள் கனவான, தரமுயர்ந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை நனவாக்க முடியுமென என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரலாற்று திருப்புமுனையை யதார்த்தமாக்க வடக்கு கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயார் என்றால் அவர்களுடன் இணைந்து தமது இராஜினாமா கடிதத்தினையும் தேர்தல்கள் செயலகத்தில் கையளிக்க தாம் முன்னிற்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

எனவே தமிழர்களின் ஒருமித்த பலத்தினை முழுதேசத்திற்கும் எடுத்துக் காட்டி வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஜனநாயகப்போரின் முதல் அத்தியாத்தை எழுதுவதற்கு அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைகோர்க்க வேண்டும்.

இதேவேளை கல்முனை வடக்கு தமிழ் உப-பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலமாக இயங்க வைப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க இணக்கம்




தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பிரதமர் ரணிலை சந்தித்திருந்த நிலையில், இதற்கான இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த பிரச்சினையை இனவாத ரீதியான பிரச்சினையாக மாற்றிவிடக்கூடாது.

பிரதேச சபையை ஒரே இரவில் மாநகரசபையாக தரம் உயர்த்தி மாற்ற முடியுமென்றால் 35 வருடகாலமாக கோரி வருகின்ற பிரதேச செயலகத்தை ஏன் தரம் உயர்த்த முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 35 வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற இந்த கோரிக்கைள் முஸ்லிம் தலைமைகள் அல்லது முஸ்லிம் மக்களின் எதிர்ப்புக்களால் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

முஸ்லிம் தரப்புக்களின் அழுத்தம் காரணமாக அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பாரியளவிலான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்தும், அபகரித்தும் முஸ்லிம் குடியேற்றங்கள் அல்லது கிராமங்களை உருவாக்குவதற்காகவே முஸ்லிம் தரப்புக்கள் இதற்குத் தடையாக இருக்கின்றன என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், பிரதேச செயலக தரமுயர்த்தலை வலியுறுத்தி கல்முனையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ள பௌத்த பிக்கு மற்றும் இந்துமத குரு உள்ளிட்ட நான்கு பேரின் போராட்டம் தொடர்ந்து ஐந்தாம் நாளாகவும் இடம்பெறுகிறது.

அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் சந்தித்திருந்தார்.

பின்னர் அங்கு தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்புகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த அவர், கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் விடயத்தில் முஸ்லிம் தரப்பினர் முதற்கட்ட இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியதாக கூறினார்.

எனினும் இதில் நிலவுகின்ற எல்லைப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆணைக்குழுவின் ஊடாக நடவடிக்கை எடுக்க இணங்கப்பட்டதாகவும், இன்றையதினத்துக்குள் இதற்கான தீர்வை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் மீது அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் சந்தேகங்களும் தப்பு அபிப்பிராயங்களும் மேலும் வலுச்சேர்க்க முஸ்லிம் தலைமைகள் அனுமதிக்கப் போகிறார்களா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

# அமெரிக்கா – ஈரான் போர் பதற்றம் சொல்லும் செய்தி



கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம்.

அமெரிக்கா மீளவும் ஒரு போரை மேற்காசியாவில் நிகழ்த்த முயலுகின்றது. உலகப் பொருளாதாரத்தில் பலமான பொருளாதார வளத்தினைக் கொண்டுள்ள நாடுகளை நோக்கி போர்களை நிகழ்த்துவதன் மூலம் அந்த நாடுகளை பலவீனப்படுத்திவருகிறது. இதில் ஆபிரிக்க நாடுகளும் விதிவிலக்கல்ல. இஸ்லாமிய தீவிரவாதம், ஆட்சியாளருடன் மோதவிடுவதன் மூலமாகவும் இத்தகைய பொருளாதார வலுவையும் பண்பாட்டின் தொடரையும் இல்லாது செய்து வருகிறது அமெரிக்கா. இக்கட்டுரையும் ஈரான் - அமெரிக்க முறுகல் பற்றிய தேடலாக அமையவுள்ளது.




டொனாட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்ததன் பின்பு ஈரான் - அமெரிக்க உறவு பாதிப்புக்குள்ளாக ஆரம்பித்தது. மேற்காசியாவில் ஈராக்கின் வீழ்ச்சிக்கு பின்பு வலுவான அரசாக ஈரான் காணப்படுகின்றது என்பதை பலவீனமான மதிப்பீடு எனக்கூறமுடியாது. ஈராக் மீதான யுத்தத்திற்கு பின்பு ஷியா - சின்னி முஸ்லிம்கள் என்ற பிரிநிலையை அமெரிக்கா உட்பட மேற்குலக சக்திகள் ஏற்படுத்துவதில் வெற்றிகண்டனர். இதனால் எழுந்த முரண்பாடு இஸ்லாமிய தேசியத்தை இருவேறு துண்டுகளாக ஆக்கியுள்ளது. இஸ்லாம் மேற்குலகத்தால் திட்டமிட்டு அழிக்கப்படுவதென்பது ஷியா - சின்னி வேறுபாட்டினால் இலகுவானது. இன்றைய இஸ்லாமிய போர் இஸ்லாம் - இஸ்லாமுக்கு எதிராக மேற்கொள்ளும் போராகவே அமைந்துள்ளது. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உஷைனின் வீழ்ச்சிக்கு பின்பு சின்னி முஸ்லிம்களின் எழுச்சி இஸ்லாமிய அரசினை (ஐ.எஸ்) கட்டி வளர்த்தது.

இத்தகைய முரண்பாட்டுக் களத்திலேயே அமெரிக்க - ஈரான் போர் எழுவது பற்றிய பிரச்சாரங்கள் நிகழ்ந்துவருகிறது. ஏறக்குறைய ஒரு போருக்குரிய அடித்தளங்களை ஈரான் மீது அமெரிக்கா ஏற்படுத்தி விட்டது. குறிப்பாக அணுவாயுத உடன்பாட்டிலிருந்து வெளியேறியதன் மூலம் ஈரானின் முதல் கட்ட மிக நிதானமான வளர்ச்சியை தகர்த்துள்ளது. பிராந்திய அமைதியும், தேசத்தின் அமைதியையும் அமெரிக்கா முதல்கட்டத்தில் தகர்த்தது.

இரண்டாவது பாரியளவில் பொருளாதாரத்தடையை விதித்தது. அத்தகைய பொருளாதாரத்தடை உள்நாட்டுக் குழப்பத்தையும் மக்கள் போராட்டங்களையும் எழச்செய்தது. அது ஈரானிய ஆட்சியாளர் மீது மக்களின் அதிருப்தியை உருவாக்குவதில் வெற்றிகண்டது. பெரும் எடுப்பில் ஈரானின் நகரங்கள் முழுவதும் மக்கள் போராட்டங்கள் நிகழ்ந்தன.

மூன்றாவது ஐ.எஸ் தாக்குதலை ஏனைய நாடுகளில் நிகழ்த்தியது போல் ஈரானின் நிலப்பரப்பில் நிகழ்த்த வழிவகுத்தது. காரணம் ஈரானியர் ஷியாக்கள் என்பதால்அத்தகைய தாக்குதலை ஐ.எஸ் நிகழ்த்தியது என்ற பிரச்சாரத்தையும் அமெரிக்கா ஏற்படுத்தியது. இது ஈரானின் இறையாண்மைக்கும் ஐக்கியத்திற்கும் விடப்பட்ட சவாலாக அமைந்தது.

நான்காவது சவுதி அரேபியாவை தூண்டிவிட்டு ஈரானுடன் ஒரு போருக்கு செல்ல முயற்சித்தது. தற்போதும் முயற்சித்து வருகின்றது. பாரியளவு இராணுவ ஆயுத தளபாடங்களை சவுதி அரேபியாவுக்கு வழங்குவதில் அமெரிக்கா கவனம் செலுத்தி வருகின்றது. ஏற்கனவே துருக்கிய தூதரகத்தில் நிகழ்ந்த படுகொலையினால் குழம்பியிருந்த சவுதி - அமெரிக்க உறவை மிக நெருக்கமாக்குவதில் சவுதியின் ஆளும் தலைமை வெற்றிகண்டது. அமெரிக்க ஆயுதங்களை கொள்வனவு செய்வதன் மூலம் தனது பாதுகாப்பினை பலப்படுத்தியதுடன் அமெரிக்க உறவையும் பலப்படுத்தியுள்ளது. இதே முயற்சியை அமெரிக்கா இஸ்ரேலூடாக மேற்கொள்ளத்திட்டமிட்டது. ஆனால் இஸ்ரேல் தனித்து ஈரானை மட்டுமல்ல மேற்காசிய இஸ்லாமிய அரசுகளை கையாள விரும்பியது. அதனால் அமெரிக்காவின் திட்டத்திலிருந்து தப்பித்ததுடன் மேற்காசிய அரசுகளைக் கையாள்வதில் தனித்துவமான கொள்கை ஒன்றினை உருவாக்கி இஸ்ரேல் செயல்பட்டு வருகின்றது.





ஐந்தாவது ஈரான் தொடர்பில் அப்பிராந்தியத்தில் ஒரு பதட்டத்தை பேணுதல் என்பதில் அமெரிக்கா தொடர்ந்தும் கவனம் சலுத்தி வருகின்றது. குறிப்பாக போர்க் கப்பல்களை அப்பிராந்தியத்தில் குவித்து வருவது கடந்த பல மாதங்களாக நிகழ்ந்து வருகிறது. ஆளில்லா விமானம் மூலம் ஈரான் உளவுபார்க்கப்படுகிறது. அண்மையில் அத்தகைய விமானம் ஒன்றினை ஈரான் சுட்டு வீழ்த்தியுள்ளது. கடந்த வாரத்தில் இப்பகுதிக்கு மேலும் ஒரு தொகுதி அமெரிக்க இராணுவத்தினை அனுப்பியுள்ளது. தொட்ர்ச்சியாக ஈரானை பதட்டத்துக்குள் வைத்திருப்பது என்பது அமெரிக்காவின் பிரதான கொள்கையாகவே மாறியுள்ளது. நிறைவாக ஹமோஸ் நீரிணையை அண்டிய பகுதியில் நோர்வே நாட்டவருக்கு சொந்தமான மசகு எண்ணெயுடன் பயணம் செய்த இரு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலை ஈரானே மேற்கொண்டதாகவும் அதற்கான ஆதாரமாக இரு விடயங்களை அமெரிக்கா வெளியிட்டுவருகின்றது. ஒன்று அண்மையில் சவுதியரேபியாவின் எண்ணெய் குழாய்கள் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதமே இந்த கப்பல்கள் மீதும் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும். இரண்டாவது கப்பலின் பாகங்களில் ஈரானியர் ஒருவர் துளையிடுவது போன்ற காட்சிப் படங்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. இது மட்டுமன்றி ஜனாதிபதி ட்ரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில் ஈரான் தான் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக ஐந்துக்கு மேற்பட்ட தடவை பதிவிட்டுள்ளார்.


அமெரிக்க அதிகாரத்தின் முழுமையான நோக்கமும் ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்வதே. ஆனால் அதனை தனித்து அமெரிக்கா நிகழ்த்தக்கூடாது என்பதில் கவனம் கொண்டுள்ளது. தெற்காசியாவிலுள்ள ஈரான் விரோத நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து தாக்குவதே தற்போதைய உத்தியாக உள்ளது. ஆரம்பத்தில் இஸ்ரேலைப் பயன்படுத்த திட்டமிட்டது. தற்போது சவுதி அரேபியாவை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் ஈரான் தொடர்பான தற்போதைய கொள்கைக்குப் பின்னால் ஒரு வலுவான காரணம் ஒன்றுள்ளது. அதாவது வடகொரியா போன்று ஈரானும் அணுவாயுத நாடாக மாறினால் அமெரிக்காவால் மேற்காசியாவை கட்டுப்படுத்த முடியாது. அது மட்டுமன்றி எண்ணெய்வள நாடுகளின் அணுவாயுத பலம் என்பது இஸ்லாம் மதத்தின் வலுவான அம்சமாகவே அமையும். இஸ்லாம் + எண்ணெய் + அணுவாயுதம் என்பன ஒன்று சேர்வதென்பது மேற்குலகத்திற்கு மிக ஆபத்தான விடயமாக அமையும். மேலும் இப்பிராந்தியத்தை முன்னிறுத்தியே அமெரிக்க வல்லரசு அந்தஸ்து முதன்மைப்படுத்தப்பட்டது. அது அரசியல் இராணுவமாக மட்டுமன்றி பொருளாதாரமாகவும் நோக்கப்பட வேண்டியது. எனவே மேற்காசியாவின் இழப்பீடு அமெரிக்காவின் எதிர்கால இழப்பீடாகிவிடும். இதனாலேயே அமெரிக்கா தொடர்ச்சியாக ஈரானை குழப்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

ஈரான் அணுவாயுதத்திற்காக யுரேனியத்தினை செறிவூட்ட ஆரம்பித்துவிட்டது என்பது அமெரிக்க புலனாய்வுத் தகவல்கள். அதனை நோக்கியே அமெரிக்க அதிகார வர்க்கம் இயங்குகின்றது. ஆனால் ஈரானின் அணுகுமுறையோ அதிக உபாயங்களால் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. ரஷ்யாவின் பலமும் இப்பிராந்தியத்தில் அதிகரித்துள்ளது. ரஷ்யா - சீனாவுடன் ஈரான் கைகோர்த்துள்ளது. சிரியாவின் அனுபவமும் அமெரிக்காவுக்கு உண்டு என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எனவே ஒரு பதட்டம் நீடிக்கும். போர் உடனடியாக நிகழ்வதற்கான புறச்சூழல் இல்லாதுள்ளது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்குவதனால் முடிவுகளைத் தலைகீழாக்கலாம். ●

> அமெரிக்க அதிகாரத்தின் முழுமையான நோக்கமும் ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்வதே. ஆனால் அதனை தனித்து அமெரிக்கா நிகழ்த்தக்கூடாது என்பதில் கவனம் கொண்டுள்ளது தெற்காசியாவிலுள்ள ஈரான் கிரேக்க நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து தாக்குவதே தற்போதைய உத்தியாக உள்ளது. ஆரம்பத்தில் இஸ்ரேலைப் பயன்படுத்த திட்டமிட்டது. தற்போது சவுதியரேபியாவை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.





# சர்வதேச அரசியலை மேற்கொள்வதற்கு தமிழ்த்தரப்பு தயாராக வேண்டும்.

-சி.அ.யோதிலிங்கம்-

ஏப்ரல் 21 ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கள் மிகப்பெரும் அரசியல் சுனாமியாகி இலங்கைத் தீவின் சகல அரசியல் செயற்பாட்டாளர்களையும் முடக்கிவிட்டுள்ளது. அரசியல் கட்சிகள் அனைத்தினதும் நிலை பூச்சியமாகி விட்டது. பழைய முறைமையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதவாறு தடுப்பு வேலி வந்துவிட்டது. அனைத்து தரப்பிற்கும் புதிய மூலோபாயங்களும் புதிய தந்திரோபாயங்களும் தேவையாகியுள்ளது.

தமிழ் அரசியலுக்கு இது இரண்டாவது காண்டம். செப்ரம்பர் 11 எவ்வாறு முதலாவது காண்டமாகி தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடிக்க வைத்ததோ அது போல் ஏப்ரல் 21 குண்டு வெடிப்புக்கள் இரண்டாவது காண்டமாகி அனைத்து தமிழ் தரப்பின் அரசியற் செயற்பாடுகளையும் பூச்சிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமல்ல மாற்று என வெளிக்கிட்டவர்களும் இன்று பூச்சிய நிலையிலுள்ளனர். மறுபக்கத்தில் அரசியல் ஆய்வாளர்கள் இந்த நிலைமையை ஆய்வு செய்து புதிய அரசியல் நிலைப்பாடுகளையும் வழி வரைபடத்தையும் முன்வைப்பதற்குப் பதிலாக எல்லாம் முடிந்து போயிற்று என்ற ஒப்பாரியையே முன்வைக்கப் பார்க்கின்றனர்.

வரலாறு ஒரு போதும் கதவுகளை முழுமையாக அடைப்பதில்லை. எங்கோ ஒரு மூலையில் செயற்படுவதற்கான கதவுகள் திறந்திருக்கும். அதனைக் கண்டு பிடித்துச் செயற்படுத்த வழிகாட்டுவதே ஆய்வாளர்களின் பணியாக இருக்க வேண்டும். கதவுகள் எல்லாம் திறக்கப்படவில்லையென்றால் சற்று லூசாக வுள்ள கதவை மெல்லத் தட்டுத்தட்டியாவது திறக்க முற்பட வேண்டும். புதிய அரசியல் சூழலில் சாதகமான புள்ளிகள் எவை? பாதகமான புள்ளிகள் எவை? என்பதை தெளிவாக அடையாளம் காணும் போதே இவற்றையெல்லாம் சாத்திய மாக்க முடியும்.

ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கள் உருவாக்கிய புதிய அரசியல் சூழல் இலங்கைத் தீவு தொடர்பான அதிகாரச் சமநிலையை அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்திற்கு சார்பாகத் திருப்பி விட்டுள்ளது. இனிக் கொஞ்சக்காலம் அமெரிக்க தலைமையிலான மேற்குலகச் சக்திகளே இலங்கையில் ஆதிக்கம் செலுத்தப் போகின்றன. ஒரு வகையில் அவை தாக்குதல் யுத்தத்தை நடத்தப் போகின்றன எனலாம். சீனா தலைமையிலான அணிக்குத் தற்காப்பு யுத்தம் தான் தற்போதைக்குரிய தெரிவு. அவ் யுத்தத்தை அதுவும் தொடங்கி விட்டது எனலாம். ஜனாதிபதியின் சீனப்பயணமும், இலங்கைக்குச் சீனா வழங்கிய அன்பளிப்பு நிதியும், பாதுகாப்பு ஒப்பந்தங்களும் அதனையே வெளிக்காட்டுகின்றன. இலங்கைத் தீவில் தனது முதலீடுகளையும், தனது பட்டுப்பாதைத் திட்டத்தையும் சீனா எப்படியும் பாதுகாக்கவே முயற்சிக்கின்றது.

அமெரிக்கத் தலைமையிலான மேற்குலக அணிக்கு அச்சுறுத்தலாக இருந்தது, பெருந்தேசிய வாதமும் அதற்கு அரசியல் தலைமையை வழங்கும் மகிந்த தரப்பும் தான். குண்டு வெடிப்புக்களோடு அத்தரப்பை அமெரிக்க அணி கட்டுக்குள் கொண்டு வந்து விட்டது என்றே கூற வேண்டும். குண்டு வெடிப்புக்களை மேற்கொண்ட முஸ்லீம் தீவிரவாதிகளோடும் மகிந்த தரப்பிற்கு தொடர்பு இருந்தது என்பதற்கான ஆதாரங்களை அமெரிக்க தரப்பு பெற்றுக் கொண்டு விட்டது என்றும் அதனை வைத்துக் கொண்டு மகிந்தர் தரப்பிற்கு பூட்டுப்போட்டுள்ளது என்றும் செய்திகள் வருகின்றன. தவிர ஐ.எஸ் இயக்கத்தின் செயற்பாடுகள் அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பதாலும், குண்டு வெடிப்பில் அமெரிக்கப் பிரஜைகளும் இறந்துள்ளதாலும் இந்த விவகாரத்தில் தலையிடக் கூடிய தார்மீக நியாயமும் அமெரிக்காவிற்கு இருக்கின்றது. இதற்கு அப்பால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கவிருக்கின்ற கோத்தபாய ராஜபக்சவின் அமெரிக்க பிரஜாவுரிமையை இலகுவாக நீக்கியதன் பின்னணியிலும் தனக்குச் சார்பன அழுத்தங்களை அமெரிக்கா கொடுத்திருக்கலாம். அமெரிக்காவின் எதிர்கால வியூகம் கோத்தபாய ஜனாதிபதியாக வந்தாலும் இலங்கைத்தீவு அமெரிக்கச் செல்வாக்கிற்குள் இருக்க வேண்டும் என்பதே!

அமெரிக்க தலைமையிலான மேற்குலக தரப்பிற்கு இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்ள இருக்கின்ற இந்தோ - பசுபிக் மூலோபாயத்திட்டத்திற்கு முழு இலங்கைத் தீவுமே தேவை. எனவே தென் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளையும் தனது செல்வாக்கின் கீழ் வைத்திருப்பதற்கான வியூகங்களிலேயே அது தற்போது கவனம் செலுத்துகிறது. மகிந்த தரப்பையும், ரணில் தரப்பையும் இணைத்துத் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியிலும் அமெரிக்க தரப்பு இறங்கியுள்ளதாக செய்திகள் வருகின்றன. ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்கு தேசிய அரசாங்கம் ஒன்று இருப்பதே அமெரிக்க நலன்களுக்குப் பாதுகாப்பானது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அமைக்கப்போகும் அரசாங்கத்தில் தேசிய அரசாங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படலாம்.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து முழு இலங்கைத் தீவையும் தனது செல்வாக்கின் கீழ் கொண்டுவர முயற்சிப்பதால் தமிழ்த்தரப்பு விவகாரங்களை அடக்கி வாசிக்கவே முற்படும். இதுதான் தமிழ்த்தரப்பு சந்திக்கின்ற முக்கிய நெருக்கடி.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தீர்க்கப்படாத பிரச்சனைகள் அப்படியே இருக்கின்றன. காணிபறிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், காணாமல் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் என்பன அப்படியே இருக்கின்றன. அவற்றில் முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கான சூழல் அண்மையில் இல்லை. நிலைமாறு கால நீதி விவகாரத்தையும் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் தற்போதைக்கு மேலே தூக்கப் போவதில்லை. மகிந்தர் தரப்பிற்கு உள்நாட்டிலேயே பூட்டுப் போட்டுள்ளதால் அமெரிக்க நலன்களுக்கு அது அவசியமாகவும் இல்லை. ஐ.எஸ் இயக்கத்தை கையாள படைத்தரப்பினர் உதவியும் தேவையாக உள்ளதால் படைத்தரப்பை பலவீனப்படுத்த அமெரிக்காவும் விரும்பாது. மறுபக்கத்தில் தமிழ்த் தரப்பிற்கு பெயரளவில் இருந்த ஜனநாயக வெளியும் தடைப்பட்டு விட்டது. இதனால் தமிழ்த் தரப்பு ஜனநாயகப் போராட்டங்களையும் அண்மைக் காலத்தில் நடத்த முடியாது.

படைத்தரப்பு வட - கிழக்கைப் பொறுத்தவரை இன்னோர் நிகழ்ச்சி நிரலை நகர்த்த முற்படுகிறது. தமிழ்த் தரப்பின் அரசியல் எழுச்சிகளை இல்லாமல் செய்வதே அந்த நிகழ்ச்சி நிரல். படை மேலாதிக்கத்தை வடகிழக்கில் நிலைநிறுத்துவதன் மூலம் இதனைப் பூர்த்தி செய்ய அது முயற்ச்சிக்கிறது. குறிப்பாக சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களை அடக்குவது தான் பிரதான இலக்கு. அரசியல் செயற்பாடுகளை அதுவும் தேர்தல் அரசியலோடு மட்டும் அரசியல் கட்சிகளுடன் இருக்கத்தக்கதான ஒரு சூழலை நகர்த்த வரும்புகிறது. தமிழ்ச் சூழலில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மாற்றம் கட்சி அரசியலுக்கு அப்பால் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் எழுச்சி தான். கடந்த மாவீரர் தினத்தை தொடர்ந்து சிறிய சிறிய குழுக்களாகவும் தனி நபர்களாகவும் அவர்கள் எழுச்சியடையத் தொடங்கியிருந்தனர். பொது அமைப்புக்கள் இணைந்து ஐக்கிய முன்னணி அமைக்கும் முயற்சிகளிலும் இறங்கியிருந்தனர். புலம் பெயர் அமைப்புக்கள் இச் செயற்பாட்டினர்களுக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தன. ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றிருக்காவிட்டால் மே 18 முள்ளிவாய்க்கால் தினம் பேரெழுச்சியாக அனுஸ்டிப்பதற்கான சூழல் தோன்றியிருந்திருக்கும். அரசியல் கட்சிகள் பொது அமைப்புக்களுக்கு பின்னால் செல்லும் நிலையே இருந்தது. இந்தப் போக்கு கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தளம் ஒன்று வளர்வதற்கான சூழலை தோற்றுவித்திருந்தது.

சிங்கள அரசியலிலும், முஸ்லீம் அரசியலிலும் ஒரு வெகுஜன மேலாதிக்கம் இருந்தது ஆனால் தமிழ் அரசியலில் அது இருக்கவில்லை. இதில் அரசியல் கட்சிகளுக்கு கடிவாளம் ஒன்றை இல்லாமல் செய்தது. ஆனால் தமிழ் அரசியலில் அண்மைக் காலமாக ஏற்பட்ட மாற்றங்கள் வெகுஜன மேலாதிக்கம் ஒன்றை நோக்கி சூழலை நகர்த்திக் கொண்டிருந்தது. இதன் வளர்ச்சி நிலையில் பொது அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் இணைத்து தேசிய அரசியல் இயக்கம் ஒன்றையும் உருவாக்கியிருக்கலாம். இந்த தேசிய அரசியல் இயக்கம் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை வலுவான கடிவாளமாக இருந்திருக்கும்.

ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கள் கொண்டு வந்த மிகப் பெரிய மாற்றம் சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் இலங்கைத் தீவை இறுக்கமாக பிணைத்தமை தான். இனி சர்வதேச நிகழ்ச்சி நிரல் செல்லுமிடமெல்லாம் இலங்கைத் தீவும் செல்வதைத்தவிர வேறு வழியில்லை. இந்நிலமை தமிழ் அரசியலையும் தவிர்க்க முடியாதவாறு சர்வதே நிகழ்ச்சி நிரலுடன் பிணைத்துள்ளது. தமிழ்த்தரப்பு இதனை விரும்புகின்றதோ என்னவோ இதுதான் இன்றைய கள யதார்த்தம். எனவே தமிழ்த்தரப்பு சர்வதேச அரசியலை நகர்த்த தயாராக வேண்டும். சர்வதேச அரசியலை நகர்த்துவது தமிழ்த்தரப்பிற்கு அதிக அனுபவம் இல்லாத புதிய விடயம்தான். ஆனால் வரலாறு இன்று அதனைச் செய்யுமாறு நிர்ப்பந்தித்துள்ளது.


இலங்கைத் தீவை மையமாகக் கொண்ட புவிசார் அரசியல் போட்டியின் அணிகள் இரண்டுதான். ஒன்று அமெரிக்கத் தலைமையிலான மேற்குலக இந்தியக் கூட்டு அணி. இரண்டாவது சீனா தலைமையிலான சீனா - பாகிஸ்தான், ரஸ்யா, வடகொரியா, ஈரான் அணி. இந்த அணிகளில் இரண்டாவது அணி தமிழ்த்தரப்பை பொறுத்த வரை பூட்டியே உள்ளது. இதனால் தமிழ்த்தரப்பு விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? முதலாவது அணியான அமெரிக்க - இந்திய அணியுடனேயே அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. தமிழ் நாடும், புலம்பெயர் மக்களும் இந்த அணிக்குள் இருப்பதும் இதனை மட்டும் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியுள்ளது. இதுதான் யதார்த்தம் என்ற நிலையில் இந்த அணியைக் கையாள்வதற்கான மூலோபாயங்கள், தந்திரோபாயங்களை உடனடியாக வகுக்க வேண்டிய தேவை தமிழ்த்தரப்புக்கு உள்ளது. இவ்வளவு காலமும் இலங்கைத் தீவில் மேலாதிக்கம் செலுத்தும் வல்லரசுகளைப் பொறுத்த வரை நடுநிலையாக இருப்பது தமிழ் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியம் என்ற கருத்தே தமிழ் செயற்பாட்டாளர்கள் மத்தியில் மேலோங்கியிருந்தது. விடுதலைப் புலிகள் அதனையே பின்பற்றினர். 2009 க்குப் பின்னர் கூட்டமைப்பின் சார்பு நிலை கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் தற்போது இப்போக்கை பின்பற்ற முடியாது.

தமிழ்த்தரப்பிற்கு சாதகமான விடயம் இலங்கைத் தீவில் மானசீகமாக இந்தத் தரப்படன் நிற்பது தமிழ்த்தரப்பு மட்டும் தான். பெருந்தேசியவாதம் மேற்குலக எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு என்கின்ற கருத்துநிலைக்கூடாக கட்டியெழுப்பப்பட்டுள்ளதால், சிங்களத்தரப்பு இந்த அணியுடன் மானசீனமாக நிற்பதற்கு வாய்ப்புக் குறைவு. பெருந்தேசிய வாதத்தின் லிபரல் பிரிவு தமது வர்க்க நலன் காரணமாக இந்த அணியுடன் நிற்க முயற்சிக்கலாம். ஆனால் பெருந்தேசியவாதம் மேலெழும் போது அதுவும் மெதுவாக கழன்று விடும். முஸ்லீம் தரப்பு இந்த அணியுடன் ஒரு போதும் நிற்கப் போவதில்லை. இதனால், இலங்கைத் தீவை தொடர்ச்சியாக செல்வாக்கின் கீழ் வைத்திருப்பதற்கு தமிழ்த்தரப்பே இந்த அணிக்கு உதவப் போகின்றது. இந்த நிலை இந்த அணியுடன் வலுவான பேரம்பேசலை நடாத்த தமிழ்த்தரப்பிற்கு உதவியாக அமையும்.

அமெரிக்க இந்திய அணியுடன் பேரம் பேசுவதற்கு தமிழ் தரப்பு வலிமையாக இருத்தல் முன்நிபந்தனையாகும். இதற்கு அகவலிமையை மட்டுமல்ல புறவலிமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அகவலிமை, அனைத்து தரப்பினரும் ஒரு குடையின் கீழ் வருவதிலேயே தங்கியுள்ளது. அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, பொது அமைப்புக்களும் ஐக்கிய முன்னணியாக ஒரு குடையின் கீழ் வரவேண்டும். அந்தக் குடை தேசிய அரசியல் இயக்கம் என்ற வடிவத்தைக் எடுக்க வேண்டும். புற வலிமை சேமிப்புச்சக்திகளையும் நட்புச் சக்திகளையும் அணி திரட்டுவதில் தங்கியுள்ளது. மலையகத் தமிழ் மக்கள், தமிழகத் தமிழ் மக்கள் உட்பட உலகம் வாழ் தமிழக வம்சாவழி தமிழ் மக்கள் தமிழ் அரசியலின் சேமிப்புச் சக்திகளாவர். சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகள். நல்ல நட்புச் சக்திகளாவர். இவ்விரு சக்திகளையும் அணிதிரட்ட வேண்டும். நிலம் - புலம் - தமிழகம் என்பவற்றிற்கிடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே இதனைச் சாத்தியமாக்க முடியும்.

இனிவரும் காலங்களில் சர்வதேச அரசியலை மேற்கொள்வதும் தமிழ் தரப்பின் முக்கிய பணியாக இருக்கும். இதற்கு தமிழ் மக்களுக்கென வெளிநாட்டுக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும். வெளிநாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இராஜதந்திர பயிற்சி பெற்ற லொபியையும் உருவாக்க வேண்டும். இது விடயத்தில் புலம் பெயர்சக்திகளுக்கு முன்னரைவிட அதிகம் பணிகள் காத்திருக்கின்றன என்றே கூற வேண்டும். இன்று தமிழ்த் தரப்பிற்கு முக்கியமான தேவை உணர்ச்சி அரசியல் அல்ல. அறிவு அரசியலே!

- மாசிலான்



# சுயநிர்ணய உரிமையே ஒற்றுமையின் இலக்காக இருக்க வேண்டும்

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை. இசுலாமியக்கட்சிகளைப் பாருங்கள், ஒரு அமைச்சரைப் பதவிவிலகுமாறு கூறியதும் அனைத்து இசுலாமிய அமைச்சர்களும் தங்களின் ஒற்றுமையைக் காட்டியுள்ளார்கள். அனைத்து அமைச்சர்களும் அமைச்சுப் பதவிகளைத் துறந்து விட்டார்கள். ஆனால் தமிழ்க் கட்சிகளிடையே தான் ஒற்றுமை இல்லை. எல்லாவற்றையும் மறந்து தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப் பட வேண்டும், என்ற குரல் இப்பொழுது பெரிதாகக் கேட்கிறது.

தமிழ்க்கட்சிகள் ஒன்றாக ஒரே குரலில் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக் குரலை ஒலிக்க வேண்டும். அதற்காக ஒற்றுமை அவசியம் என்பது பலரது விருப்பமாக வெளிவருகிறது. தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பது புதிய குரல் அல்ல. தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி 1955 இன் இறுதிப்பகுதியிலேயே ஒற்றுமைக் குரல்கள் எழுந்தன. ஒற்றுமைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் வரலாற்றுப் பதிவுகளில் உள்ளது. சில பெரியவர்கள் ஒற்றுமை முயற்சியை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த காலம்சென்ற நீதியரசர் சி. நாகலிங்கம் கியூ சி தலைமையில் மேற்கொண்டனர். இவ்வொற்றுமை முயற்சி வெற்றி பெறவில்லை. அது ஒரு தேர்தல் நேரம். அந்த ஒற்றுமைக் குரல் தேர்தலுக்கான ஒரு குரலாகவே எழுந்தது எனலாம். அவ்வொற்றுமை ஏற்படாமைக்குக் காரணமாக இருந்தது தேர்தல் தொகுதிகளை யார் யாருக்கு வழங்குவது என்பதில் மட்டும் இருந்ததே அன்றி எந்தக் கொள்கையை முன்வைத்து மக்களிடம் செல்வது அதை ஒருமித்து நாடாளுமன்றத்தில் எழுப்புவது என்பதில் இருக்கவில்லை. உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டிருந்த காலம் அது. அவ்வுரிமைகளை மீட்டெடுக்க ஒரு கொள்கையின் அடிப்படையில் தான் ஒற்றுமை ஏற்படவேண்டும் வெறுமனே நாடாளுமன்றத்திற்கு யார்? யார்? செல்வது என்ற ஒற்றுமை பலன் தராது என்று அப்பொழுது ஒரு நியாயமான குரல் எழுந்தது. இக்குரலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாததனால் அந்த ஒற்றுமை அப்பொழுது ஏற்படவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற, ஒரு அடிப்படைக் கொள்கை இன்றியமையாததாகும். இதை அரசியலில் உள்ளவர்கள் எப்பொழுது உணருவார்களோ அப்பொழுதுதான் உண்மையான ஒற்றுமை ஏற்பட வழி பிறக்கும். ஆனால் மக்கள் திரண்டு தங்களின் ஒற்றுமையைக் காட்ட முடியும். அவ்வாறான ஒற்றுமை ஓரளவு அரசியலில் ஏற்பட்டதுமுண்டு. ஆயுதப் போராட்ட காலங்களில் ஏற்பட்டதும் உண்டு. அரசியலில் 1956 இல் தமிழரசுக்கட்சியை பெருமளவு வெற்றிபெறச் செய்ததன் மூலம், தமிழ் மக்கள் தங்களின் உரிமைக் குரலை ஓரளவு ஒற்றுமையாக உலகத்துக்குக் காட்டினர் என்று சொல்லலாம். இதன் பின்னர் நடை பெற்ற அறவழிப் போராட்டங்களில் தமிழ் மக்கள் ஒற்றுமையாகத் திரண்டு பங்குபற்றித் தமது ஒற்றுமையைக் காட்டினர். சிலகட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை - பொருளாதாரப் பிரச்சினை என்றனர் வேறு சில கட்சிகள் ஒற்றை ஆட்சிக்குள், தீர்வு காணலாம் என்றனர். ஆனால் பெரும்பான்மையோர் இணைப்பாட்சி தான் வழி என்றனர். இவ்வாறான வெவ்வேறு சிந்தனை உடையவர்களை எவ்வாறு ஒற்றுமைப் பட வைக்க முடியும். எனவே மக்களின் ஒற்றுமை தான் மிக மிக முக்கியமான ஒற்றுமையாகும்.ஆனால் இங்கேயும் பிரச்சினைகள் எழுந்தது தான் வரலாறாகும்.

முதலில் தமிழ்க் காங்கிரசு தமிழினத்தின் தனிப்பெரும் கட்சியாக இருந்தது.பின்னர் தமிழரசுக்கட்சி அந்த இடத்திற்கு வந்தது. 1970 நாடாளுமன்றத் தேர்தலில் சிறிமாவோ புதிய அரசியல் யாப்பினைக் கொண்டு வருவதற்காக மக்களின் ஆணையைப் பெற்று பெரு வெற்றி ஈட்டினார். இதன் எதிரொலியாகத் தமிழ் மக்களின் ஒற்றுமை மீண்டும் எழுப்பப்பட்டுத் தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டது. பின்னர் 1972 இல் புத்த சிங்களக் குடியரசாக இலங்கைத் தீவை ஆக்கிய குடியரசு யாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க ஒற்றுமை வலியுறுத்தப்பட்டுத் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலை கூட்டணியாக மலர்ந்து "தமிழீழ விடுதலை தான் ஒரே வழி" என்று 1976 இல் வட்டுக் கோட்டையில் நடந்த முதலாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.தமிழினம் ஒன்று பட்டுவிட்டது என்று மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் இரு பெரும் தலைவர்களான தந்தை செல்வாவும் ஜி ஜி யும் அடுத்தடுத்து காலமானதால் அந்த ஒற்றுமை நிலைத்து நிற்கவில்லை. 1977 நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியைப் பெருவெற்றி பெறச் செய்தனர். ஆனால் தவிகூ தான் மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழியை மறக்கத் தொடங்கியது. அதே நேரம் த வி கூவில் இருந்து தமிழ்க் காங்கிராசு மீண்டும் பிரிந்து கொண்டது. தவிகூ மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு தனது இலட்சியத்தை முடக்கிக் கொண்டு மக்களை ஏமாற்றியது.

இந்தக் காலகட்டத்தில் தான் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு போராடப் புறப்பட்டனர். இதிலேயும் பல பிரிவுகள் தோன்றின. இளைஞர்களைப் பிரித்துத் தனது வஞ்சக வலைக்குள் வைத்துத் தனது நலன்களைப் பேண இந்தியா முயற்சி செய்து வெற்றியும் கண்டது. ஆக விடுதலைப் புலிகள் மட்டுமே அந்த வலைக்குள் சிக்காமல் ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காக உழைத்தனர்.மக்கள் திரண்டு தங்கள் ஆதரவை அவர்களுக்குக் கொடுத்தார்கள். நம்பிக்கையுடன் அவர்களைத் தொடர்ந்தார்கள். முள்ளி வாய்க்கால் வரை மக்கள் அவர்களைத் தொடந்து கொண்டே இருந்தார்கள். அவர்களின் மேல் ஒரு நம்பிக்கை மக்களுக்கு இருந்தது. அந்த நம்ம்பிக்கையைச் சர்வதேச சதியும் இந்தியநாட்டின் சதியும் இணைந்து செங்குருதி ஆறாக ஓடவைத்து . இலட்சக்கணக்கான உயிர்ப் பலியுடன் முடிவுக்குக் கொண்டு வந்தனர். விடுதலைப் போராட்ட ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழினத்தின் குரலாக இருந்த நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தனது குரலை மாற்றத் தொடங்கியது.விடுதலைக்கா எனப் புறப்பட்டவர்கள் மாவட்டசபையை வழிமொழிந்ததன் மூலம் இளைஞர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தார்கள். 1983 தமிழினத்தின் மீதான இன அழிப்புக்குப் பின்னர் தமிழீழம் கேட்பது தடை செய்யப்பட்டாலும் தங்களின் தொடக்க நிலையான சமஷ்டியை வலியுறுத்துங்கள் அதை ஜே ஆர் ஏற்கமாட்டார் என்று உலகிற்குக் காட்டலாம் என்று போராளிகள் கூறியதை செவிமடுக்காத தவிகூ ஆட்சிப்பகிர்வை விடுத்து அதிகாரப் பகிர்வைப் பேசியது.இது தமிழினத்தை முற்றிலும் ஏமாற்றிய செயலாகவே நோக்கப்பட்டது. இது எதைக் காட்டுகிறது என்றால் ஒற்றுமை ஒற்றுமை என்று யாவரும் வலியுறுத்தினாலும் தாங்கள் தான் பெரிய கட்சி தாங்களே முடிவுகளை மேற்கொள்வோம் என்ற மன நிலை தமிழினத்தைப் படு குழிக்குள் தள்ளிவிட்டது என்பதைக் காட்டியது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் 2004 இல் ஒரு ஒற்றுமை அரசியல் கட்சிகளிடையே உருவாக்கப்பட்டது. தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரசு மற்றும் ஆயுதக்குழுக்கலாக இருந்த புளொட், டெலோ, ஈபி ஆர் எல் எப் ஆகியனவற்றை இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் அது அமைக்கப்பட்டது. எதுவித பிளவுகளும் இன்றி இரண்டாயிரத்து ஒன்பது வரை பயணித்த அக்கூட்டணி முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்குப் பின்னர் சிதைக்கப்பட்டது.


ஆயுத மௌனிப்பிற்குப் பின்னர் சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் வந்தது..முள்ளிவாய்க்காலில் ஓடிய குருதி ஆறு காயுமுன்னர் இத்தேர்தல் வந்தது. தமிழ் மக்களை நாம் வெற்றி கொண்டுவிட்டோம் என்று கூறி மகிந்த ராஜபக்சா தேர்தலைச் சந்தித்தார். இவரை தேர்தலில் சந்திக்க முடியாத ரணில் இராணுவத் தளபதியாக இருந்து போரை நடத்திய சரத் பொன்சேகாவை மகிந்தருக்கு எதிராகப் போட்டியிட வைத்தார். இங்கே தான் ததேகூ தனது உண்மையான முகத்தைக் காட்டியது. விடுதலைக்கான போரை நடத்திய தமிழினம் இலட்சக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்த தமிழினம் இத் தேர்தலைப் புறக்கணித்திருக்க வேண்டும். உலகத்திற்கு ஒரு செய்தியை சொல்லியிருக்க வேண்டும். எம்மை எப்படியெல்லாம் சித்திரவதை செய்தாலும் கொன்று குவித்தாலும் எழுத்து உரிமைகள் தான் முதன்மையானது எனவே நாம் தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று முடிவெடுத்திருக்க வேண்டும்.அதில் ஏதாவது சிக்கல்கள் இருந்திருந்தால் தமிழ்மக்களுக்குச் சுய நிர்ணய உரிமைதான் வேண்டும் என்று போட்டியிட்ட விக்கிரமபாகு கருணாரத்தினாவை ஆதரித்திருக்க வேண்டும். ஆனால் போரை நடத்தி வெற்றிகண்டவர் தான் தன எனப் போட்டியிட்ட இருவரை ஆதரித்ததன் மூலம் தமிழினத்தை படு குழிக்குள் தள்ளிவிட்டனர் ததேகூவினர்.இதற்கு 'வெளிநாட்டுச் சக்திகளும் இந்தியாவுமே காரணமாகும். வெளிநாடுகளின் நலத்தைப் பாதுகாக்கத் தமிழினத்தின் நலனைப் புறந்தள்ளிவிட்டனர் ததேகூவினர். இதே போன்று தான் அடுத்தடுத்து வந்த தேர்தல்களிலும் அவர்கள் நடந்து கொண்டனர். இப்பொழுது நிதானத்துடன் நடந்துகொள்ளாமல் மைத்திரியை ஆதரித்து விட்டோம் என்று புலுடா விடுகின்றனர். ஏனெனில் அடுத்த தேர்தலுக்கு அவர்கள் தயாராகி வருகின்றனர் என்பதே உண்மையாகும்.

இரண்டாயிரத்து பத்தில் இவர்கள் எடுத்த தவறான முடிவு சிறு பிளவைத் தான் ததேகூவில் ஏற்படுத்தியது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுயநிர்ணய உரிமையை நாம் விட்டுவிடக்கூடாது என்று கூனார். அதைத் ததேகூ ஏற்றுக்கொள்ளத் நிலையில் அவர் அதிலிருந்து விலகிக் கொண்டார்.ஆனால் அது பெரிய விரிசலாகத் தென்படவில்லை. ததேகூவைத் தலைவர் பிரபாகரனே அமைத்தவர் என்பதும் வீட்டுச் சின்னமும் மக்களிடத்திலொரு பிடிப்பை ஏற்படுத்தியிருந்ததை பரப்புரைகளில் கூறி வெற்றியைப் பெற்றனர் ததேகூவினர். ஆனால் காலம் செல்லச் செல்ல மக்கள் யதார்த்தத்தை புரிந்துகொள்ளத் தலைப் பட்டுள்ளனர். இந்நேரம் மீண்டும் ஓர் உருமைக்குரல் எழும்புகிறது ஆனால் அதற்கிடையில்கூட்டமைப்புக்கு எதிராக எழும் மக்களை பிரிக்கவும் பிளவு படுத்தவும் இந்தியா தனது ஆதரவுச் சக்திகளைப் பயன்படுத்தி பல முனைகளில் செயற்பட்டு வருகிறது.ததேகூ விற்கு எதிரான மக்கள் ஆதரவு பிளவுபட்டால் ததேகூ வெற்றி அடையும் அதனை வைத்துக்கொண்டு தனது நலனை நிலைநாட்டலாம் என்பது தான் இந்தியாவின் திட்டமாகும். அதற்குத் தமிழினத்தின் உரிமைகள் மீது எந்த அக்கறையும் இல்லை என்பது தெளிவாகும்..

தமிழினம் ஒற்றுமைப்பட வேண்டுமானால் -அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டுமானால் தன்னுடைய அணியில் வந்து சேருங்கள் என்றோ தமது அமைப்புத்தான் பெரியது வந்து சேருங்கள் என்று இருக்காமல் ஒரு பொது அடிப்படைத்திட்டத்துடன் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்தக் கூடிய திட்ட வரைவைத் தயாரித்து அதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்கவைத்து ஒரு ஒற்றுமைக் கூட்டணியை ஏற்படுத்தினாலே பயன் கிடைக்கும்..கட்சிகள் சேர்வதும் பின்னர் பிரிவதும் வெளிநாட்டின் ஆலோசனைக்கு அமைவாக நடப்பதும் இனத்தின் உரிமைகளைப் பெற்றுத்தரா. எனவே கட்சிகளை முன்னிறுத்தாமல் தமிழினம் ஓரணியில் நிற்கவேண்டும் என்பதே மக்களின் முடிவாகும். இதேநேரம் தமிழினம் மட்டும் ஒற்றுமைப்பட்டால் போதுமா? என்ற வினாவும் இங்கு எழுகிறது.இது பற்றி முனைவர் அமீர் அலி (மேர்டொக் பல்கலைகழகம் மேற்கு அவுஸ்திரேலியா) எழுதிய கட்டுரை ஒன்று தினக்குரலில் வந்துள்ளது.மிகவும் பயனுள்ள கட்டுரை அது. அதிலிருந்து ஒரு சிறு பகுதி இங்கே.

"நாட்டின் மூன்று சிறுபான்மை இனங்களும் (அவர் தாயகத் தமிழ் மக்கள், இசுலாமிய மக்கள் மலையகத் தமிழ் மக்களைக் குறிப்பிடுகிறார்). ஒற்றுமையின்றி ஒருவர் மற்றவரைக் காட்டிக்கொடுக்கும் மன நிலையில் வாழ்கின்றனர் என்பது பேரினவாதிகளுக்கு நன்கு தெரியும். அந்த வேற்றுமையைத் தொடர்ந்து வளர்ப்பதற்கு அவர்கள் தம்மாலான எல்லா முயற்சிகளையும் எடுப்பார். எனவே பேரினவாதத்தை முறியடிக்க வேண்டுமாயின் முதலில் செய்ய வேண்டியது மூன்று சிறுபான்மையினரும் ஏதோ ஒரு குடையின் கீழ் ஒன்று திரள வேண்டும். இது காலத்தின் கட்டாயமென நான் ஏற்கனவே சுட்டிக்காடியுள்ளேன். தமிழர்களும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல்வாழ்கிறோம் என மேடைகளில் பேசிவிட்டு முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு பேரினவாதி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கையில் அதற்கு ஆதரவு காட்டுமாறு தமிழ்த் தலைவர் ஒருவரும் உண்ணாவிரதமிருப்பது எந்தச் சூழலில் அவித்த பிட்டால் விழைந்த வினையோ? இதுவரை ஓர் உறவில் வாழுகின்ற இவ்விரு இனங்களும் இனியாவது ஆழ உறவோடு வாழ்வதற்கு வழிவகைகளைத் தேட வேண்டும். இத்தனை இடர்களுக்குப் பிறகும் இனிமேலும் உங்களால் இணைய முடியவில்லை என்றால் வருங்காலம் சிறுபான்மையினருக்கு இருள் படிந்ததாகவே இருக்கும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"

என்று அவர் நீண்ட கட்டுரையில் பதிவிட்டுள்ளனர். இது ஓர் ஆழமான பார்வையாகும். ஒற்றுமை மலருமா?.




# தொடரூந்துப் பாதையருகே தொடரும் காத்திருப்பு...

ரயிலின் பயணங்கள் ரம்மியமானவை. அதிலும் ஜன்னலோரம் அமர்ந்து பயணிக்கையில் கடந்து செல்லும் இயற்கையும், வளைந்து நெளிந்து செல்லும் சாலையும் பார்ப்பதற்கே கொள்ளையழகு. இத்தனையையும் ரசிக்கும் எங்களில் எத்தனை பேர் ரயிலின் பாதையோரங்களில் வசிக்கும் மக்களைப் பற்றிச் சிந்தித்திருக்கிறோம்!. தண்டவாளங்களுக்கு அருகே தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இவர்கள் ஒரு விபத்துக்குரிய சூழ்நிலையிலேயே தமது வாழ்க்கையை நகர்த்துவதாகக் காணப்படுகிறது. பல சவால்களுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்களின் வாழ்க்கை போராட்டமாகவே மாற்றம் பெற்றுள்ளமையை நேரில் சென்று

கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கும் மேலாக அந்த இடத்தில் வாழ்ந்து வருபவர்களுக்கு அந்த நிலம் சொந்தமில்லை. அவர்களுக்கென சொந்தமாகக் காணிகளற்ற நிலையில் புகையிரத நிலையத்துக்குச் சொந்தமான காணிகளிலேயே இத்தனை காலமும் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு வந்திருக்கின்றனர்.

இது குறித்து அங்கு வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் பேசும்போது, "எத்தனையோ வருசமா நாங்கள் இதிலை இருக்கிறம். நான் பிறந்ததே இங்கதான். அப்பவும் அரசாங்கம் இயங்கினது தானே... அதிகாரியளும் இருந்தவர்கள் தானே? அந்த அரசாங்கத்துக்கும், அதிகாரிகளுக்கும் இதாலை ரெயின் ஓடப்போகுது எண்டு தெரியாதோ?... இப்ப புதுசா வந்து எழும்புங்கோ எண்டால் நாங்கள்



பார்த்தபோது காணக்கூடியதாக இருந்தது. இப்படியான நெருக்கடிமிக்க வாழ்வியலை அனுபவித்து வருபவர்கள் வேறுயாருமல்ல யாழ்ப்பாண நகரத்துக்கு அருகாமையிலுள்ள கொக்குவில் புகையிரத நிலையத்தை அண்மித்து வாழும் மக்களே.

அண்ணளவாக 20 குடும்பங்களைக் கொண்ட குடியிருப்பு அது. அடிப்படை வசதிகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாத சூழ்நிலையிலேயே இந்தக் குடியிருப்பு காணப்படுகிறது. இந்த புகையிரத நிலையத்தைக் கடந்து செல்லும் புகையிரதங்களில் இருந்து வெளிவரும் சத்தமும், புகையும் சூழலை மாசுபடுத்திவிடுகிறது. வறுமையும் இவர்களைத் துரத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் தமது வாழ்க்கையுடன் போராடியபடி அதனை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

எழும்பி எங்க போறது? குடியேறேக்கயே வந்து எங்களுக்கு இதை விளங்கப் படுத்தி இதைத் தடுத்திருக்கவேணும், எங்களுக்கு அப்ப குடும்பக்காரர் தந்திருக்கக் கூடாது. அப்ப அதை எல்லாம் செய்யாமல் விட்டுட்டு இப்பவந்து எழும்பச் சொன்னா நாங்கள் எழும்பிப் போய் கோயில்களியையும், பள்ளிக் கூடங்களியையுமா இருக்கிறது? நாங்கள் போகமாட்டம் எண்டு சொல்லேல்லை. எங்களுக்கு ஒரு மாற்று வசதியை அரசாங்கம் செய்து தரவேணும்." எனத் தமது அவல நிலையைக் கூறி சலித்துக் கொண்டார்.

ரயிலில் பயணம் செய்வதற்காகச் சில நொடிகள் மட்டுமே அந்த ரயில் நிலையத்தில் காத்திருக்கும் பயணிகளுக்குக் கூட, மழை பெய்தால் நனையாமல் பாதுகாப்பாகத் தம் பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக மேடைகளும், கொட்டகைகளும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வாழ்நாள் முழுவதும் இக் குடியிருப்பிலேயே வாழும் மக்கள், மழைக் காலங்களில் பாதுகாப்பற்ற குடிசை வீடுகளினுள் ஒழுகும் மழை நீருடன் போராடியே வாழ்நாளைக் கழிக்க வேண்டி இருக்கிறதாக அவர்கள் கவலை தெருவிக்கிறார்கள். அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் தகரங்களாலும், ஓலைகளாலும் வேயப்பட்ட குடிசை வீடுகளிலேயே தம் வாழ்நாளைக் கழித்து வருகின்றதைக் கணக்கூடியதாக இருக்கிறது.

அத்துடன் இக்குடியிருப்பில் வாழும் மக்கள் தமக்கான காலைக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரவுப் பொழுதுக்காய் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இங்குள்ள பெரும்பாலானவர்களின் வீடுகளில் மலசலகூட வசதி இல்லை. அதன் காரணமாக பொழுது சாய்ந்து, ஆள் நடமாட்டம் குறைவடைந்த பின்னர் புகையிரத பாதைகளிலும், பாதையோரங்களிலுமே தமது காலைக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். பகலில் தாம் குடியிருக்கும் காணிகளின் பின் சிறு குழிகளை வெட்டித் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்பவர்களும் உண்டு. இதனால் இங்கு வாழும் மக்கள் சுகாதார சீர்கேடுகளால் அதிகளவில் நோய்களுக்கும் உட்படுகின்றனர். அத்தோடு இங்குள்ள ஒரு சில வீடுகளில் மட்டுமே கிணறுகள் உண்டு. அதனால் தண்ணீர் பிரச்சினைக்கும் அவர்கள் முகங்கொடுத்து வருகின்றனர். இக்குடியிருப்பில் வாழும் பெண்கள் வீட்டு வேலைகளுக்கும், ஆண்கள் கூலித் தொழில்களுக்கும் செல்வதோடு, இருபாலாரும் சமூக சுத்திகரிப்புத் தொழிலுக்கும் (Social Cleaning Service) செல்வதைக் காணலாம்.

இந்தக் குடும்பங்களில் உள்ள சிறுவர்களில் சிலர் மட்டுமே பாடசாலை செல்கின்ற நிலையில், அதிகமானவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவதோடு, குடும்ப வறுமை காரணமாக பிறழ்வு நடத்தைக்குள் தள்ளப்படும் சூழ்நிலையும் அண்மைக் காலங்களில் உருவாகி வருவதையும் அவதானிக்க முடிகின்றது. யுத்தத்தின் பின்னர் "ரயில் சேவையை ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டிய அரசியல் பிரமுகர்கள் பலர், தேர்தல் காலங்களில் மட்டும் தமது வீடுகளைத் தேடி வந்து தமக்கான நிரந்தர வாழ்விடங்களை அமைத்து தருவதாக வாக்குறுதிகளை வழங்கி விட்டுச் சென்ற போதும், தேர்தல் முடிவடைந்த பின்னர் தம் அவலத்தைக் கண்டும் காணாமல் பராமுகம் காட்டியே வருகின்றனர்" என அந்தக் குடியிருப்பு மக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.


ஒட்டு மொத்தத்தில் தென்னிந்திய திரைப்படங்களில் காண்பிக்கப்படும் சேரிப்புற வாழ்வு போன்றதான வாழ்வை சகித்துக் கொண்டு பயணிக்கும் இந்த மக்களின் வாழ்வில் வசந்தம் என்பது மாயையாகிப் போய் விடக்கூடாது. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. எல்லா தேர்தல்களிலும் அவர்களது வாக்குகளும் எண்ணப்பட்டே வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுகின்றார்கள். அப்படி வெற்றி கொள்பவர்கள் இந்த மக்களுக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? அடுத்த தேர்த்தல் வரும்வரை இவர்கள் காத்திருக்க வேண்டுமா? ■

- இ.கம்ஸினி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

புதிய எழுத்தாளர்களைப் பத்திரிகை உலகத்துக்கு அறிமுகப் படுத்தும் முயற்சியில் தீம்பம் வெற்றிகண்டுள்ளது. பல புதிய ஆரோக்கியமான இளம் எழுத்தாளர்களின் உள்வாங்கல்களுக் கூடாக தர்ம புஷ்டியுள்ள ஊடக நெறிமுறைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு முடியும் எனத் தீம்பம் நம்புகிறது. அவர்களுடனான தொடர்புகளை பேணிக் கொள்வதோடு மட்டுமல்லாது அவர்களது ஆக்கங்களை உள்வாங்கிக் கொள்வதற்காகப் பல மணி நேரத்தைச் செலவிட்டுக் கொள்ளுகிறோம்.


ஈழத்தமிழ் ஊடகத்துறையில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தக் கூடியவாறான நம்பிக்கையை அவர்கள் தருகிறார்கள்.


[ஆசிரியர்]





# வீட்டுத்திட்ட குழறுபடிகள்





**வன்னியான்**

இறுதிப் போர் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்கள் பலர் நிரந்தர வீட்டுத்திட்டம் இல்லாமல் தற்காலிக குடிசைகளில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த மக்களைப் பற்றி சிந்திக்காத சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் குறித்த பிரதேசங்களில் வசிக்காத அரச அலுவலர் குடும்பங்களுக்கும் தமக்கு தேவையானவர்களுக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்கியுள்ளனர். இந்த வீடுகள் இன்று எவருமே குடியேறாமல் பூட்டிக் கிடக்கின்றமை கவலை தரும் விடயமாகும்.

மீளக்குடியேறிய மக்கள் வீடு இல்லாமல் தவிக்கும் போது பயனற்றவர்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்கியதன் காரணம் என்ன? முறைகேடுகள் இடம்பெற்றிருக்கலாம் என்று மக்கள் எதிர்வு கூறுகின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது மீண்டும் அரச அலுவலர் குடும்பங்களுக்கு மேலும் வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு. வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 2012ஆம் ஆண்டு அரை ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டு ஒரு லட்சம் ரூபா மானியமாகவும் 2 லட்சம் ரூபாய் கடன் அடிப்படையிலும் வழங்கப்பட்டு அரச உத்தியோகத்தர்கள் 50 பேருக்கான வீடுகள் அமைக்கப்பட்டன.

குறித்த பகுதியில் வீடுகளை அமைத்து அங்கு குடியேறும் அரச உத்தியோகத்தர்களுக்கான மின்சார வசதி, வீதி வசதிகள், குடிநீர் வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்ட நிலையிலும் குறித்த இடத்தில் இன்று வரை ஒரு குடும்பம் கூட குடியேறவில்லை.

இந்நிலையில் குறித்த வீடுகள் அனைத்தும் பத்தைகள் மூடி காடாக காட்சியளிப்பதோடு அந்தப் பகுதியில் பல்வேறு சமூக விரோத சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த வீட்டுத்திட்டத்தில் மக்களை குடியேற்றுமாறு பல தடவைகள் மாவட்ட மட்டங்களில் பிரதேச மட்டங்களில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தெரிவித்தும் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை.

குறித்த பகுதியில் வீட்டு திட்டத்தை பெற்றுக் கொண்டவர்கள் பலர் இரண்டாவது தடவையாகவும் வேறு இடங்களில் அதாவது முல்லைத்தீவு மாவட்டத்திலேயே வீட்டுத்திட்டத்தை பெற்றுக் கொண்டு அந்த இடங்களில் குடியேறி இருக்கிறார்கள்.

மக்கள் வீட்டுத் திட்டத்தைப் பெறமுடியாத நிலை இருக்கின்ற போதும் அரசினுடைய சலுகைகளை இரண்டுமுறை பெற்றுக்கொண்ட அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறித்த வீட்டுத்திட்டம் எந்தப் பயன்பாடு மற்ற நிலையில் இரண்டாவது வீட்டையும் பெற்ற அதிகாரிகளிடமிருந்து குறித்த வீடுகளை மீளப்பெற்று வீடு இல்லாதவர்களுக்கு வழங்கவோ அல்லது அவர்களை குடியிருத்தவோ எந்த ஒரு அதிகாரிகளோ மாவட்ட அபிவிருத்தி-குழுவோ இதுவரை ஒரு தீர்க்கமான முடிவுகளை எடுக்கவில்லை என்பது கவலை தரும் விடயமாகும்.

இது இவ்வாறு இருக்க துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நந்தகுமார் நகர் மாதிரி கிராமத்தில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் அரசு அலுவலர்களுக்கென வழங்கப்பட்ட வீடுகள் பூட்டிய நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அதேபோன்று மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வடகாடுப் பகுதியில் அமைக்கப்பட்ட கைலாய வன்னியன் மாதிரிக் கிராமம் பண்டார வன்னியன் மாதிரிக் கிராமம் ஆகிய இரண்டு கிராமங்களிலும் அமைக்கப்பட்ட வீடுகளில் அரசஉத்தியோகத்தர்களின் வீடுகள் பூட்டப்பட்ட நிலையில் இன்றும் காணப்படுகின்றன.

இவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு அமைக்கப்படுகின்ற வீடுகள் தொடர்ச்சியாக பயன்பாடற்று கிடக்கின்ற நிலையில் இப்போது புதிதாக ஏ9 வீதிக்கு அருகே மாங்குளத்தில் அரச வீட்டு திட்டத்தை கொண்டு வருவதற்காக அரசு அதிகாரிகள் மும்முரமாக முயற்சித்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இன்று வரை இவ்வாறு மக்கள் குடியிருக்காத அரச உத்தியோகத்தர்கள் குடியிருக்காத வீடுகளில் மக்களை குடியமர்த்த முடியாத அதிகாரிகள் புதிதாக அரச உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்டு வீட்டுத்திட்டம் அமைப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இந்த வீட்டுத்திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் ஏ9 வீதியின் பிரதான வீதிக்கு அருகில் காணிகளைப் பிடிப்பதற்காகவா இந்த வீட்டுத் திட்டத்தை பெற்றுக் கொள்கிறார்கள் என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

வீட்டுத் திட்டங்களை அமைப்பது பல இடங்கள் இருக்கின்ற போதும் ஏ-9 வீதியை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த வீட்டுத் திட்டத்தை அரச உத்தியோகத்தர்களுக்கு என அமைப்பதானது பனிக்கன்குளம் வீட்டுத்திட்டம் போன்று ஏனைய வீட்டுத் திட்டங்கள் போன்ற ஒரு நிலைமைக்கு கொண்டு செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளமையினால் இந்த வீட்டுத் திட்டத்தை நிறுத்தி உரிய இடங்களில் பொதுமக்களோடு சேர்த்து வீட்டுத் திட்டங்களை வழங்குமாறும் கேட்கப்படுகிறது.

இவ்வாறு வழங்குவதால் பல்வேறு சிக்கல் நிலைமைகள் தோற்றம் பெறும் எனவும் தொடர்ச்சியாக இந்த வீட்டுத்திட்டத்திற்கு அதிகாரிகளை துணை போகாது ஏற்கனவே வழங்கப்பட்ட வீடுகளில் அதிகாரிகளை குடியேற்றி அதன் பின்னர் படிப்படியாக ஏனைய இடங்களுக்கு செல்லுமாறு மக்கள் கூறுகின்றனர் இருப்பினும் மக்களுடைய எந்த கோரிக்கையையும் செவிசாய்க்காது புதிதாக வீட்டுத் திட்டத்தை அமைத்து எ-9 வீதியோரத்தில் காணிகளை பெறுவதற்காக சில தரப்புக்கள் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

எனவே இவ்வாறான ஒரு நிலைமையில் இருந்து குறித்த பகுதியில் நிரந்தரமாக வாழ்கின்ற மக்களுக்கு கூட எதிர்காலத்தில் அரச திணைக்களங்கள் அவ்விடத்தில் வர இருக்கின்றது என்று காணிகளை வழங்காத பிரதேச செயலகமும் மாவட்ட செயலகமும் தற்போது அரசு அதிகாரிகளுக்கு குறித்த இடத்தில் காணியை வழங்கி வீட்டுத்திட்டம் வழங்குவதன் உத்தி என்ன என்பது தொடர்பான குழப்ப நிலையில் மக்கள் இருக்கின்றார்கள்.

எனவே குறித்த வீட்டுத் திட்டம் நிறுத்தப்பட்டு உரிய முறையில் ஏற்கனவே வழங்கப்பட்ட வீடுகளை பாவனை உள்ளதாக மாற்றிவிட்டு புதிதாக வேறு ஒரு இடத்தில் அவர்களுக்கு தேவையாயின் அந்த வீட்டுத் திட்டங்களை வழங்குமாறும் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்ய வேண்டாம் எனவும் மக்கள் கோரி நிற்கின்றனர்.

புதிதாக மாங்குளம் பனிக்கன்குளம் எல்லையில் அமைக்கப்படும் அரச வீட்டுத்திட்டம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு சமூக நலனில் அக்கறை கொண்ட பாதிக்கப்பட்ட பகுதி மக்களிடம் இருந்து கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

மேற்படி விடயம் தொடர்பாக பனிக்கன்குளம் மாங்குளம் கிராமங்களின் எல்லைப் பகுதியில் அரச புதிதாக அரச உத்தியோகத்தர்களுக்கான 29 வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு வீடுகள் அமைப்பதற்கான காடுகள் வெட்டும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இந்த விடயத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக பலரிடமும் சுட்டிக்காட்டி இந்த விடயங்களை நிறுத்துமாறு கோரியும் இது தொடர்பான எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது திட்டமானது அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அரச உத்தியோகத்தர் வீட்டுத் திட்டம் தொடர்பில் சில விடயங்களை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

மாங்குளம் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவர்கள் 26 குடும்பங்கள் பிரதேசத்தில் காணி அற்றவர்களாகவும் வீடு அற்றவராகவும் வசித்து வருகின்றார்கள். அதே போன்று பனிக்கன்குளம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் பலர் காணி கோரிய போதெல்லாம் காணிகள் வழங்குவதற்கு முன்னர் இருந்த கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் இடையூறுகளைக் கொடுத்து தாய் தந்தையின் பெயரில் இருந்த சிறிய காணித்துண்டுகளிலேயே வீடுகளை அமைக்க அனுமதி அளித்து பொருத்தமில்லாத இடத்தில் வீடுகளை அமைத்துள்ளனர். அப்போதெல்லாம் காணி வழங்க மறுத்த அரச இயந்திரங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு வழங்க மாத்திரம் எவ்வாறு ஏ -9 பிரதான வீதி ஓரம் காணி விடுவிக்கப்படுகிறது

குறித்த பகுதியில் நகரமயமாக்கல் திட்டத்தின் கீழ் வடமாகாண திணைக்களங்கள் உள்ளடங்கலாக காணிகளை ஒதுக்கி வனவள திணைக்களத்திடம் இருந்து விடுவித்து எவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்க முடியும் என்றால் ஏன் கிராமத்திலேயே பிறந்து வளந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். கிராமத்தவர்களுக்கு ஏன் காணிகள் வீடுகள் வழங்கவில்லை. சில அதிகாரிகளின் முயற்சியில் இவ்வாறு திட்டமிட்டு வீடமைப்பு இடம்பெறுவது தொடர்பில் ஒரு நடவடிக்கையை தங்களிடம் எதிர்பார்க்கிறோம்.

இவர்களை பாவனையற்று கிடக்கும் பனிக்கன்குளம் வீட்டுத்திட்ட பகுதியில் மக்களையும் அரச உத்தியோகத்தரையும் இணைத்த வகையில் குடியேற்றமுடியும் இதனால் காடழிப்பும் இடம்பெறாது எனவே இந்த விடயத்தில் தங்களது காத்திரமான நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறெல்லாம் இருக்கும் போது புதிதாக அரச உத்தியோகத்தர்களை மட்டும் இலக்காகக் கொண்டு புதிதாக காடழித்து ஒரு வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது எங்களுக்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. எனவே குறித்த விடயத்தை மீள்பரிசீலனை செய்து இந்த வீட்டுத்திட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்ற அடிப்படையில் உங்களைப் பணிவாக வேண்டி நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.




# பாடங்கள் படிப்பினையாகிறது

துன்னாலைச் செல்வம்

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அருகில் திரண்ட பெருந்திரளான முஸ்லிம் மக்கள் முன்பு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நிலைமை போல் தமக்கும் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

சிறார்கள், பெண்கள் எனப் பலர், கடும் வெயிலுக்கு மத்தியில் கைதுசெய்யப்பட்டுள்ள தமது உறவுகளை பார்வையிடுவதற்காகப் பல மணி நேரம் காத்திருந்தனர். போராட்ட காலங்களில் தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இன்றும் அவர்கள் விடுவிக்கப்படாத தனால் அவர்களின் உறவுகள் அவர்கள் விடுதலைக்காகக் காத்துக்கிடக்கின்றனர். அதேபோல் முஸ்லிம் மக்களுக்கும் இன்று அந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், ஒவ்வொரு உறவினர்களாக உள்ளே செல்ல அனுமதி வழங்கிக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். கைது என்பது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தமிழர்களுக்கு மட்டும் அல்ல முஸ்லிம் மக்களுக்கும் பெருந்துயரை ஏற்படுத்தியிருப்பதை இக் கைதுகள் வெளிக்காட்டி இருக்கின்றன.

தமது உறவைத் தேடி வருகை தந்த கம்பளை பகுதியைச் சேர்ந்த வசீர் அஹமத், பிபிசி தமிழுக்கு கருத்து தெரிவிக்கும் போது

தனது சகோதரர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் குற்றமற்றவர் என 12 நாட்களுக்கு முன்னர் அதிகாரிகள் தெரிவித்த போதிலும், இன்று வரை அவர் விடுவிக்கப்படவில்லை. தனது சகோதரர் மாத்திரமன்றி, பல அப்பாவி முஸ்லிம்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலைக்கொண்ட பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு முன்னர், அரசியல் சதிகளை முதலில் ஒழிக்க வேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து இனங்களும், இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழ்வதே சிறந்தது என்ற நிலைப்பாட்டில் தாம் இருப்பதாகவும், அவ்வாறான நிலைப்பாட்டிலுள்ள தம்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அடையாளத்தை ஏற்படுத்தித் தமிழர்களைத் தாக்கியவர்கள், இன்று பயங்கரவாதிகள் என்ற பெயரில் முஸ்லிம்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

எந்தவித குற்றமும் இழைக்காத நிலையில், தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த அப்பாவி முஸ்லிம் மக்களை விடுவிக்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வசீர் அஹமத் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது, பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு, இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதேபோல்



கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கை மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து முஸ்லிம் மக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவசர கால சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

யுத்தம் மௌனித்த பின்னர் ரத்து செய்யப்பட்டிருந்த அவசரகால சட்டம், இந்த பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் உடன் அமுல் படுத்தப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல முஸ்லிம்கள் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, குறித்த பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 77 சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பிலும், 25 சந்தேக நபர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவின் பொறுப்பிலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். யுத்த காலத்தில் கைது செய்யப்பட்ட பல தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாத பின்னணியில் தற்போது முஸ்லிம்கள் ஸ்கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலுள்ள 7000 முஸ்லிம் குடும்பங்கள், நாட்டை விட்டு வெளியேற வெளிநாட்டு தூதரகமொன்றில் விண்ணப்பித்துள்ளமை குறித்து வெளியான செய்தி தொடர்பில் தமக்கு இதுவரை எந்தவித தகவல்களும் அறிவிக்கப்படவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சகத்தின் ஊடகப் பேச்சாளர் சரோஜா சிறிசேனவிடம் பிபிசி வினவிய போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் கடந்த 7ஆம் தேதி இந்த கருத்தை வெளியிட்டிருந்தார். முஸ்லிம்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டதாக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பிபிசி தமிழிடம் தெரிவித்தார். இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டே தாம் காத்தான்குடியில் இந்த கருத்தை வெளியிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற எந்தவொரு கலந்துரையாடலிலும், முஸ்லிம்கள் நாட்டை விட்டு வெளியேறும் விடயம் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை தெரிவிக்கின்றது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் உறுப்பினர் ஒருவர் இந்த விடயத்தை பிபிசி தமிழுக்கு உறுதிப்படுத்தினார்.

தான் கலந்துக்கொண்ட எந்தவொரு இடத்திலும் இந்த விடயம் கலந்துரையாடப்படவில்லை என மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவிக்கின்றார். வழமையான நடவடிக்கைகளுக்காகவே முஸ்லிம்கள் வெளிநாடுகளை நோக்கி செல்வதாக கூறிய அசாத் சாலி, நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறும் எண்ணத்துடன் எவரும் வெளிநாட்டு தூதரகங்களை நாடவில்லை எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் பல பகுதிகளிலும் உள்ள அரபு மொழி பெயர்ப் பலகைகளை அகற்றுவதற்கான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில், அமைச்சர் மனோ கனேசனை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் பல பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரபு மொழியிலான பெயர் பலகைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சரவையை மேற்கோள்காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுக் கொள்கைக்கு அமைய தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை தவிர்த்து, ஏனைய மொழிகளை காட்சிப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. இலங்கையில் வேறு மொழிகளை காட்சிப்படுத்த வேண்டுமாயின், அதற்கு விசேட அனுமதி பெற்றுக் கொள்வது அத்தியாவசியம் என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை தவிர்த்த ஏனைய மொழிகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதை தடை செய்யும் வகையிலான சுற்று அறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் மனோகணேசன் குறிப்பிட்டார். இந்த சுற்று அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பல பகுதிகளில் அரபு மொழியிலான பெயர் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் இந்த அரபு மொழியிலான பெயர் பலகைகளை காண முடிகின்றது.

தமது புனித நூலான அல்-குர் ஆன் அரபு மொழியில் காணப்படுவதுடன், அந்த புனித நூலை பயில்வதற்கு தாம் கட்டாயமாக அரபு மொழி பயில வேண்டியுள்ளதாக முஸ்லிம்கள் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில், அரபு மொழி காட்சிப்பலகைகளுக்கு தடை விதிக்கப்படும் பட்சத்தில், எதிர்வரும் காலங்களில் அரபு மொழியை பயில்வதற்கும் அரசாங்கம் தடை விதிக்கக் கூடும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

தமது எதிர்கால சந்ததியினருக்கு புனித அல்-குர் ஆனை வாசிப்பதற்கு முடியாத நிலைமை ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக அவர்கள் கவலை வெளியிடுகின்றனர். அரபு மொழியை பயில்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், அது தமது கலாசாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பெரிதும் வழிவகுக்கும் என முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் காரணமாக முஸ்லிம் மக்கள் எதிர் கொள்ளும் கைது தொடக்கம் அவர் சார்ந்த அமைச்சர்கள் இராஜினாமா மற்றும் அரபு மொழித்தடை வரை பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். போர்க் காலங்களில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அவர்கள் காரணமில்லாது கைது செய்யப்பட்டதையும், அக்காலத்தில் தமிழர் தொடர்பாகத் தகவல் வழங்கியதால் தமிழர் போராட்டத்திற்குத் தாம் ஏற்படுத்திய பின்னடைவுகள் பற்றியும் இனிமேலாவது முஸ்லிம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ●




# துறையாகத் தரமுயர்த்தப்பட்ட யாழ். பல்கலை ஊடகக் கற்கைகள்

மு. துலாபரணி,
ஊடகக் கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்





ஜனநாயக ஆட்சி முறையும், ஜனநாயக நெறிகள் நாட்டில் செயற்படுவதற்கும் ஊடகங்கள் காத்திரமான பங்கை வகிக்கின்றன. பொறுப்பு வாய்ந்த ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் நாட்டின் ஜனநாயகத்துக்கும் சட்ட ஆட்சிக்கும், நல்லாட்சிக்கும் மக்களின் ஒட்டு மொத்த அடிப்படை மனித உரிமைகளையும் இதர உரிமைகளையும் பாதுகாப்பதற்கு ஆற்றக் கூடிய பங்களிப்பு பாரியது.

நாட்டில் காணப்படும் முக்கிய மூன்றுத் தூண்களான சட்டத்துறை, நீதித்துறை மற்றும் நிர்வாக்த்துறை போன்றவற்றைப் போல நான்காவது தூணாகச் செயற்படுவது ஊடகத்துறையாகும். இத்தகைய துறை தொழில் ரீதியாக சிறப்புற மிளிர்வதற்கு, அத்துறை சார்ந்த அறிவும், தொழில்வாண்மையும் அவசியமாகும்.

உலகத்தில் மாற்றங்கள் சடுதியாக நிகழ்ந்த வண்ணமே உள்ளன. வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வரும் இக்காலக் கட்டத்தில், ஊடகத்துறையிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதற்கேற்பத் தங்களை தயார் செய்து கொள்ளும் வகையில் ஊடகவியலாளர்கள் தங்களின் திறன்களையும் அறிவையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும். இலங்கையில் வாழ்வுரிமையின் தரத்தை மேல் நிலையில் பேணுவதற்கு ஊடக அறிவு மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றது. அதன் காரணமாகவே இன்று நவீன காலத்தில் ஊடகக் கற்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. இதன் மூலம் முறையான ஊடக கற்பித்தல் முறையொன்று கட்டியெழுப்பப்படுவதற்கான தேவைகளும் ஏற்படுகின்றது.

அந்தவகையில் ஊடகக் கற்கையை தமிழ் மொழியில் வழங்கி வரும் யாழ் பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள், யாழ் பல்கலைக் கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. ஊடகக் கல்வி கலைப் பீடத்தின் கீழ் மாணவர்களின் படைப்பாக்க எழுத்து திறனை விருத்தி செய்யும் பொருட்டு இலக்கிய கல்வியின் ஒரு பகுதியாக அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்வாறு அறிமுகப்படுத்தப் பட்ட ஊடகக் கற்கைகள் தற்போது யாழ். ப்ல் கலைக்கழகத்தின் 18 ஆவது துறையாக தரமுயர்த்தப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஆம்! ஊடகக் கற்கைகள் துறையானது ஆங்கில மொழி கற்பித்தல் துறையுடன் இணைந்து தரமுயர்த்தப்பட்டிருக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலானது கடந்த மாதம் 27ஆம் திகதி நகரத்திட்டமிடல் நீர் விநியோகம் மற்றும் உயர்கல்வி அமைச்சரான ரவூப் ஹக்கீமினால் உத்தியோகப்பூர்வமாக விடுக்கப்பட்டிருந்தது. இதன்படி யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் 17 ஆவது துறையாக ஆங்கில மொழி கற்பித்தல் துறையும், 18 ஆவது துறையாக ஊடகக் கற்கைகள் துறையும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கன.

யாழ் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் பிரிவு 2019.06.10 அன்று உத்தியோகப் பூர்வமாக ஓர் துறையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி க. கந்தசாமியால் பெயர்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அத்துறையின் இணைப்பாளர் கலாநிதி. சி. ரகுராம், கலைப்பீடாதிபதி கலாநிதி சுதாகர், விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில ஒரு சான்றிதழ் கற்கை நெறியாக இதழியல் அறிமுகப்படுத்தப்பட்டு வடக்கு மாகாணத்தின் ஊடகக் கல்வியின் ஒரு முன்னோடியாக அமைந்திருந்த இந்த சான்றிதழ் கற்கைகள் யாழ் பல்கலைக் கழக மாணவர்களுக்கு மட்டுமன்றி ஊடகத் துறையில் ஆர்வமுள்ள ஏனையவர்களுக்கும் உதவியது என்பது மறுப்பதற்கில்லை. தொழில்சார் ஊடகத்துறையை தமிழ் ஊடகத்துறையில் வழங்கும் நோக்கோடு யுனெஸ்கோவின் செயற்றிட்டத்தின் கீழ் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC) 2002 ஆம் ஆண்டு யாழ் பல் கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதி வெளியிலிருந்து கிடைக்கும் வரை இப்பயிற்சி மையம் தமிழ் மொழியில் தொழில்சார் ஊடகவியலாளர்களை உருவாக்கி அவர்களுக்குரிய பயிற்சியை வழங்குவதில் பங்களிப்பு செய்துள்ளது. தற்போது பல்கலைக்கழகத்தின் கீழ் இப்பயிற்சி மையம் Media Lap ஆக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டு சுவீடனில் உள்ள லின்னேய்ஸ் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் கலைப்பீடத்தின் கீழ் ஊடகக் கற்கைகளின் பாடத்திட்டத்துக்கான வரைபு முன்வைக்கப்பட்டது. பின்னர் 2013 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஊடகக் கற்கைகளுக்கு இளங்கலை மானி பட்டத்துக்கான அங்கிகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியது தொடக்கம் இன்று முதுதத்துவ மானி பட்டப்படிப்பிற்கான வாய்ப்பை யாழ் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை வழங்கி வருகின்றன. இலங்கையில் வெவ்வேறு இடங்களில் உள்ள மாணவர்கள் தமிழ் மொழியில் ஊடகக் கற்கைகளை பயில்வதற்கான வாய்ப்புக்கள் அன்று தொடக்கம் இன்று வரை வழங்கப்பட்டு வருகின்றமை கண்கூடு. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியை நோக்கிப் பயணித்த ஊடகக் கற்கைகள் அலகை ஒரு துறையாக நியமிக்கக் கோரி யாழ் பல்கலைக் கழகத்தின் செனட் மற்றும் கவுன்சிலின் ஆணைக்குழுவுக்கு சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து ஊடகக் கற்கைகள் அலகு இவ்வாண்டு தனித் துறையாக உயர் கல்வி அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டது.

பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் ஊடகத்துறையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் யாழ் ஊடகக் கற்கைகள் துறை 3 நிரந்தர விரிவுரையாளர்களையும், ஓர் சிரேஷ்ட விரிவுரையாளரையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், ஒலி ஒளி கலையக வசதிகளையும் ஏனைய உட்கட்டுமான வசதிகளையும் கொண்டு இயங்கி வருகின்றது. தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் பல மாணவர்கள் ஊடகக் கற்கைகளை பயின்று வருவதுடன் இங்கிருந்து வெளியேறிய பல பட்டதாரி மாணவர்கள் ஊடகங்களில் பணி புரிகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது ஊடகக் கற்கைகள் பயிலும் மாணவர்களுக்கு புத்தகப் பாடங்களையும் கடந்து செயன்முறை ரீதியான பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளும் பிரபல ஊடகங்களில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல வருடங்களாக பட்டப்படிப்பை மேற்கொண்டு வந்த மாணவர்கள் இனிமேல் துறை சார்ந்த அங்கிகாரத்துடன் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருப்பதுடன், இலங்கையில் இயங்கக் கூடிய பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழி மூலமாக ஓர் துறைசார்ந்த ரீதியில் கிடைத்திருக்கின்றது பெருமையடையக்கூடிய விடயமாகும். இனி வரும் காலங்களில் ஊடகக் கற்கைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், பட்டப்படிப்புகள் பீடத்துடன் இணைந்து செயற்படவும் ஊடகக் கற்கைகள் துறை முயற்சிகளை மேற்கொண்டிருப்பதுடன்,
பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறாமல் ஊடகத் துறையில் ஆர்வமுள்ள இளம் சமுதாயத்தினருக்கு Higher Diploma & Media Studies என்ற பட்டப்படிப்பையும் மிகமிக விரைவில் தொடங்குவதற்கு ஆயத்தமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

## ஒரு வரி விமர்சனம்!



'அந்த அம்மா ரொம்பத் தங்கமானவங்க;'

'அந்தப் பொண்ணு மகா திமிருப் பிடிச்சதுங்க';

'ரொம்ப கெட்டிக்காரப் பொம்பிளைங்க அது';

'ரொம்ப உயர்ந்த மனுக்ஷருங்க அவரு';

'மனுஷனாய்யா அவன்';

'அந்த ஆளு ஒரு மாதிரியானவருங்க';

'ஒருத்தருக்கும் பிரயோசனம் இல்லாதவரு';

ஒரு மனிதனின் மிக நீண்ட வாழ்க்கையை இப்படி ஒரே வரியில் விமர்சித்து விடுகிறது இந்த உலகம்.

யாராக இருந்தாலும் சரி, இந்த ஒரு விமரிசனம் தான்.

ஒருவருக்கு மிக வேண்டியவர்களும், அவரால் சில பலன்களை அடைந்தவர்களும் இத்தகைய விமரிசனங்களைச் சற்றே மாற்றிச் சொல்லலாம். ஆனால் பெரும்பாலானவர்களின் கருத்து என்பது ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

இந்த உலகத்திடம் எப்படியாவது நல்ல பெயர் வாங்கிவிட வேண்டும் அல்லது உயர்ந்த சான்றிதழ்களை வாங்கிவிட வேண்டும் என்பதால் சிலர் தங்கள் சுயரூபத்தை மறைத்துக் கொண்டு போலி நாடகம் ஆட முயற்சி செய்யலாம். அதில் தற்காலிக வெற்றியும் பெறலாம். ஆனால் இந்தக் கெட்டிக்கார உலகத்தின் முன்னால் ஒரு மிகச் சிறந்த ஸ்கேன் இயந்திரம்கூட மண்டியிட்டுவிடும். அவ்வளவு அருமையாக ஒருவனின் உண்மையான இயல்பைப் படம்பிடித்து விடுகிறது இந்த உலகம்.

நாம் செய்யும் எவ்வளவோ செயல்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்து மதிப்பெண்ணைப் போட்டு இந்த ஒரு வரி விமர்சனத்தை உடனே வழங்கிவிடும்.

சரி, அதற்கு என்ன இப்போது என்கிறீர்கள் அல்லவா? நம்மைப்பற்றிய இந்த ஒரு வரி விமர்சனம் என்னவாக இருக்கவேண்டும் என்பதை நாம் உடனே முடிவு செய்தாக வேண்டிய தருணம் வந்துவிட்டது.

பள்ளியில், கல்லூரியில், வேலைபார்க்கும் இடத்தில் அல்லது தொழில் புரியும் இடத்தில் கிடைக்கும் சான்றிதழ்களுக்கு அல்லது குடும்ப வாழ்க்கையில் கிடைக்கும் சாதாரண பாராட்டிற்கும் மயங்கிப் போகும் நாம், வாழ்க்கையில் பெறப் போகும் இந்த நிரந்தரச் சான்றிதழுக்காக உண்மையாக உழைக்கத் தொடங்க வேண்டும்.

அதற்கான மனமாற்றத்தை உடனே நாம் பெற்றாக வேண்டும். இதுவரை எப்படி வாழ்ந்திருந்தாலும் சரி, இனி மிகச்சிறந்த வாழ்க்கை வாழவேண்டும் என்பதில் தீர்மானமாக இருக்கவேண்டும்.

இந்த இலக்கை நிர்ணயித்துக் கொண்டால் நம்மிடம் உள்ள கெட்ட எண்ணங்கள், தீய பழக்கங்கள் எல்லாம் தாமாக ஓடி மறைந்துவிடும்.

அதை விடுத்து, என்னைப்பற்றிய விமர்சனங்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் எப்படியோ வாழ்ந்து விட்டுப் போகிறேன் என்று வாழ நினைக்கிறவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை இப்போதே கையோடு எழுதிக் கொடுத்துவிட முடியும்.

லேனா தமிழ்வாணன்

# சமூகத்திலிருந்து அந்நியப்படும் ஒரு படைப்பாளியாக...



பிறைவாணன்

**கடந்த வாரம் இணையத்தில் அதிகமாக வைரலாகி, பகிரப்பட்டு விவாதிக்கப்பட்ட விடயம் என்றால் அது தென்னிந்திய எழுத்தாளர் ஜெய மோகன் பற்றியதே. அவருக்கும் அவர் ஊரிலுள்ள ஒரு மளிகைக்கடைக்காரப் பெண்ணுக்கும் நடந்த வாக்குவாதம் அடிதடியில் முற்றி ஜெயமோகன் வைத்தியசாலைக்குப் போகும் அளவுக்கு நிலைமை இருந்திருக்கிறதென்ற பதிவுகளையும் காணக்கூடியதாக இருந்தது.**

**இங்கு ஜெயமோகன் தாக்கப்பட்டதல்ல முக்கியமான செய்தி. முகநூலில் ஜெயமோகனுக்கு எதிராகப் பரப்பப்பட்ட அவர் தொடர்பான கருத்துக்களே முக்கிய செய்தியாகக் கண்டோம். எழுத்தாளர் ஜெயமோகனின் பெயரில் அத்தனை வைராக்கியத்துடன் பலர் இருந்திருக்கின்றனர் என்றதனை அறியக் கூடியதாக இருந்தது. ஒரு எழுத்தாளன் தனக்கு அறியாத விடயத்தைப் பற்றி எழுதவோ அல்லது தனக்குச் சார்பானவருக்கு வக்காளத்து வாங்குகின்ற விதத்தில் எழுதவோ அல்லது தனது வரம்பை மீறவோ கூடாது என்றதற்கு ஜெயமோகன் எழுத்துக்கள் சாட்சியாகின்றன.**

**ஈழப்போராட்டத்தைப் பற்றி ஜெயமோகனின் எழுத்துக்கள் ஈழத் தமிழர்களைச் சீண்டுவதாகவே இருந்திருக்கிறது. ஈழத் தமிழர்களது போராட்டம் நியாயமானதென்று ஐ.நாவுக்கு அப்பாலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டு தற்போது சிங்களத் தலைவர்களும், பௌத்த மதபீடங்களும் அதனை ஒத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இலங்கையில் உருவாகியிருக்கிறது.**

**ஒரு படைப்பாளி என்பவன் தனக்கு முற்றிலும் தெரியாத அல்லது அறியப்படாத சர்ச்சைக்குரியதும், ஆழமுமானதுமான விடயங்களில் அத்துமீறி அதி மேதாவித்தனமாகக் கருத்துச் சொல்வதென்பது அவர் மேலான மரியாதையையும், அபிப்பிராயத்தையும் முற்றாகச் சிதைத்துவிடும் ஒன்றாகும்.**

**இந்த நிலையில் ஜெயமோகன் சம்பந்தப்பட்ட மேற்குறித்த விவகாரமானது மேலும் அவருக்குரிய கௌரவத்தை இழப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்தச் சம்பவமானது அவரது எழுத்துக்களுக்கும் அவரது இயல்புக்குமிடையே ஒரு பாரிய இடைவெளி ஏற்படுத்தியுள்ளதென்பது உண்மையாகும். ஒரு சமூக அக்கறையுள்ள படைப்பாளியின் இயல்பு இப்படிப்பட்டதாக இருக்க முடியாது!**

எழுத்தாளர் ஜெயமோகன் ஒரு பெண்ணிடம் தனது வீரத்தை காண்பித்து அந்தப் பெண்ணின் கணவனிடம் வாங்கிக் கட்டிய சம்பவம் பட்டி தொட்டி எல்லாம் பேசப்படுகிறது. இவர் எழுத்துகள் பேசப்பட்டு வந்த நிலையில் இந்த சம்பவமும் பெரியளவில் பேசப்படுவதற்கு பெண் அமைப்புகள் காரணமாக அமைந்துள்ளன. பல பெண் அமைப்புகள் இவருக்கு எதிராக கருத்துகளை இணையத் தளங்களில் பதிவு இட்டு வரும் நிலையில் இவரின் வாசகர்களும் இவருக்கு எதிராக கருத்துகளை பதிவு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பலரும் விமர்சித்து வரும் நிலையினைப் பார்க்கும் போது இவரை விமர்சிப்பதற்கு இவ்வளவு காலமும் சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. அந்தளவுக்கு இவரின் எழுத்துகள் உரிமை கோரி நிற்கும் மக்களை காயப்படுத்தியுள்ளன.

ஜெயமோகன் நாகர்கோவில் அருகே பார்வதிபுரம் பகுதியில் வசித்து வருகிறார். தாக்குதலைத் தொடர்ந்து எழுத்தாளர் ஜெயமோகன் ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். புகாரின் பேரில் நேசமணி நகர் பொலிஸார் பெண்ணின் கணவரான கடைக்காரர் செல்வத்தைப் பிடித்து விசாரித்து வருகின்றனர். இந்த நிலையில், ஜெயமோகன் தனது இணையத்தளத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக குறிப்பிட்டிருக்கிறார். அதில், ஒரு சிறு விவகாரத்தால் நான் தாக்கப்பட்டேன். அருகில் உள்ள கடையில் இரு தோசை மாவு பக்கெட் வாங்கினேன். பழைய புளித்த மாவை கொடுத்துவிட்டார்கள். கடையில் இருந்தவர் உரிமையாளரின் மனைவி. பாக்கெட்டை திருப்பி எடுக்க மறுத்து என்னை வசைபாட ஆரம்பித்தார். நான் கோபமாக மாவு பக்கெட்டுகளை நீயே வைத்துக்கொள் என வீசிவிட்டு திரும்பினேன். அருகே அவர் கணவர் நின்றிருந்தார். ஏற்கெனவே குடித்து தகராறு செய்தபடி நின்றிருக்கிறார். என்னைத் தாக்க ஆரம்பித்தார். தாடையில் அடித்தார். கீழே விழுந்தபோது உதைத்தார். என் கண்ணாடி உடைந்தது. பலமுறை தாக்கி கெட்டவார்த்தை சொன்னார். பின்னர் வீடு வந்தேன். அதற்குள் வீட்டுக்கு வந்து என் மனைவியையும் மகளையும் வசைபாடினார். வீட்டுக்குள் நுழைய முயன்றார். அதன் பின்னரே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருக்கிறேன். காவல் நிலையம் சென்ற பின்னர்தான் ஒரு கேடியின் தொடர்புகள் புரிந்தது. வழக்கறிஞர்கள். அரசியல் தலைவர்கள் வந்து பெண்ணின் கணவர் பக்கம் வாதாடினார்கள். ஆசாரிப் பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இருக்கிறேன். சிறு காயங்கள் உள்ளன" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஜெயமோகன் வழக்கை வலுவாக்குவதற்காகவே அரச மருத்தவமனையில் வந்து படுத்திருப்பதாகவும் இதனால் உண்மையான நோயாளிகள் பாதிக்கப்படுவதாக டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்போது மட்டுமல்ல இதற்கு முன்னரும் ஒருமுறை ஜெயமோகன் வங்கி ஏ.டி.எம் ஐ உடைத்து சேதப்படுத்தியிருக்கிறார். ஆனால் வங்கி முகாமையாளர்களோ இவர் மீது வழக்கு பதிவு செய்யாமல் பெருந்தன்மையோடு நடந்து கொண்டனர். இவரோ அச் சம்பவத்தை தனது வீர தீரச் செயலாக எழுதியிருக்கிறார். தன்னை சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு இலக்கிய ஜம்பவான் என்ற கற்பனையில் மிதந்து திரிகிறார்.

நன்றாக கதை வசனம் எழுதத் தெரிந்தவருக்கு நன்றாக நடிக்கத் தெரியவில்லையே? கடைக்காரப் பெண்ணை "தேவடியா" என ஜெயமோகன் திட்டியதாக நக்கீரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. கணவன் முன்னிலையில் மனைவியை கேவலமாக திட்டியதாலேதான் கணவன் ஜெயமோகனை தாக்கியதாக சம்பவத்தை பார்த்த தேனீர் கடைக்காரர் கூறுகிறார். ஜெயமோகன் பொறுமையாக நடந்து கொண்டிருக்கலாம் என மனித உரிமையாளர் ஆ.மார்க்கஸ் கூறுகிறார்.

கடைக்காரரின் மனைவியும் ஜெயமோகனும் முறைப்பாடு செய்துள்ளனர். ஆனால் ஜெயமோகனின் அரசியல் செல்வாக்கு காரணமாக பொலிசார் ஜெயமோகனின் முறைப்பாட்டை மட்டுமே ஏற்று வழக்குப் பதிவு செய்துள்ளனர். சம்பவத்தின் முழு விபரமும் அறிந்த பல இலக்கியவாதிகள் வழக்கை தள்ளுபடி செய்யும்படி ஜெயமோகனிடம் கேட்டும் அவர் இன்னும் வழக்கை தள்ளுபடி செய்யவில்லை.

அண்மையில், பெண் எழுத்தாளர்கள் தங்கள் அழகைக் காட்டியே தமது எழுத்தை விற்பனை செய்கின்றனர் என்று இவர் எழுதியிருந்தார். அப்புறம் இதற்கு எதிர்ப்பு வரப் போகிறது என்று அறிந்தவுடன் நீக்கி விட்டார். இவர் என்ன கூறினாலும் அதை ஒரு இலக்கியவாதியின் எழுத்துச் சுதந்திரம் என்று நியாயப்படுத்த ஒரு "செம்பு" சீடர் கூட்டம் அவருக்கு உண்டு. அந்த திமிரில்தான் அவர் ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் பல கருத்துகளை கூறி வந்திருக்கிறார்.

ஆனால் இந்த புளித்த மா சம்பவம் அவருக்கும் அவரது சீடர்களுக்கும் ஒரு நல்ல பாடத்தை புகட்டியிருக்கிறது. இந்த நிலையில் காவல்துறையும் பா.ஜ.க மற்றும் அ.தி.மு.க இணைந்து திட்டமிட்டு செல்வத்தின் மீது வழக்குப் பதிவு செய்து அவரை கைது செய்தனர். காவல் நிலையத்தில் ஜெயமோகனுக்கு ஆதரவாக சென்றவர்களுக்கு மரியாதையும் நடந்த சம்பவத்தின் உண்மை தன்மையை எடுத்து சொல்ல சென்றவர்களை காவல்துறை திட்டி துரத்தியுள்ளனர். காவல்துறை ஒரு தலைபட்சமாக செயல்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அநீதியை இழைத்துள்ளது.

இது குறித்து பெண்கள் அமைப்பைச் சேர்ந்த சிலர் கூறும் போது...

ஜெயமோகன் திரைப்படத்தில் வரும் கதாபாத்திரம் போல் நடித்துள்ளார் அவர் கதாசிரியராக இருந்த சாகசகாரர் படத்தில் மிக்ஸியை தீயிட்டு கொளுத்தி ஒரு விரல் புரட்சி செய்வது போல் மாவு பாக்கெட்டை பெண் மீது எறிந்து ரவுடிப் புரட்சி செய்திருக்கிறார். அவர் வாங்கும் போது 'பழைய மாவு தான் இருக்கிறது" என்று அந்த பெண் கூறிய போது "பரவாயில்லை" என்று வாங்கிச் சென்று இருக்கிறார் அதன் பிறகு புளித்து இருக்கிறது என்று திரும்ப கொடுக்கும் போது வார்த்தைகள் பயன்படுத்தியதைக் குறைத்து இருக்க வேண்டும். அல்லது மாவு வாங்கும் போது யோசித்து இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் அதற்கென்று அதிகாரிகள் இருக்கிறார்கள் அவர்களிடம் சென்று முறையிட்டு இருக்க வேண்டும். அதை விட்டுட்டு சமுதாயத்தில் பிரபலமாக இருப்பவர் ஒரு பெண்ணிடம் இப்படியா நடந்து கொள்ள வேண்டும். இதற்கு காவல்துறையும் உடந்தை என்றனர்.

ஜெயமோகனுக்கு எதிராக பெண் எழுத்தாளர்களும், பெண்ணியவாதிகள் சிலரும் கண்டன அறிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, தமிழ் இலக்கிய உலகில் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. பெண் இலக்கியவாதிகளை, அவர்கள் பாலினம் சார்ந்து வெறுப்புக் கண்ணோட்டத்துடன் எழுத்தாளர் ஜெயமோகன் விமர்சித்திருப்பதாக அந்த அறிக்கையில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில், 'நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்ற தலைப்பில் வெளியான படைப்பாளிகளது பட்டியலைக் குறித்து ஜெயமோகன் தன் கருத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த பதிவில், "பட்டியலில் உள்ள ஆண் படைப்பாளிகளில் அனைவரும் சிறப்பாக எழுதக்கூடியவர்கள்தான். இன்னும் அதிகமாக அவர்களிடம் எதிர்பார்க்கிறேன். ஆனால், பெண்களில் பலர் சொல்லும்படி எதுவுமே எழுதாமல் பலவகை உத்திகள் மூலம் ஊடகப்பிம்பங்களாக ஆனவர்கள். பலரை ஏன் எழுத்தாளர்கள் அல்லது கவிஞர்கள் என்று சொல்கிறார் நாஞ்சில் என்றே புரியவில்லை. இது ஒரு முக்கியமான அம்சம். இன்று ஆண்கள் எழுதித்தான் நிற்கவேண்டியிருக்கிறது. பெண்களுக்கு பெண்களாக தங்களை முன்வைத்தாலே இடம் கிடைத்துவிடுகிறது" என தெரிவித்திருந்தார். இந்த இரு பதிவுகள் தற்போது தொடரும் பிரச்சினைகளுக்கு வித்திட்டுள்ளது.

ஜெயமோகனுக்கு எதிராக பெண் எழுத்தாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜெயமோகன் சில முடிந்த முடிவுகளைக் கொண்டிருக்கிறார். பெண் படைப்பாளிகள் மீது இவருக்கு ஆழமான வெறுப்பு இருப்பதை அவர் எழுத்துப் பூச்சினால் என்னதான் மறைக்க முயன்றாலும் அவரையும் மீறிக் கொண்டு அந்த வெறுப்புணர்வு வெளிப்பட்டு விடுகிறது என குறிப்பிட்டுள்ளதோடு. அவரது பல்வேறு படைப்புகளில் இருந்து மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்களே உயர்ந்தவர்கள் என்ற ஆண் ஆதிக்க சிந்தனை ஆழமாக வேரூன்றிய ஒருவரால் மட்டுமே பெண்களுக்கு எதிராக இத்தகைய இழிவான கருத்துகளை முன்வைக்க முடியும் எனவும் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எழுத்துரு மாற்றம் இன்னபிற விடயங்களில் தனது மேலான கருத்துக்களைச் சொல்லி சர்ச்சைகளின்மூலம் மஞ்சள் ஒளி வட்டத்தில் இருந்து கொண்டே இருக்கப் பிரியப்படுகிற அவரது மனச்சிக்கலைப் புரிந்துகொள்கிறோம். ஆனால், எழுதும் பெண்கள்மீது அவரால் பிரயோகிக்கப்படும் கருத்து வன்முறையை இனியும் புறந்தள்ளிக் கடந்து செல்வதற்கில்லை. அவரது கருத்து வன்முறைக்கு எதிராக குரல் கொடுக்காவிட்டால் இந்த சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையில் இருந்து பின்வாங்கியதாகிவிடும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க அதில் எழுத்தாளர்கள் அம்பை, குட்டி ரேவதி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை எழுத்தாளர் ஜெயமோகனை மட்டுமே குறிப்பிட்டிருந்தாலும், இதுபோன்று பெண்களை தனிப்பட்ட முறையில் விமர்சிக்கும், அவர்கள் நடத்தையை சிதைக்கும் வகையில் விமர்சனங்களை முன்வைக்கும் சில வெளியீட்டாளர்கள், இலக்கியவாதிகள் நிலைப்பாடுகளை அவ்வப்போது ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் கூறுகின்றனர் பெண் எழுத்தாளர்கள்.

நாகர்கோவில் வர்த்தக சங்கத்தினர் கூறும் போது....

பொலிசாருக்கு முதல் எதிரியே வியாபாரிகள் தான். பெண்ணின் கணவர் செல்வம் தி.மு.க பிரமுகராக இருப்பதால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் அந்தப் பகுதியில் பொலிசார் நடத்தும் சில அக்கிரமங்களை உடனே தட்டிக் கேட்பதால் இது பொலிசாருக்கு எரிச்சலாக இருந்து வந்தது. அந்த கோபத்தை இப்போது தீர்த்து விட்டனர்.

தோசை மாவை செல்வம் அரைத்து விற்கவில்லை. அவர் இன்னொரு குடிசை வியாபாரியிடமிருந்து தான் வாங்கி விற்கிறார். அது புளித்து இருக்கிறதா? அல்லது புளிக்காமல் இருக்கிறதா? என்று செல்வத்துக்கோ அவரது மனைவிக்கோ தெரியாது. வாங்கியவர் முறைப்படி சொன்னால் அதை அவர் மாற்றியிருப்பார். அதை விட்டு விட்டு திரைப்படத்தில் அடாவடி காட்டி நாட்டை திருத்துவது போல் ஜெயமோகன் நிஜத்தில் காட்டினால் அது எடுபடுமா?

பணத்தையும் ஆள் பலத்தையும் காட்டி உண்மைத் தன்மை தெரியாமல் வியாபாரி மீது வழக்குத் தொடுத்த காவல்துறையையும் ஜெயமோகனையும் கண்டிக்கிறோம் என்றனர். இதேபோல் ஜெயமோகன் உணவகங்களில் சாப்பிடச் சென்றாலும் உணவுப் பொருள்கள் எப்போது தயார் செய்தது என்று எல்லாம் கேட்டு விட்டு சாப்பிட்ட பிறகு எதாவது குறைகளை சுட்டிக்காட்டி சண்டையிடுவாராம் என்கின்றனர். சமூகத்துக்குக் கருத்துக் கூற விழைகின்ற படைப்பாளிகள் தமது பொது வாழ்க்கையிலும் கண்ணியமாகவும், பொறுப்புடனும் இருக்க வேண்டியதன் அவசியத்தை ஜெயமோகன் போன்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.



– நந்தினி சேவியர்

ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தனித்துவ முக்கியத்துவமிக்க படைப்பாளி நந்தினி சேவியர். அரிதாக எழுதினாலும் அற்புதமாக எழுதும் இலக்கியப் போராளி.

பாரதி கொல்வானே சிறுமைகண்டு பொங்கும் சாபம் என்று... அது இவரது இயல்பு. மானுடநேயம் இவரது இலக்கிய கோட்பாட்டின் அடிநாதம்.

பரிசுகளும் விருதுகளும் இவரை நாடி வந்த போதும் அலட்டிக்கொள்ளாத ஆளுமை இவரது சுயம்.

அயல்கிராமம், நெல்லிமரப் பள்ளிக்கூடம் ஆகிய இரு சிறு கதைத் தொகுப்புக்களும், நந்தினி சேவியர் படைப்புக்கள் என்ற இவரது படைப்பாற்றலின் பன்முக வடிவங்களை உள்ளடக்கிய முழுத்தொகுப்பும் வெளிவந்துள்ளன.

'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' தொகுதியில் இரந்த இச்சிறுகதையை நன்றியுடன் பிரசுரம் செய்வதில் 'தீபம்' நிறைவு கொள்கிறது.

# ஒற்றைத் தென்னை





பிரபஞ்சவெளியை ஊடுருவிக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது அந்த ஒற்றைத் தென்னை.

தொலைதூரத்தில் தெரியும் தீவுக் கூட்டங் களுக்கும் , எட்டத்திலே வரும் இயந்திர வள்ளங் களுக்கும், பாய்கட்டி ஓடும் படகுகளுக்கும் குருநகர் ஜெட்டி இறங்கு துறையைக் காட்டும் கலங்கரை விளக்கம் அந்த ஒற்றைத் தென்னை. வரிசையாக இறங்குதுறையோரம் நிற்கும் இயந்திர வள்ளங்கள் நீர்ச் சுழிப்பில் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தன.

கடலின் முள்ளந்தண்டாக நீண்டு கிளைவிட்டு சுட்டியல் அமைப்பில் மல்லாந்து கிடக்கும் அந்த இறங்குதுறை. ரோட்டின் மருங்கில் குவிக்கப்பட்டு இருக்கும் மீனை ஒருவன் பிளந்து பிளந்து எறிய, குடல்களையும் கழிவுப் பதார்த்தங்களையும் அலசி அலசி வீசுகிறான் மற்றொருவன். எறியப்படும் மீனை ரோட்டில் சாக்கைப் பிரித்துக் கொட்டியிருக்கும் உப்புக் குவியலில் பிரட்டி எடுத்து அடுக்கிறான் இன்னொருவன்.

தொலை தூரம் நீரைக் கிழித்துக் கொண்டு வரும் ஒரு வள்ளம் இறங்கு துறையை அண்மித்து நிற்கிறது.

கயிற்றை எறிந்து இறங்குதுறையின் குத்துக் கல்லில் கட்டும் சந்தியாக்கிழவன்.

"மருமோன்...மருமோன்" என்று குரல் கொடுத்தான். அவன் முகத்தில பூரண திருப்தியின் சாயல். செவத்தி என்கிற செபஸ்தியாயம்பிள்ளையும் அவனோடு வள்ளத்தை விட்டு வெளியில் வந்தான்.

"மிச்சம் நல்லாய் இருக்கு... செவத்திக்கு நல்ல மலிவு" இறங்கு துறையில் மீன்பிடிக்கும் அல்போண்சனைப் பார்த்து முனகினான் சந்தியாக்கிழவன்.

அந்த வள்ளத்தை அவர்கள் பருத்தித்துறையிலிருந்து வாங்கியிருந்தார்கள். வெள்ளோட்டத்திற்காக அந்த வள்ளத்தை கௌதாரி முனைவரை ஓட்டிச் சென்று அவர்கள் இருவரும் திரும்பியிருந்தார்கள்.

வள்ளத்தின் அமைப்பும் இயந்திரங்களின் பாவனையும் சந்தியாக்கிழவனுக்கு நன்றாகப் புரியும்.

அல்போண்சன் சந்தியாக் கிழவனைப் பார்த்து. "அம்மான்..நீ போனாலும் சும்மா சாதாரணமே... எடுப்பாய்" என்று சிரித்தான். வெய்யிலின் அகோர எறிப்பிலும் கிழவன் அவர்களோடு தொழிற்பாடுகளைப் பற்றியே பேசிக் கொண்டு இருக்கிறான்,

செவத்தியின் மனைவி தூரத்தில் நின்று குரல் கொடுப்பது கேட்கிறது.

"ஓ... அம்மான்... உந்தாளையும் கூட்டிக் கொண்டு தேத்தண்ணி குடிக்க வா..." அவளின் குரல் மெதுவாக ஒலித்தடங்குகிறது.

"அம்மான் தான் இந்த நேரம் தேத்தண்ணி குடிக்கும். அக்கை சும்மா சாட்டுக்கு கூப்பிடுது.." என்றான் நீருள் மீனை அலசியபடி நிற்கும் றொபேட்.

அவன் கூறியதில் நியாயம் இருப்பது போல் சிரித்த சந்தியா தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் துடைத்தபடி பிரதான வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினான்

இறங்குதுறையில் நிற்கும் அநேக கண்கள் அவனை அனுதாபத்தோடு நோக்கின. பெருமூச்சுக்கள் வெடித்துச் சிதறுகின்றன. அவன் நடக்கிறான்.

சந்தியாவுக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். ஆனாலும் கட்டுமஸ்தான தேகமும்,வலிமை மிக்க மன உறுதியும் அவனை இன்னும் உசுப்பவில்லை. குருநகர் வாழ் மீனவர் களுக்கும், மற்றைய சமூகத்தினருக்கும அவனைப் பற்றி நன்றாக தெரியும். இன்றுவரை அவன் யாருக்குமே பயந்ததுமில்லை . இனியும் பணியப்போவதுமில்லை. சிறுவயதிலிருந்தே சுறாக்குட்டியைப்போல் சுறுசுறுப்பாக எதிர் நீச்சல் போட்டுப் பழகியவன் அவன். இன்றுவரை அவனை அசரப்பண்ணியவர்கள் எவருமில்லை.

பெரிய சம்மாட்டிகள் முதலாளிகள் எத்தனையோ பேரை எதிர்த்து நின்ற ஒரே ஒரு நேர்மையான தொழிலாளி குருநகரில் உண்டென்றால் அது சந்தியாக் கிழவனே தான். எத்தனையோ முறை பொலிசாரைக் கொண்டு அவனுக்கு எதிராகப் பலவித நடவடிக்கைகளைப் பணமுதலைகள் செய்தன. ஆனால் அவைகளினால் அவனை ஒன்றுமே செய்ய முடியவில்லை. நெஞ்சுரம் பெற்றவன் சந்தியாக் கிழவன். அவனது குடும்பமே அழிந்தொழிந்து போதும் அவன் அசராதவன். சுமார் ஒரு வருடத்திற்கு முன் நிகழ்து விட்ட அந்த நிகழ்ச்சி...?

அவன் இப்போது இருப்பது போலத்தான் அப்போதும் கலகலப்பாக இருந்தான். மீன்களைப்பிளந்தெறியும் கைங்கரியத்தில் லாவகமாக அவன் ஈடுபடும் போது அதைப்பார்க்க சிலருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கும்.

என்ன வேகம்... என்ன வேகம்! இன்றும் அவன் இறங்குதுறையில் நிற்கிறான். ஆனால் அவனோடு கூட வேலை செய்வர்கள்...?

விக்டர் , டேவிட் , அதிரியார்...? அதிரியார் ..?

"அம்மான்... அம்மான்..! ஐயாவைக் கண்டியளே.."

வேகமாக நடக்கும் சந்தியாக்கிழவன் முன் அலங்க மலங்க ஓடி வந்தாள் மாகிரற். "ஏனடி பிள்ளை... எங்கை போனவன்...? பதறினான் கிழவன்

"நான் கைவேலையாய் இருந்தன்... அப்ப அந்தாள் படலையைத் திறந்து கொண்டு வெளியிலை வந்திட்டுது.." தூண்டிலில் சிக்கிய மீனைப்போல் அவள் துடித்தாள். "பயப்பிடாதை உங்கைகிட்டடியிலை... எங்கையேனும் நிப்பான் நான் பாத்து கூட்டி வாறன்.." சந்தியா திரும்பி நடந்தான்.

அவன் நினைத்தது வீண்போகவில்லை. கடற்கரையின் கிழக்குப்புற ஒற்றைத் தென்னையில் சாய்ந்து கொண்டு கடலை வெறிக்கப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் அதிரியார்க் கிழவன். சந்தியா அவனை அனுதாபத்தோடு பார்த்தான். அதிரியாரின் எலும்புகள் துருந்தும் உடலும், மேலும் காய்ந்து கருவாடாகியும் இருப்பது அவனுக்குப் புரிகிறது.

அதிரியாருக்குச் சந்தியாவை விட மூன்று நான்கு வயது குறைவாகத்தான் இருக்கும். சந்தியாவுக்கும் அவுனுக்கும் உள்ள வித்தியாசம்...? முன்பு அதிரியாரும் நல்லவாளிப்பான தேகக்கட்டு உடையவனாகத்தான் இருந்தான். அதெல்லாம சிதைந்து உருக்குலைந்தது..! அந்த ஒரு வருடத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சியினால் தான்... அந்த நிகழ்ச்சி...?

"என்னடா இப்படியே... நெடுகலும் யோசிச்சு... கவலைப்பட்டு:! சும்மா மனதை அலட்டாதே. பொடிச்சி உன்னைக் காணாம்ல் தவிக்கிறாள் எழும்பு" குரலில் சற்று அனுதாபமும் கண்டிப்பும் தொனிக்க அலையாக அடித்தான் சந்தியா.

உப்பு நீரைக் குடித்து விட்டது போல் முகம் சுருங்கிக் கிடக்கும் அதிரியார் விம்மினான்.

"அண்ணை... அண்ணை" அவனுக்கு குரல் அடைக்கிறது.

"யோசியாதை மேனை. யோசியாதை.. நடந்தது நடந்திட்டு... இனி என்ன..? குரலில் எந்தவித சலனமுமின்றி உரத்த தொனியில் பேசினான் சந்தியாக்கிழவன். இரண்டு கிழங்களும் ஒரேதாக்கத்துள் சிக்குண்டவைதான். ஆனால் இரண்டு இப்போது இருக்கும் நிலை மிகமிக வித்தியாசமானது. பெரிய கோயில் சவுக்காலையை வெறிக்கப்பார்க்கும் அதிரியார் பலத்து அழுதான். பாலைத்தீவு படகுவிபத்தில் அவனது மகன் விக்ரர் இறந்து போகாதிருந்தால் அவன் இப்படி இருப்பானா..?

"அழாதையெடா... தம்பி... அழாதை... " அதிரியாரைத் தேற்றும் சந்தியாவுக்கும் சற்று உடல் நடுங்குகிறது. ஆனால் அதை அவன் சமாளிக்கிறான். ஒரு மகனை இழந்து பயித்தியமாகிவிட்ட அதிரியாருக்கு அந்த விபத்திலே தனது குடும்பத்தையே இழந்து நிற்கும், அசையாது நிற்கும் அந்தத் தனி மரம் ஒற்றை மரம் ஆறுதல் கூறுகிறது.

படகு விபத்தில் அவரது மனைவி, மக்கள்,பேரக்குழந்தைகள் அனைத்தையும் இழந்து விட்ட அந்த மனிதன் மற்றவனுக்கு ஆறுதல் கூறுகிறான். கல்லூரிக்குச் செல்லும் சிறுவர்களைக் காணும் போதும் , கணவன் மனைவியாக சோடியாக நடக்கும் தம்பதிகளைக் காணும் போதும் சந்தியாவுக்கு மக்களின் மருமக்களின் பேரக் குழந்தைகளின் நினைவு வரத்தான் செய்யும். அவன் சமாளித்துக் கொள்வான்.

"உவற்றை நினைவுக்குத்தான் உப்படி வந்தது... ஆள்பாடு தொப்பி...!" சந்தியாவின் பழைய கம்பீரிய நடவடிக்கைகளைப் பார்த்து பொறாமை வலை பின்னிய சிலர் கூறத்தான் செய்தார்கள். ஆனால் கிழவன் இன்றும் பழைய சந்தியாவே!

பெரிய கோயில் சவுக்காலையைத் தாண்டி சாராயத் தவறணையை நோக்கி நடக்கும் போது கிழவன் கவலையோடு நடப்பதுண்டு. அதற்குள் உறங்கும் அவனது குடும்பம் சில வேளை அவனை கெதிகலக்கும். ஆனால் கண நேரம்..! தவறணையிலிருந்து திரும்பும்போது சந்தியாக்கிழவன் பழைய மனிதனாகி விடுவான்.

தனிச்சமையல் . தனித் தொழில். எல்லோருக்கும் உதவி...தொழில் ஆசான். மதிப்பிற்குரிய சீவன்.

"அம்மான்" சிறு தோல்விகளைக் கண்டு கலங்கி தற்கொலை செய்பவர்களுக்கும்,தம் தோல்விகளால் விரக்தியுறுபவர்களுமான இளம் சந்ததியினருக்கு ஒரு உதாரணம் காட்டக்கூடிய மனவலிமை மிக்க, சலிக்காத உழைப்பாளியான நேர்மைத் தொழிலாளவர்க்க வாரிசுதான் சந்தியாக்கிழவன்.

ஆனால் அதிரியார்...? "ம்... எழும்பு... வீட்டை போ. பொடிச்சி அந்தரப்படுவாள்.." மீண்டும் உலுப்பினான் சந்தியா. ஒற்றைத் தென்னையில் கையை ஊன்றி எழுந்திருக்கும் அதிரியார் சந்தியாவின் பின்னே தள்ளாடி நடக்கிறான். பன்னிரண்டுமணி வெய்யில் நெருப்பைக் கக்கிக் கொண்டு இருக்கிறது. ஓடிவரும் மாகிரற் தகப்பனை கையில் பிடித்து வீட்டுக்குள் கொண்டு செல்கிறாள்.

"அம்மான் சாப்பிட வாருங்கோவன்..."

"வேண்டாம் பிள்ளை . நான் சோறு காய்ச்சின்னான். ஊதிலை போட்டு வந்துதான் சாப்பிட வேணும்" மாகிரற்றைப் பார்த்துக்கூறும் சந்தியாக்கிழவன் தவறணையை நோக்கி கம்பீரமாக நடக்கிறான். மாகிரற் தொலைவில் தெர-ியும் ஒற்றைத் தென்னையை வெறிக்கப் பார்க்கிறாள்.

அந்தத்தென்னை... அது...? எத்தனையோ மழை புயலுக்கும் நிலைத்து நிற்கும் அத்தனிமரம்...? குருநகரில் எதற்குமே அசையாத இரண்டு தென்னைகள்....!

ஒன்று அது. முற்றது...?, சந்தியாக்கிழவன்! அவளுக்கு உடல் சிலிர்க்கிறது



# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 4

அ.ராமசாமி

**மாஜிதா பாத்திமாவின் உம்மாவின் திருக்கை மீன்வால்: தந்தைமையைத் தாக்குதல்**

வாசிக்கப்படும் இலக்கியப் பிரதியொன்றை ஆண்மையப் பிரதியா? பெண்மையப் பிரதியா? என அடையாளப்படுத்திக் கொண்டு விவாதங்களை முன்வைப்பது பெண்ணிய அணுகுமுறை. ஒரு பிரதியை அடையாளப்படுத்தும் கூறுகள் அதன் தலைப்பு தொடங்கி, சொல்லும் பாத்திரம், விசாரிக்கப்படும் பாத்திரங்கள், உண்டாக்கப்படும் உணர்வுகள், வாசிப்பவர்களுக்குக் கிடைக்கும் சிந்தனை மாற்றம் எனப் பலவற்றில் தங்கியிருக்கக்கூடும். மாஜிதா பாத்திமா எழுதிய உம்மாவின் திருக்கை மீன் வால் என்ற கதையை (அம்ருதா, மே, 2019) பெண்மையக் கதையாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பல கூறுகள் கதைக்குள் இருக்கின்றன.

கதையை எழுதியது பெண் என்பதால் அக்கதையைப் பெண்ணியப் பிரதி என வகைப்படுத்துவது பிழையாக மாறிவிடக் கூடும். மரபான வாழ்க்கைக்குள் தங்களைப் பற்றிய விசாரணையில்லாத பல பெண் எழுத்தாளர்கள் ஆண்மையப் பிரதிகளையே உருவாக்குகிறார்கள். தமிழ் இலக்கிய வெளிக்குள் அறியப்பெற்ற பெண் எழுத்தாளர்களின் கதைகளுக்குள்ளேயே கூட இந்தியக் குடும்ப அமைப்பின் புனிதங்களும், தந்தைமையின் மறைமுக ஆதிக்க நிலைபாடும் கொண்டாடப்படுகின்றன. ஆனால் தந்தைமையின் ஆதிக்கத்தனத்தைக் காக்கும் அமைப்பாகக் குடும்பவெளி இருக்கிறது என்பதைச் சிந்தனை பூர்வமாக உணர்ந்து எழுதும் எழுத்தாளர்களே பெண்ணியத்தின் அனைத்துத் தளங்களையும் முன்வைக்கும் பிரதிகளை உருவாக்குவர். மாஜிதா இந்தக் கதையில் அதனைச் செய்திருக்கிறார். தன்னை முழுமையாக விடுதலை பெற்ற பெண்ணாக நினைக்கும் ஒருத்தியின் கதையைச் சொல்லும் மாஜிதா, கதையைச் சொல்லும் முறையில் இதனைச் சாதித்திருக்கிறார்.

சுதந்திரமாக உணர்தலைத் தொடர்ந்து தடுக்கும் அமைப்பாகக் குடும்பம் இருக்கிறது என்ற விமர்சனத்தை முன்வைக்கும் கதை மிகச் சிறிய குடும்ப அமைப்பையே காட்டுகிறது. வாப்பா, உம்மா, மகள் என மூன்று பாத்திரங்களையும் சம அளவில் எழுதிக்காட்டும் பிரதி, கதையின் நிகழ்வுகளை இருவேறு காலத்தில் அடுக்கியிருக்கிறது. கதையின் தொடக்கப் பாதி இருப்பிலிருந்து நகர்கிறது. இப்போது அவள் தனியள், விடுதலை பெற்றவள், தனது தேவைகளைத் தாண்டி, சமூகத்தின் நகர்விற்காக உழைக்கும் பொதுவெளி மனுசி. ஆனால் முன்பு வீட்டின் சுவரில் தொங்கும் திருக்கை மீன் வால் தரும் அச்சத்தில் வாழ்ந்தவள். இவ்விரு வேறுபாடுகளை - வித்தியாசங்களைச் சொல்வதின் வழியாகவே தந்தைமையின் குரூரத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார் மாஜிதா பாத்திமா.

இப்போதிருக்கும் வாழ்க்கை அவள் நினைத்தபடி இருக்கும்- விடுதலையை உணரும் வாழ்க்கை என்கிறது கதையின் பகுதி. தான் கற்ற கல்வியின் மூலம் குடும்ப நல வழக்குகள், பெண்கள் உரிமைகள், பெண்களுக்கான நலத்திட்டங்களை உணரச் செய்யும் ஆலோசகராக இருக்கிறாள். அதன் பொருட்டுத் தனியாகவே இருக்கிறாள். இப்போதைய வாழ்தலைப் பற்றிய நினைவுகள் பற்றிய கதைக் குறிப்பு இது:

“இன்று அவள் தனித்த யாத்திரிகராக மாறி விட்டாள். அவளுடைய பயணத்திற்கு இலக்கு உண்டு. பறவையின் கண்களைப் போன்று அவளது பயணம் எதையாவது தேடிக் கொண்டேயிருக்கும். அமெரிக்காவின் சிறைச்சாலையிலிருந்து அவுஸ்திரேலிய பழங்குடிகள் வரை அவளது இலக்கு விரிவடைந்திருந்தது. ”

அவள் குடும்பத்தில் - வாப்பா, உம்மாவோடு இருந்த காலத்தைப் பற்றிய குறிப்போ இதற்கு மாறானது:“அவளுக்கான சுதந்திரக் காற்று வீட்டிற்கு வெளியே தான் வீசிக் கொண்டிருந்தது. வீட்டினுள்ளே இருந்த தலைகள் அவளை நெருக்கிப் பிடித்து உக்கிரப் பிரவாகமெடுக்கச் செய்தன. பாதணிகளை கழற்றி விட்டு உள்ளே நுழைவது போல் தனது சுதந்திர இறகுகளை முறித்து விட்டு வீட்டிற்குள் நுழைவாள். கேள்விகளை கோர்த்த சாட்டை எப்பொழுதும் அவளது வருகையை எதிர்பார்த்து காத்திருந்தது. வேலையை முடித்து விட்டு பஸ்ஸிலேறி இருக்கும் பொழுதே ‘இன்று வீட்டில் என்ன நடக்குமோ?’ என்ற பீதி அவளைச் சுற்றிக் கொள்ளும் எனத் தெளிவாக வேறுபடுத்தப்படுகிறது. இந்த வேறு- பாடுகளை -விடுதலை உணர்வோடு அச்சமும் தடைகளும் கொண்ட நிலையை முன்வைப்பதின் வழியாகவே பெண்ணெழுத்து உருவாகிறது. அவ்வேறுபாடுகளைக் கண்டறிந்து பேசுவதின் வழியாகவே பெண்ணியத் திறனாய்வும் தன்னை. நிலைநிறுத்தியுள்ளது.

பெண்ணியம் ஒரு நவீனக் கலைச்சொல். நிகழ்காலக் கலை இலக்கிய விவாதங்களில் தவிர்க்க முடியாத கலைச்சொல். அப்படி ஆவதற்கு அடித்தளம் இட்ட அறிவுத்துறை சமூக அறிவியல். மானிடவியல், சமூகவியல், வரலாறு வழியாகப் பொருளியல் சுதந்திரத்தை நாடும் பெண்களின் விருப்பத்தை முன்வைக்கும் கலைச்சொல்லாகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்ட கலைச்சொல் அது. அக்கலைச்சொல்லின் விவாதங்கள் முதன்மையாக மூன்று நிலைகளை- பெண்ணின் இருப்பு, சமத்துவம், விடுதலை -என மூன்று நிலைகளை முன்வைத்துப் பெண்ணை அடையாளப் படுத்துகிறது. இம்மூன்று நிலைகளையே பின்னர் பெண்ணியம் தனது வகைப்பாடாக விளக்கவும் செய்தது.

சார்ந்து நிற்கும் பொருளியல் உறவுகள் இல்லை என்ற நிலைதான் எல்லாவகையான விடுதலையின் அடையாளம். விடுதலை அடைந்த நாடு என்பது கூடச் சுயச்சார்புப் பொருளாதார உற்பத்தியில் அல்லது பொருளாதார உறவுகளில் தான் அடையாளப்படுகிறது. மனித உயிரியின் விடுதலை மனமும் இன்னொருவரைச் சார்ந்து நான் இல்லை என்பதில் தான் இருக்கிறது. தனது சம்பாத்தியம் தனது தேவைகளைத் தீர்த்துவிடும் என்ற நிலையில் பெண்ணொருத்தி தனது விடுதலையை உணர்வாள்.

ஆணாயினும் பெண்ணாயினும் விடுதலையை விரும்பும் நிலையில் முதலில் அதன் இருப்பைப் பற்றிய விசாரணையை முன்வைக்கிறது. இருபாலாரின் இருப்பாக இருக்கும் மிகச்சிறிய அலகு குடும்பம் என்னும் அமைப்பு. குடும்ப அமைப்பை விளக்க நினைக்கும் எல்லா வரையறைகளும் ஆண் முதன்மையைச் சொல்லிப் பெண்ணை இரண்டாமிடத்திலேயே நிறுத்துகின்றன. இரண்டாமிடம் என்பதும் ஒன்றும் ஒன்னும் இரண்டு என்பதுபோலச் சமநிலைப்பட்ட இரண்டாமிடம் அல்ல. கணவன் முதல் இடம் மனைவி அவனைச் சார்ந்து நிற்கும் இரண்டாமிடம். பிள்ளைகளுக்கு - ஆணாயினும் பெண்ணாயினும் - தந்தையைச் சார்ந்து நிற்கும் மற்ற இடங்கள் தான்.தந்தை, கணவன், உடன் பிறந்தோர் என ஆண்களைச் சார்ந்து நிற்கும் சூழ்நிலையை உருவாக்கும் குடும்பம் என்னும் அமைப்பைப் போலவே சமூகம் உருவாக்கும் ஒவ்வொரு அலகுகளிலும் பெண்ணின் இடம் சார்ந்து நிற்கும் இடங்களாகவே இருக்கின்றன என்பது பெண்ணிய விவாதங்கள் எழுப்பும் சொல்லாடல்கள். சார்ந்து இருப்பதிலிருந்து விடுதலை பெற வேண்டுமெனில் தனித்து வாழ்வதற்கான பொருளியல் தேவைகளைப் பெற வேண்டும் என்பது நிபந்தனை. அந்நிபந்தனையைக் கடந்து விடுதலையை அடைவதற்கான வழிகள் எளியன அல்ல. மேடுகளையும் பள்ளங்களையும் உண்டாக்கும் சமூக அமைப்புகளை விடவும் அவளது குடும்ப அமைப்பே முதல் தடைச்சுவர். அச்சுவரை எழுப்பிக் குரூரமான ஆயுதத்தைத் தரித்து நிற்கும் நபராக இருப்பது குடும்பத்தின் தலைவராக இருக்கும் தந்தை. தலைமைப் பொறுப்பில் இருந்து குடும்பத்தின் லாப நட்டங்களைப் பார்க்கும் தந்தை என்னும் ஆண் ஒரு தனி நபர். அந்தத் தனிநபர் குடும்ப அமைப்பின் அதிகாரத்துவக் குறியீடாக மாறும் போது ஆணாதிக்கச் சமூகத்தின் தலைமைக் குணங்களைத் தாங்கி தந்தைமையாகி விடுகிறார்.

பெண்ணிய அணுகுமுறை மட்டுமல்ல பெண்ணிய அணுகுமுறைக்கு முன்னோடியாக இருக்கும் மார்க்சியம், உளவியல், அமைப்பியம் போன்ற திறனாய்வு அணுகுமுறைகளுமே பிரதியைத் தனது கருத்தாடல் சொற்களைக் கொண்டு அடையாளப்படுத்திக் கொண்டே வாசிக்கின்றன. பிரதியின் அடையாளத்தை உருவாக்கிக் கொள்ள பிரதியின் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதைவிட அந்த அறிவுத்துறைகளின் கலைச்சொற்களே பயன்படுகின்றன. அக்கலைச் சொற்கள் வழியாக எழுதப்பட்ட பிரதிக்குள் உருவாக்கப்படும் பாத்திர அடையாளம் கண்டறியப்படுகிறது. அதன் பிறகு எழுதப் பெற்ற பிரதியிலிருந்து பாத்திரங்களின் உடலியல், சமூகவியல், உளவியல் குறிப்புகளை முன்வைத்து விவாதிக்கின்றன திறனாய்வு அணுகுமுறைகள் . இதன் காரணமாகவே சுத்த இலக்கியவாதிகளால் - கலை கலைக்காகவே என வாதிடும் இலக்கியவாதிகளால் இவ்வகை அணுகுமுறைகளும் கருத்தியல்களும் வெறுக்கப் படுகின்றன.

மாஜிதா பாத்திமாவின் பிரதிக்குள், ‘திருக்கை மீன் வால்’, உம்மாவின் உடைமை என்பதாகச் சொல்கிறது கதைத் தலைப்பு. ஆனால் கதைக்குள் அந்தத் திருக்கை மீன் வாலைப் பயன்படுத்துவது அம்மா அல்ல வாப்பா.

உம்மாவின் அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் திருக்கை மீன் வால் அவளது மனத் திரையில் ஓடி வந்து பயமுறுத்தும். மரம் அறுக்கும் அரம் போல் சொர சொரவென்ற திருக்கை மீன் வாலின் தோலின் மேல் நல்ல பாம்பின் கழுத்தில் இருக்கின்ற வளையம் போன்று உருண்டைகள் ஒட்டியிருக்கும். அவளுக்கு வயது தெரிந்ததிலிருந்து தண்டனை என்ற பெயரில் அவள் மீது ஒவ்வொரு தடவையும் வாப்பா நிகழ்த்தும் வன்மப் போரின் பொழுது இந்த இராட்சத உருவம் கொண்ட திருக்கை மீன் வால் இவளைப் பார்த்து சிரிக்கும். திருக்கை மீன் வால் வீட்டில் இருப்பது அவளுக்கு எரிச்சலை உண்டாக்கியது. ஆனால் அந்த வாலினை சுவரிலிருந்து கழற்றி வெளியே வீசுவதற்கான இயலாமை அவளிடம் இழைந்து கொண்டிருந்தது.

**சார்ந்து நிற்கும் பொருளியல் உறவுகள் இல்லை என்ற நிலைதான் எல்லாவகையான விடுதலையின் அடையாளம். விடுதலை அடைந்த நாடு என்பது கூடச் சுயச்சார்புப் பொருளாதார உற்பத்தியில் அல்லது பொருளாதார உறவுகளில் தான் அடையாளப்படுகிறது. மனித உயிரியின் விடுதலை மனமும் இன்னொருவரைச் சார்ந்து நான் இல்லை என்பதில் தான் இருக்கிறது. தனது சம்பாத்தியம் தனது தேவைகளைத் தீர்த்துவிடும் என்ற நிலையில் பெண்ணொருத்தி தனது விடுதலையை உணர்வாள்.**



இதற்குப் பதிலாக அம்மாவிடம் இருந்த ஆயுதம் வேறு. அது சொல்லாயுதம். அச்சொல்லாயுதம் எப்போதும், தீர்ப்பின் இறுதிக்கட்டத்தில் தண்டனையை விபரிப்பது போல் ‘உன்னப் போல பொம்புள புள்ளயொன்ற படிப்பிக்க வெச்சத போல பெரிய பிழை வேறொன்றுமில்லை’ என்ற வாசகம் உம்மாவிடமிருந்து வெளியேறும்.

இந்தச் சொற்களையே ஒவ்வொரு முரண்பாட்டின் போதும் உம்மா சொல்கிறாள். ஆனால் வாப்பா எதுவும் பேசாமல் தண்டிக்கும் கருவியான திருக்கை மீன் வாலையே பார்ப்பார். அப்படியான முரண்பாடுகளை நினைத்துக் கொள்ள நேர்ந்ததின் தொடக்கம் அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லை என்ற தகவல்தான். அப்படித் தான் கதை தொடங்குகிறது:

பராமரிப்பு வழக்குத் தாக்கல் செய்வதற்காக வாகரையிலிருந்து அலுவலகத்திற்கு வந்த இரண்டு பெண்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது தான் அந்த தொலைபேசி அழைப்பு அவளுக்கு வந்தது.

உம்மாவுக்கு இரத்தப்போக்கு கடுமையாக இருக்கு . நேற்று பொலநறுவைக்கு அஜ்வத் டொக்டரின் ஆஸ்பத்திரிக்கு உசன் நானா கூட்டிக்கிட்டு போனாரு. பதிமூன்று வருஷத்துக்கு பிறகு மீண்டும் மாதவிடாய் வந்திருப்பது உடம்பில் ஏதோ ஒரு பிரச்சனைக்கான அறிகுறி.

அப்படியொரு தகவல் வந்தவுடனேயே அவள் கிளம்பிவிடவில்லை. அப்படிக் கிளம்பியதாக எழுதப்பெற்றிருந்தால் இந்தக் கதையின் - கதாசிரியரின் பெண் நிலைப்பாடே அர்த்தமற்றுப் போயிருக்கும். அம்மாவின் மீது கொண்ட பாசம் என்பதான மிகையுணர்ச்சிக் கதையாக மாறிப்போயிருக்கும். அதற்குப் பதிலாக அவள் நிதானமாகவே செயல்பட்டாள் என எழுதியதின் மூலம் மாஜிதாவின் பெண்ணியப் புரிதல் தெளிவாக முன்வைக்கப்படுகிறது.

(அடுத்தவாரம் தொடரும்...)

மகளிர் பகுதி

அருந்ததி அக்கா







என்னதான் பரபரப்பான வாழ்க்கை முறை என்றாலும், பெண்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பெண்கள் அதிகம் வெளியே நடமாடவேண்டியவர்களாகத் தற்போது அவர்கள் வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது.

தலைவலி, முதுகுவலி போன்ற சாதாரண உடல் உபாதைகள் தொடங்கி மனநலம் சார்ந்த பிரச்சினைகள், இதய நோய், உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன் ஆகிய தீவிர நோய்கள் வரை பணிக்குச் செல்லும் பெண்களைப் பாதிக்கின்றன. அவர்களில் பலர், தங்களுக்கு ஒரு நோயின் அறிகுறி ஏற்பட்ட பின்னர்கூட, நேரமின்மை அல்லது அலுவலகப் பணிச்சுமை காரணமாக மருத்துவரிடம் செல்லாமல் தட்டிக் கழித்துவிடுகிறார்கள்.

* உணவிலிருந்தும், தவறான உணவுப் பழக்கங்களிலிருந்தும் தான் நோய்கள் பெரும்பாலும் ஆரம்பிக்கின்றன. வேலைக்குச் செல்லத் தொடங்கும் ஆரம்ப காலத்தில், உணவைப் பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிடப் பழகுவது நல்லது. இதை, ஹஸ்ப்ளிட் - மீல் ப்ளான்' (Split-meal plan) என்று கூறுவோம். காலையில் இடியப்பம், இட்லி, தோசை போன்ற உணவுகளையும், பகல் 11 மணியளவில் பழரசங்கள் அல்லது பழங்கள் சாப்பிடுவதைப் பழக்கமாகக் கொள்ளுவது நலம். மதிய உணவாகக் கொஞ்சச் சோற்றுடன், நிறைய எண்ணெயற்ற காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளுவதும், மாலை நேரத்தில் சுண்டல் கடலை போன்றவற்றையும், இரவில் வரகரிசி போன்றவற்றையும் உணவாகச் சாப்பிடலாம்.

இரவு வேலை பார்க்கும் பெண்கள், விழித்திருப்பதற்காக அடிக்கடி கோப்பி, தேநீர் அருந்துவார்கள். இதனால், உடல் எடை கூடுவதற்கு வாய்ப்புண்டு என்பதால் அவற்றைத் தவிர்க்கவும்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் சந்திக்கும் மற்றுமொரு முக்கிய பிரச்சினை, முதுகுவலி. அலுவலகத்தில் அமரும்போதும் மோட்டார் சைக்கிள்களை ஓட்டும்போதும் முதுகுப்பகுதி, நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். வேலை இடைநடுவே அவ்வப்போது நடப்பதுவும், தேவைப்பட்டால் முதுகினை மசாஜ் செய்துகொள்வதும் முதுகு வலிக்குத் தீர்வு தரும் விடயங்களாகும்.

இன்று பெரும்பாலான பெண்கள் கணினி முன் அமர்ந்து வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து அப்படியே ஆடாமல் அசையாமல் ஓரிடத்தில் அமர்வது நல்லதல்ல. ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை எழுந்து ஐந்து நிமிடங்களுக்குச் சற்று நடந்துவிட்டு வரலாம். இது உடலை உற்சாகமாக வைத்திருக்கும். அதேவேளை இரத்த ஓட்டத்தைச் சீர செய்யவும் உதவுகிறது.

சில பெண்களுக்குத் தொடர்ச்சியாகக் கணனித் திரையைப் பார்த்துக் கொண்டு இருப்பது கண் எரிச்சலைத் தரும். இதைத் தவிர்க்க, ஒருமணி நேரத்துக்கு ஒருமுறை கணினியின் ஒளி உமிழும் திரையில் இருந்து கண்களை விலக்கி, உள்ளங் கைகளால் கண்களை மூடி, அந்தச் சில நிமிட அடர் இருட்டின் மூலம் கண்களுக்கு ஓய்வு கொடுக்கலாம்.

தினமும் அரைமணி நேரம் யோகா அல்லது தியானம் செய்வது நல்லது. இவற்றைச் செய்பவர்கள் தான் தோன்றித் தனமாகச் செய்யாமல் அந்தக் கலைகளை அறிந்தவர்களிடம் கேட்டுப் படித்துச் செய்வது சாலச் சிறந்ததாகும்.

ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் மூன்று கிலோமீட்டர் அல்லது 30 நிமிடங்கள் நடைப் பயிற்சி செய்ய வேண்டும். இது கட்டாயம் நடக்க வேண்டிய தூரம். தவிர, குறைந்த தூரமுள்ள இடங்களுக்கு வாகனங்களைப் பயன்படுத்தாமல், நடந்தே செல்வது அல்லது சாதாரண சைக்கிளில் செல்வது எனப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளலாம்.

இரவு நேர வேலைக்குச் செல்லும் பெண்கள் முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டியது. அவர்களின் வேலை நேரம், மொத்த உடலியக்க நேரத்தையும் மாற்றிவிடுவதால் மாதவிடாய் காலங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். உடற்பயிற்சி, உடலுக்குத் தேவையான உறக்கம் மற்றும் ஓய்வு, சத்தான உணவுகள் என்பனவற்றின் மூலம் இதை ஓரளவு சீராக்க முடியும்.

அலுவலகத்தில் பணியாற்றும் கர்ப்பிணிகள் நீண்ட நேரம் கால்களைத் தொங்கவிட்டபடி அமர்ந்திருந்தால், கால்கள் லேசாக வீங்கும். தேநீர் இடைவேளை அல்லது மதிய உணவு வேளை போன்ற நேரங்களில் சிறிது நேரம், சிறிது தூரம் நடந்துவிட்டு வந்தாலே வந்த வீக்கம் வற்றிப்போய்விடும்.

கர்ப்பிணிகள் சிலருக்கு "எந்த மாதம் வரை வேலையைத் தொடரலாம்" என்ற குழப்பம் வரலாம். இது ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொறுத்து மாறுபடும். வேலை செய்யும்போது உடலில் பெரிதாகச் சிரமங்கள், அசௌகரியங்களை எதிர்கொள்ளவில்லை எனில் ஒன்பதாவது மாதம்வரை கூட வேலைக்குப் போகலாம்.

பெண்களுக்கு ஏற்படும் தலைவலிக்கு, மாதவிடாய் காலம், மன அழுத்தம், சரியாகச் சாப்பிடாதது எனப் பல காரணங்கள் இருக்கும். உரிய மருத்துவ ஆலோசனையுடன் அந்தக் காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை எடுக்க வேண்டும். வரு முன் காப்பதே சுகாதாரமாக வாழ்வதற்குச் சிறந்த வழி.




நவீன யுகம் என்று கூறிக் கொண்டு ஆடம்பர வாழ்க்கைக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இன்றைய இளம் பெண்கள் நெற்றியில் குங்குமம் வைப்பதை ஒரு பெரும் பொருட்டாகவே எண்ணுகின்றார்கள்.

அதுமட்டுமன்றி குங்குமம் வைப்பதன் நன்மைகள் தெரியாதவர்கள் சிறிதாக ஒரு ஸ்டிக்கர் பொட்டுக்களை வைத்துவருகின்றனர். அதனை வைக்கும் போது நெற்றி வகிட்டில் கூட குங்குமத்தை வைக்கத் தவறிவிடுகின்றனர்.

குங்குமம் வைத்துக் கொள்வதால் ஏற்படும் பலன்களை பார்ப்பதற்கு முன் குங்குமம் எப்படி தயாராகிறது என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.

சுண்ணாம்பு, தண்ணீர், மஞ்சள் ஆகிய மூன்றையும் சேர்த்துத்தான் குங்குமம் செய்து வருகின்றனர். இதில் சேர்க்கப்படும் மஞ்சள் நாளடைவில் இரும்புச்சத்தாக மாறிவிடும். மஞ்சள் கிருமி நாசினி என்பதால் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் பாதுகாக்கின்றது. மூளைக்கும் உடலின் பிற பகுதிகளுக்கும் செல்லும் நரம்புகளுக்கு நெற்றி வகிட்டில் குங்குமம் இடுவதால் சக்தி கிடைக்கிறது. மூளைக்குச் செல்லும் நரம்புகள் அதிகமான உஷ்ணத்தை மூளைக்கு அனுப்பாமல் அதை கட்டுப்படுத்தக் கூடிய இடம் நெற்றி என்பதால் அந்த நெற்றியில் குங்குமம் இடும் போது சூடு தணிக்கப்படுகின்றது. இதனால் குங்குமம் இட்டுக்கொள்பவருக்கு புதிய சக்தி கிடைக்கிறது. குங்குமம் முறையாக தயாரித்திருந்தால் தான் இந்த பலன்களை அனுபவிக்க முடியும். கலப்படமான குங்குமத்தை இட்டுக்கொள்வதால் சில பிரச்சினைகள் வரலாம்.

ஆன்மிகத்தில் முக்கிய இடம் வகிக்கும் குங்குமம் அழகு சாதன பொருட்கள் வரிசையிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இரு புருவங்களுக்கு மத்தியில் நெற்றி வகிட்டில் குங்குமத்தை இட்ட பெண்களைப் பார்க்கும்போது லக்ஸ்மிகரமாக தோன்றுவதைக் காணலாம்.

நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தால் தனிப்பலன் கிடைக்கும் என்பதை அனுபவபூர்வமாக உணரலாம் என்பதை முன்னோர்கள் குறிப்பிட்டிருந்தனர். சூரியனின் கதிர்கள் நெற்றியில் இட்டுள்ள குங்குமத்தின் மீது படும்போது குங்குமத்துடன் சேர்க்கப்படும் கலவைகளான, சுண்ணாம்பு, தண்ணீர், மஞ்சள் மற்றும் விட்டமின் டி அல்ட்ரா கதிர்கள் ஆகியவை ஒன்று சேர்ந்து காந்த சக்தியை உருவாக்குகின்றன என்பது விஞ்ஞான ரீதியான உண்மை. ஆனால் எம் இளைய சமூகமோ குங்குமம் வைப்பதை விட ஸ்டிக்கர் பொட்டு வைப்பதனாலேயே தமது அழகு இன்னும் மெருகூட்டப்படுவதாக எண்ணி தமது உடலுக்கு இயற்கையாக கிடைக்கும் பல நன்மைகளை இழக்கின்றனர்.



## சேமிப்பு ஏன்? எதற்காக??

பெண்களைச் செல்வத்துக்கு ஈடாகப் போற்றுகிறோம். உண்மைதான். பல குடும்பங்களில் பணம் இல்லையே எனக் குடும்பத் தலைவர்கள் அங்கலாய்க்கும்போது "இந்தா பிடியுங்கள்" என்று தாங்கள் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்து ஆபத்துக்கு உதவுபவர்கள் பெண்கள். சேமிப்பு பெண்களுக்கு ஒரு கைவந்த கலை எனலாம். ஏறக்குறைய கடந்த சில ஆண்டுகளில் பெண்களின் வளர்ச்சி விகிதம் வேலைவாய்ப்பிலும், வருமானத்திலும் ஆண்களுக்கு நிகரான இலக்கினை அடைந்திருக்கின்றது எனச் சொல்லப்படுகிறது.

சேமிப்பு என்பது பெண்களுக்கு இயல்பிலே காணப்படுவதொன்று. எனவே சேமிப்பு என்பதை எல்லா வழிகளிலும் குடும்பத்தில் ஊக்குவிக்க முயலவேண்டும். குடும்பத்தில் எதிர்பாராத விதமாக எத்தனையோ செலவுகள் வந்து போகின்றன. அப்படியொன்று வந்துவிட்டதாகக் கற்பனை செய்து கூட சேமிப்பு மனோநிலையை வளர்த்துக் கொள்ளலாம். வரவுக்கேற்ப திட்டமிட்டுச் சேமித்தால் அது நல்ல பலனைத் தரும்.

உதாரணத்துக்கு ஒரு சிறிய உண்டியலை வாங்கிக் கொள்ளுங்கள். தினமும் ஒரு பத்து ரூபா நாணயத்தைப் போடுவதைப் பழக்கமாகக் கொள்ளுங்கள். மாதம் அது ரூபா 300 ஆகும். வருடம் ரூபா 3600 ஆகும். இது ஒரு சிறிய கணக்கு. இதுவே இரட்டிப்பானால், மூன்று மடங்கானால்..!

இன்றைய நாட்களில் வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் அதிக சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்பவர்கள் பெண்களே. அது போல அதிக கடன் திட்டங்களிலும் பங்காளிகளாக இருப்பவர்களும் பெண்கள் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக நுண்கடன் திட்டங்களில் அதிகம் பெண்களே அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். கடனை எடுத்துவிட்டு அதிகம் அவஸ்தைப் படுபவர்களும் பெண்களே.

எனவே சேமிப்பை ஒரு கட்டாய பழக்கமாகக் கொண்டால் காலப்போக்கில் கடன் படுவதற்குத் தேவையற்ற சூழ்நிலை ஒன்று உருவாகும். கடன் படுவதால் முதலாவதாக நீங்கள் தொலைப்பது உங்கள் நின்மதியை. சிறிய தொகையானால் சிறிதளவு நின்மதியையும், பெரிய தொகையானால் உங்கள் மொத்த வாழ்க்கையையும் தொலைத்துவிடும் அபாயத்தைக் கொண்டிருப்பீர்கள்.

எனவே சேமிப்பு உங்களை என்றும் காக்கும். எனவே இதுவரை சேமிக்கின்ற பழக்கமற்றவர்கள், உங்களை நோக வைக்காதவாறு ஒரு சிறு சேமிப்பை இன்றே ஆரம்பியுங்கள்.

# அந்த ஒரு நிமிடம்...

எஸ்.கணபதி



எனக்கு என்னவோ அவனை அப்படித்தான் தெரிந்திருக்கிறது. நான் பார்ப்பது கூட உண்மை இல்லாதிருக்கலாம். கேட்பது கூட பல வாய்மொழிகளினூடாக வந்து திரிபடைந்திருக்கலாம். எனக்கு முழுமையாக அந்த விடயத்தைப் பற்றித் தெரியாத பட்சத்தில் நான் அதை நம்பக் கூடாது என்பது எனது முடிவு.

காலை வெளிச்சத்தில், அவன் அங்கு நிற்கின்ற பனை மரங்களில் ஏறும்போது இயந்திரத்தின் பாகமொன்று அசைவதைப் போல. மேலும் கீழுமாய் அசையும் அவன் திரட்சியான கைகளிலும், கால்களிலும் சூரிய வெளிச்சம் பட்டுத் தெறிக்கின்ற அழகினை பல தடவை நான் பார்த்து இரசித்திருக்கிறேன். அத்தனை கருமையான திரட்சியான உடலழகைக் கொண்டவன் மாணிக்கம்.

தினமும் காலை வேளைகளில் நான் பார்த்து இரசிக்கின்ற காட்சிகளில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு மரமாக ஏறி இறங்கிவந்து அவனது அந்தக் கறளேறிய சைக்கிள் அருகே வைக்கப்பட்டிருக்கும் சிறிய மஞ்சள் பிளாஸ்ரிக் பீப்பாயில் கள்ளை நிரப்பிக் கொள்வான். அவன் அந்தச் சைக்கிளை விற்கவோ அல்லது மாற்றவோ முற்பட்டதில்லை. அது அவனுக்கு அவனது தந்தையால் கொடுக்கப்பட்ட முதுசொம். பல ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

திருமணம் செய்து நீண்ட காலமாக அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. கோயில் குளம் என்றும், சாஸ்திர சம்பிரதாயம், நிவர்த்திக் கடன் என்றும் பிள்ளைகள் வேண்டிச் செய்யாத பிரார்த்தனைகள் ஒன்றும் பாக்கியில்லை. பிள்ளை ஒன்றைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற நப்பாசையில் அவனும் அனது மனைவியும் பல விடயங்களைச் செய்து உடலளவில் மாத்திரமல்ல, மனதளவிலும் களைத்துப் போய்விட்டனர். "இனி வேண்டாம்". என அந்த ஆசையை விட்ட போது மாணிக்கத்தின் மனைவி ஆஸ்மாவினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தாள்.

ஒரு மாலை வேளை. மாணிக்கம் தனது தாயாரைப் பார்க்கப் போயிருந்தான்.

"சொல்லுறன் எண்டு என்னைப் பிழையா விளங்கிக் கொள்ளாதை. நீ இன்னுமொரு கலியாணத்தைச் செய்யிறதை நான் ஒத்துக் கொள்ள மாட்டன். அதுவும் அவள் உயிரோடை இருக்கேக்கை. நானும் ஒரு பொம்பிளை தானே. நான் அவளின்ரை இடத்திலை இருந்தால் இதுக்கு ஒத்துக் கொள்ள மாட்டன்" தாய் சொன்னதைக் கேட்டு அவன் வெகுண்டெழுந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்துவிட்டான்.

மாணிக்கத்தின் மனைவிக்கு இழுப்பு வருகின்ற போதெல்லாம் அவளுக்கு உதவுபவர்களில் அயல் வீட்டு பவானியும் ஒருவள். அவ்வப்போது வந்து வெந்நீர் வைத்துக் கொடுப்பது தொடக்கம் ஆஸ்மாவை அடக்க அடிக்கும் பம்மைச் சரி செய்து கொடுப்பதுவரைக்கும் பவானி அவளுக்கு உதவுவாள்.



மாணிக்கத்தின் மனைவியைப் பொறுத்தவரை பவானி ஒரு உடன்பிறவாச் சகோதரியைப் போல...

பவானியைப் பொறுத்தவரை ஏ.எல் எடுத்துவிட்டு படிப்பை நிறுத்திவிட்டாள். அதற்கு மேல் அவளை படிக்கவோ வேலைக்கோ அனுப்புவதற்கு அவள் பெற்றோருக்கு விருப்பமில்லை. "கொஞ்சக் காலம் அவள் வீட்டோடை இருக்கட்டும். ஆராவதொருத்தன்ரை கையிலை பிடிச்சுக் குடுத்திட்டால் சரி. பொறுப்புத் தீர்ந்திது" என்று அவர்கள் எண்ணி இருந்தனர்.

**மாலை 5 மணி 15 நிமிடம் 06 செக்கன்கள்**

பவானி மாணிக்கம் வீட்டுக்கு வந்திருந்தாள்.

மாணிக்கம் வீட்டுத் திண்ணைப் பக்கம் எவரையும் காணவில்லை. அங்குமிங்கும் பார்த்தாள். படலை திறக்கின்ற சத்தம் கேட்டது. சைக்கிளை உருட்டியபடி மாணிக்கம் வந்து கொண்டிருந்தான். "கோப்பரேவனுக்குக் கொண்டு போய் கள்ளைக் குடுத்திட்டு வாறார் போலை" பவானி மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

"அக்கா எங்கை" பவானிதான் மாணிக்கத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"அவ அவவின்ரை தாயைப் பாக்கப் போயிட்டா. வரக் கொஞ்சம் சுணங்கும்" மாணிக்கம் சைக்கிளை முத்தத்திலிருந்த ஜாம் மரத்தோடு சாத்தியபடி பதில் சொன்னான்.

"அப்ப போட்டு அவ வந்தாப் பிறகு வாறன்" பவானி திரும்பினாள்.

"இந்தா இதைக் கொண்டு போய் சாப்பிடு" எனத் தனது கையிலிருந்த மிக்சர் பக்கற்றை அவளுக்குக் கொடுத்தான் மாணிக்கம்.

"வேண்டாம். உதை வையுங்கோ. அக்கா வந்தாப் பிறகு அவவோடை சேந்து சாப்பிடுவம்" என்று சொன்ன பவானியை இடைமறித்தான் மாணிக்கம்.

"அவவுக்கு வேறை கிடக்கு. இது உனக்கு." மாணிக்க பவானியின் கையில் பலமாக அந்தச் சரையைத் திணித்தபடி "நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேணும். செக்கலுக்கை வந்து உந்த லாம்பைத் துடைச்சுக் கொளுத்தித் தரவேணும்"

மாணிக்கம் அவளைப் பார்த்துச் சொன்னான். ஒன்றும் பேசாமல் பவானி போய்விட்டாள்.

**மாலை 5 மணி 50 நிமிடம் 39 செக்கன்கள்**

திறந்து கிடந்த படலையைச் சாத்தியபடி பவானிதான் வந்தாள். "எங்கை மாணிக்கண்ணை லாம்பும், மண்ணெண்ணையும்? திரி கிடக்கோ? போட வேணுமோ?" பவானி உரக்கக் கத்தினாள்.

"ஏன்ரி பிலத்துக் கத்திறாய்? மாணிக்கம் ஆட்டயில் நின்று வந்தான். திண்ணையில் பவானி கேட்ட எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். பவானி லாம்பைத் துடைத்து விளக்கை கொளுத்தி திண்ணைச் சுவர் பக்கம் வைத்துவிட்டுப் புறப்படத் தயாரானாள்.

"அப்பிடியே வந்தனி. தேத்தண்ணி வைச்சுத் தந்திட்டுப் போ." என்றான்.

"எனக்கு நேரம் போச்சுது. வீட்டை தேடுவினம். நான் போப்போறன்" அவள் சிணுங்கினாள்.

"அக்கா இல்லாதபடியால்தானே கேக்கிறன்" மாணிக்கம் மன்றாடினான்.

**மாலை 5 மணி 55 நிமிடம் 49 செக்கன்கள்**

மெல்ல சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். குசினியில் கங்குமட்டையும் காவோலையும் எரிகின்ற சத்தத்துடன் வெளிச்சமும் தெரிந்தது. பவானி தண்ணீரைச் சூடாக்கிக் கொண்டிருந்தாள்.

**மாலை 5 மணி 57 நிமிடம் 43 செக்கன்கள்**

மாணிக்கம் ஆட்டுக் கொட்டில் பக்கம் இருந்து வந்தான். அவன் எறிந்த சாராயப் போத்தல் காய்ந்த சருகுக் குப்பையில் போய் மௌனமாய் விழுந்தது. பிற விரல்களால் வாயைத் துடைத்து விட்டபடி மீசையை தடவிக் கொண்டான். மாணிக்கத்தின் உடல் முறுக்கேறிக்கிடந்தது.

**மாலை 5 மணி 58 நிமிடம் 28 செக்கன்கள்**

"தண்ணி கொதிச்சிட்டுது. எங்கை தேயிலைப் பேணியைக் காணேல்லை" பவானி சத்தமிட்டாள். நெருப்பின் வெளிச்சத்தில் பவானி இன்னும் அழகாக இருந்தாள். மீண்டும் அவள் சத்தமிட்டாள். மாணிக்கத்தைக் காணவில்லை. அப்படியே சமையலறையைவிட்டு வெளியே போவதற்காகத் திரும்பிய போது...

**மாலை 6 மணி 00 நிமிடம் 39 செக்கன்கள்**

மாணிக்கத்தின் இரும்புப் பிடியில் தான் மாட்டிக் கொண்டிருப்பதை பவானி உணர்ந்து கொண்டாள். அவனிடமிருந்து சாராய வாடை வீசியது. அவனின் உடல் வியர்த்திருந்தது. அவன் இன்னும் வலுவாகத் தன்னை இறுக அணைப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவன் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று எண்ணுவதற்குள் அவன் அவளை முத்தமிடத்தொடங்கினான்.

"மாணிக்க அண்ணை விடுங்கோ." அவள் கெஞ்சினாள். அவள் மூச்சு வாங்கியது. "மாணிக்க அண்ணை என்னை விடுங்கோ" அவள் பெலமாகக் கத்தத் தொடங்கியதும் மாணிக்கம் அவளின் வாயைத் தனது கைகளால் பொத்திக் கொண்டான்.

**மாலை 6 மணி 04 நிமிடம் 31 செக்கன்கள்**

மாணிக்கத்தின் வீட்டுச் சமையலயில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சமையலறைச் சாமான்கள் அங்குமிங்குமாகச் சிதறுகின்ற சத்தத்தின் நடுவே அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. கொதித்தது கேற்றிலிலுள்ள தண்ணீர் மட்டுமல்ல மாணிக்கத்தின் சரீரமும்தான்...

மறுநாள் வெந்நீரால் வெந்த காயங்களோடு வைத்தியசாலைக் கட்டிலில் மாணிக்கம் படுத்திருந்தான். அவனைச் சுற்றி நின்ற பொலிஸார் அவனது வாக்கு மூலத்தைப் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

"இளம் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தவருக்கு சுடுநீரால் அபிஷேகம்" என்ற செய்தியை அன்று பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன.

---

## மாத்திரைக் கதை

## நிறைவு



நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.

'எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே!' என்று ஓலமிட்டது.

தெருவோரத்தில் கிடந்த கடப்பாறை கூறியது:–

'ஏ குறுணி காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால், இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது.'


'அப்படியென்றால்?' என்று இழுத்தது குறுணிக்கல்.

கடப்பாறை சொன்னது:–

'நிறைவாகும்வரை மறைவாக இரு'

காசி ஆனந்தன்

## குனிவு



குனிந்த தலை குனிந்தபடியே மூட்டை சுமந்துசெல்லும் கழுதையை வேம்பில் இருந்த காக்கைகள் கவனித்து வந்தன. ஒருநாள் காக்கைகளில் ஒன்று மற்றதைப் பார்த்து, 'இந்தக் கழுதைமேல் உனக்கு இரக்கம் வரவில்லையா? எப்போது பார்த்தாலும் மூட்டை சுமந்து துன்பப்படுகிறதே' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டது.

'நாம் என்ன செய்யமுடியும்? கழுதைதான் தன்னைத் திருத்திக் கொள்ளவேண்டும்' என்றது மற்றக் காக்கை. 'ஏன் அப்படிச் சொல்கிறாய்?'

இறக்கைகளைக் கோதிக்கொண்டே இரண்டாம் காக்கை சொன்னது:–

'குனிந்துகொண்டே இருப்பவன் சுமந்துகொண்டே இருப்பான்'



# ஊடுருவி உலகநாதன்

ஊர்சுற்றிப் பார்க்கிறதில ஒரு சந்தோஷம் தான். அதனாலை தான் எங்கட சனம் விடுமுறை கிடைத்தால் ஊர் சுற்றிப் பார்க்க வெளிக்கிட்டு விடுவினம் பாருங்கோ. எனக்கு கூட ஊர்சுற்றிப் பார்க்கிறதில விருப்பம் வீட்டில கிடக்க மாட்டன் எங்கயாவது வெளிக்கிட்டுவிடுவன். அதனால் தான் எனக்கு ஊர்சுற்றி உலகநாதன் என்று பட்டப்பெயர் கூட வந்தது எனலாம்.

அதுசரி ஊர்சுற்றிப் பார்க்கிறதில எல்லோருக்கும் விருப்பம் தான் ஆனால் இப்ப பதவிக்கு வந்த சிலர் ஊர்சுற்றிப் பார்க்கினம் என்று அடிக்கடி பத்திரிகைகளில் செய்தி வருகிறதே. அப்படி என்ன ஊர்சுற்றிப் பார்க்கினம் என்று பார்த்தால் புனரமைப்பு இன்றி இருக்கும் வீதிகள் புனரமைப்பு இன்றி இருக்கும் பொது கட்டடங்கள் புனரமைப்பு இன்றி இருக்கும் குளங்கள் என்று பல குறைகள் இருக்கும் இடங்களை சுற்றிப் பார்க்கினமாம்.

சுற்றிப் பார்க்கட்டும் ஆனால் என்ன ஒரு வேலைத்திட்டமும் இல்லாமல் இப்படியே பார்வையிட்டார் என்றால் மட்டும் போதுமா?

சூரியன் உதிக்கும் கிழக்குப் பக்கம் உள்ள பிரதேச சபையின் தலைவர் பல குறைகளை பார்வையிட்டார் என்று சொல்லப்படுகிறது. அந்தக் குறைகளில் எத்தனை குறைகளை இவர் நிவர்த்தி செய்திருப்பார் என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

தலைவரைக் கேட்டால் தனது ஆளுகைக்குள் இருக்கும் பிரதேசங்களில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கு சபையில் நிதியில்லை என்று சொல்லுகிறார் பிறகேன் ஊர்சுற்றிப் பார்க்கிறார்.

என்ன செய்யமுடியும் அவரால் தனது பதவிக் காலத்தை முடிக்க வேண்டுமே தனது பதவிக் காலத்தில் சும்மா இருந்தார் என்று சனம் சொல்லும் எல்லோ அதனாலை பல குறைகளை நேரில் சென்று பார்வையிட்டு வந்தால் அந்தக் குறைகளை தீர்க்காவிட்டாலும் வந்து பார்த்த மனிசன் ஆச்சே என்று சனம் கதைக்கும் என்று ஓடி ஓடி பார்வையிடுகிறார் போலும்.

இது இவ்வாறு இருக்கையில் தலைவர் மீது இன்னுமொரு குற்றச்சாட்டு வந்து விழுந்திருக்கிறது அதாவது அரச வாகனத்தை தனது சொந்தத் தேவைக்கு பயன்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டை உறுப்பினர்கள் இவர் மீது சுமத்தியுள்ளனர்.

அரச வாகனத்தை சொந்தத் தேவைக்கு இவர் மட்டும் பயன்படுத்தவில்லை அதிகாரிகள் எல்லோரும் பயன்படுத்துகின்றனர் கேட்டால் தாங்கள் பயன்படுத்த அனுமதி இருக்கிறது என்று சொல்லுகினம். யாரும் பயன்படுத்தட்டும் பரவாயில்லை ஆனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றாத படியால் தான் இந்தப் பிரச்சினை கூட பெரிய பூதாகரமாக வெடித்துள்ளது.

உந்தப் பிரதேச சபையில இது பெரிய விடயமல்ல இவர் வருகிறதுக்கு முதல் இருந்த தலைவர் உட்பட செயலாளர் வரை பிரதேச சபையில் செய்த கூத்து இருக்கே பத்திரிகையில வெளிவந்து நாறின கதைகள் பலதை கோப்பாய் சண்முகம் எழுதியது ஞாபகத்துக்கு வருகிறது.

இந்தப் பிரதேச சபையில் முன்னர் பதவியில் இருந்த தலைவர் உட்பட செயலாளர்கள் வரை பதவி துறந்த கதை எல்லோருக்கும் தெரியும்.

இந்தப் பிரதேச சபைக்கு வருகிறவர்கள் எல்லோரும் பிரதேச சபை கட்டடத்தை மிளிரச் செய்வதில் தான் முன்னின்றனர். இவர் வந்தும் பிரதேச சபை கட்டடத்தை மேலும் மிளிரச் செய்த பாராட்டுக்குரியவர்.

யாழில் வறிய பிரதேசம் இந்தப் பிரதேசம் என்று சொன்னால் மட்டும் போதாது அந்த நிலையை இல்லாமல் செய்வதற்கு பாடுபட வேண்டும். அதற்காகத் தான் மக்கள் இவருக்கு வாக்களித்தனர்

வாகனம் ஓடித்திரியிறது என்றால் வேலை நடக்கிறது என்று யார் சொன்னது. இவரின் வாகனம் அடிக்கடி ஓடித்திரிகிறது. இவரின் பதவிக்காலம் முடிவதற்கு முன் ஒன்றையாவது செய்தேன் என்று மக்கள் பேச வேண்டும் இல்லாது போனால் முதல் இருந்த தலைவர் போல பதவியில் இருந்து துரத்திவிடுவார்கள்.

300 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட வீதிகள் புனரமைப்பு இன்றி இருக்கிறது. போடப்பட்ட வீதிகள் அரையும் குறையுமாக இருக்கின்றன. சில வீதிகள் புனரமைப்பு முழுமையாக்கப்படாமல் இருக்கும் போது புதிய வீதிகள் புனரமைப்பு நடைபெறுகின்றன.

விவசாய பிரதேசமான இந்த பிரதேச வீதிகள் அனைத்தும் கல்வீதிகளாக புனரமைப்பு செய்யப்பட்டன. இன்று புனரமைப்பு இன்றி காணப்படுகின்றன.

மக்களின் கடிதங்கள் இந்த பிரதேச சபையில் குவிகின்றன. என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. குறைபாடுகள் இருக்கிறது என்று சொல்வதற்காக இவரை மக்கள் தெரிவு செய்யவில்லை.

இந்தப் பிரதேசத்தில் சமீபத்தில் புனரமைக்கப்பட்ட அம்மன் கோயில் வீதியைப் பார்த்தால் தெரியும் விமான ஓடு பாதை போல் ஏறி இறங்கும் இந்த வீதிப் புனரமைப்பு வீதியின் இடையில் இருந்து ஆரம்பித்து இடையிலேயே நின்றுள்ளது.

இந்த வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கிய பாராளுமன்ற உறுப்பினர் இதே பகுதியில் வேறோர் வீதி புனரமைக்கும் நிதி ஒதுக்கியுள்ளார். மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக கொஞ்சம் கொஞ்சமாக செய்கிறார் போல.

தீர்வெடுக்கப் போனவை இப்ப வீதி புனரமைப்பில் வந்து நிற்கினம். கம்பெரலியா என்று நிதி வரும் போது இந்த நிதியைப் பயன் படுத்தி புனரமைப்பில் இருக்கும் குறைவீதிகளை புனரமைப்பு செய்வார்கள் என்றால் அதுவும் இல்லை. அந்த நிதியை புனரமைப்பு இன்றி இருக்கும் வேறோர் வீதிக்கு ஒதுக்குகின்றனர்.

நெத்தலியைப் போட்டு இறால் பிடிக்கிற கதை கேட்டிருக்கிறம். ஆனால் வீதிப் புனரமைப்பில் முழுமையாக இல்லாமல் குறிப்பிட்ட தூரம் புனரமைப்பு செய்து விட்டு அடுத்த வீதி புனரமைப்பில் இறங்கிற கதை புதிதுதான்.

இதற்குள் தான் மக்களிடம் இருந்து ஆதரவைப் பெற முடியும் என்று நினைக்கினம்.

சட்டம் கதைக்கிற இவர் பதவிக்கு வர முதல் தான் பதவிக்கு வந்தால் மக்களிடம் இதைச் செய்வேன் அதைச் செய்வேன் என்று சத்திய வாக்கு கூறிவிட்டு இன்று தான் கூறியதை செய்வதற்கு சட்ட நடைமுறை என்று சொல்லுகிறாராம் அப்படி என்றால் இவர் விட்ட சத்திய வாக்குகளை மக்களிடம் வாபஸ் பெற்றிருக்க வேண்டும்.

செயலாளரும் இவரும் முடியாது என்று சொல்வதற்காக கதிரைக்கு வந்தவர்களா? தங்கள் பிழைப்பை பார்த்துக் கொள்வதற்கு வந்தவர்களா? என்று சனம் கேட்குது. செயலாளரை விடுங்க அவர் அரசுக்கு சேவை செய்ய வந்தவர் இவரின் நிலைமையும் அரசுக்கு சேவை செய்வது போல் எல்லோ இருக்கிறது. கேட்டால் தான் மக்கள் பிரதிநிதி என்று கதைவேறு.

இவரின் பிரதேச ஆளுகையின் கீழ் உள்ள பிரதேச செயலக கட்டட திறப்பு விழாவுக்கு வந்த பிரதமரிடம் தமிழ் எம்.பி ஒருவர் இவரை அறிமுகம் செய்து வைத்து நிகழ்வில் இவரை பிரதமர் அருகில் நிற்பதற்கு சான்ஸ் வாங்கிக் கொடுத்தாரம்.

பிரதமர் அருகில் நின்றது இவருக்கு பெரிய சந்தோஷமாம். தன்னையும் பிரதமர் மதித்துள்ளார் என்று சந்தோஷமாம்.

தான் பதவிக்கு வந்த எல்லாவற்றையும் மறந்துவிட்டார். பிறகு எப்படி இவரிடம் மக்கள் சென்று தமது கோரிக்கைகளை முன்வைக்க முடியும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இவரும் முன்னைய தலைவர் போல் மக்களின் கோரிக்கை கடிதங்களை அலுமாரியில் பாதுகாப்பாக வைத்துவிட்டு செல்லவுள்ளார் என்பது தான் கவலை தரும் விடயமாகும்.

பகுதி V



மேற்கூறப்பட்ட சில அம்சங்கள் வழமையான கூக்குரல்களே. ஆயினும் இப்பொய்யான கருத்துக்கள் பல்வேறு தவறான விளக்கங் களையும் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையையும் நீதிப்படுத்தின.

குறிப்பாகப் பல சிங்களவர்கள் இவ் இனக் கலவரங்களை எதிர்பாராத நிகழ்வா கக் கண்ட போதும் சிறுபான்மையினரின் தீவிர எதிர்ப்பிற்குப் பெரும்பான்மை இனத்த வரின் பதிலடி நடவடிக்கை இது எனச் சமாதானம் கூறப்பட்டது. சிங்களவர் முஸ்லீம்களுக்கிடையே 1915இல் நடைபெற்ற கலவரம் பற்றி அனகாரிகதர்மபால அவமதிப்பை இனிமேலும் பொறுக்க முடியாது எனக் கூறினார். நாடு முழுவதும் ஒரே நாளில் முஸ்லீம்களுக்கு எதிராகத் திரண்டெழுந்தனர். இதற்கு மேலாகச் சிங்களவர்களில் ஒரு பகுதியினர் இனப்போராட்டத்தைப் பண்டைய போராட்டத்தின் தொடர்ச்சியாக கண்டனர். சிங்களவரும், தமிழரும் சரித்திர காலத்து எதிரிகள் துட்டகைமுனுவுக்கும், எல்லாளனுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம் சிங்கள தமிழரிடையே ஏற்பட்ட அரசியல் போராட்டம் சோழர் படையெடுப்பை எதிர்த்த சிங்கள மன்னர்கள் அண்மைய பிரச்சாரத்தில் மீண்டும் உயிருட்டப்பட்டு புகழப்பட்டனர். 1983 ஜூலைக்குப் பின்னர் சிங்கள கட்சிகளின் தலைவர்களும், மதகுருமாரின் பலரும் விடுத்த அறிக்கைகள் இதற்கு சான்றாகும். சுருங்கக் கூறின் இவ்விளக்கம் தற்பாதுகாப்பு வன்முறை என நீதிப்படுத்தப்படுகின்றது.

இன்றும் இந்த கருத்து சமாதானத்திற்காக யுத்தமெனவும், மீட்புயுத்தம் எனவும் தமிழர்கள் மீது மிருக வன்முறையை சிங்கள அரசு நிலைநாட்டி உள்ளமை அனைவரும் அறிந்ததே. இலங்கையில் இனமுரண்பாடு 1948ல் நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து விடாது தொடர்ந்துள்ளது. இது 1956ல், 1958ல், 1977ல், 1985ல், 1983ல் என நீண்டுகொண்டே வந்துள்ளது. இதில் 1983 ஜூலையில் இடம்பெற்ற கலவரங்களும் அதன் தொடர் நடவடிக்கைகளும் நாட்டின் உறுதிப்பாட்டின் அத்திவாரத்தையே ஆட்டங்காண வைப்பதற்கு காரணமாக இருந்தன. தொடர்ந்து வாக்குரிமையை பறித்தல், பல்கலைகழக அனுமதிகளை தரப்படுத்தல் என்பவற்றில் தொடங்கி மொழி பாகுபாடு, மற்றும் தொழில் கொள்கைகள், தமிழ் பிரதேசங் களை அபிவிருத்தி செய்யாமை, தமிழர் தாயகத்தில் அரச ஆதரவுடனான குடியேற்றம், புத்த விகாரைகளின் தோற்றம் என்பவை வரையிலான ஒரு தொடர் வரிசையான சட்டவாக்க, மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கூடாக இலங்கை தமிழர் மீது சிங்கள பெரும்பான்மை அதன் மேலாதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது இது அண்மையில் யாழ்பாணத்தில் நாவற்குழி பிர தேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றியதுவரை புத்தவிகாரைகள் அமைப்பதும் தொடர்ந்த வண்ணம் இருப்பது இவ்வினமுரண்பாடுகளுக்கு மேலும் தூபமிடும் நடவடிக்டகைகளாகவே எண்ணத்தொன்றுகின்றது. இப்பின்னணியில் தமிழர்களின் தனிநாட்டு கோரிக்கை போராட்டத்திற்கு வழிகோலியதுடன், இன்றை வரையும் அது தொடர்ந்த வண்ணமுள்ள தனையும் அவதானிக்கலாம். இவ் இனமுரண்பாட்டு தீர்விற்கான வழிகளை காலமே தீர்மானிக்கும்.

## இனமுரண்பாடுகளை வெளிப்படுத்தும் கலைப்படைப்புக்கள்

புராண, இதிகாசங்களிலும், மரபுக் கதைகளிலும், பிரபுக்களை வர்ணிக் கும் வரலாற்று நினைவுறுத்தல்களிலும் இந்திய உப கண்டத்தினின்று எழக்கூடிய படையெடுப்புக்கள் ஏற்படுத்தும் அச்சமும் பெரும்பான்மை இனத்தவரிடையே சிங்கள மிதவாதப் போக்கை ஏற்படுத்த உதவின. இவ்விதத் தீவிரப் போக்குப் பெரும்பான்மையோருக்கும், சிறுபான்மையோருக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்தின. நாட்டின் வரலாற்றில் தென்னிந்திய மன்னர்கள் இடையிடையே நடாத்திய படையெடுப்புக்கள் இதனை நியாயப்படுத்த உதவிற்று.

நாட்டின் பெரும்பான்மை இனத்தின் வரலாற்றை விபரிப்பதாகக் கொள்ளும் புராதன பதிவேடாகிய மஹாவம்சத்தின் முற்பகுதியில் அடங்கும் கற்பனை விளக்கங்கங்களும், புனை கதைகளுமே இவ்விதப் பழமைக் கொள்கைப் போக்குகளுக்கு ஆதாரமாக இருந்தன. "வையகம் வாழ்ந்திட வழிகாட்டியவன் பூவுலகோரை நெறிப்படுத்திச் சும்மா இருக்கும் உயர் நிலையை அடைந்ததும், தேவர் மத்தியில் நிர்வாணமாய் சாய்ந்திருந்த உயர் ஞானியும், வாக்கில் உயர்ந்தோனும் அருகே நின்ற தேவேந்திரனிடம் கூறியதாவது. "இலல"(Lala) நாட்டிலிருந்து சிங்கபாகுவின் மைந்தனாகிய விஜயன், தன் தொண்டர் எழுநூ ற்றவருடன் இலங்கையை வந்தடைந்துள்ளான். தேவேந்திரனே! எனது நல்லறம் இலங்கையிலேயே நிலைத்து நிற்கும். ஆகவே, அவனையும், அவன் தொண்டர்களையும், இலங்கையையும் பாதுகாப்பாயாக!" எனக் கூறப்பட்டதாக மஹாவம்சம் விளக்குகின்றது. இக் கொள்கையின் உள்ளடக்கத்தினைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

(அ) உலக மக்களினின்றும் சிங்கள இனத்தவர் வேறுபட்டவர்.

(ஆ) அவர்களே இலங்கை மண்ணுக்குரியவர். ஆகவே அவர்களே அங்கு வாழத் தகுதியுடையவர்கள்.

(இ) சுற்றியுள்ள இனங்கள் நாட்டைக் கைப்பற்றும் ஆபத்துண்டு. தப்புவதற்கிட மில்லை. ஆகவே இனம் அழிக்கப்படும் ஆபத்து என்றும் உண்டு.

(ஈ) வரலாறு காலந்தொட்டு இலங்கையில் பௌத்த தர்மம் புனிதமாகப் பேணப்பட்டுள்ளது. இதனால் நாடு தர்மத்திற்கு ஒளிமயமான எடுத்துக்காட்டாக உள்ளது.

(உ) உலகில் பௌத்த தர்மத்தைப் பேணி வளர்த்துப் பரப்பும் பொறுப்பு சிங்கள பௌத்தர்களிடமே அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே சிங்கள பௌத்தக் கொள்கை வேரூன்றப்பட்டது.



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

கடந்த வாரம் ஒரு மங்களகரமான விடயத்திற்குப் பத்திரிகை அடிக்க வேண்டும். ஒரு அச்சகத்திற்குச் சென்றோம். அச்சக வாசலில் அறிவித்தல் பலகை ஒன்று தொங்கியது. பாதணிகளுடன் உட்செல்ல வேண்டாம் என எழுதி அதற்கு அடுத்தால்போல் பாதணிகள் இரண்டின் படமும் அச்சிட்டு அதற்கு மேல் சிவப்பு நிறத்திலான புள்ளடியும் இட்டுக் காண்பித்திருந்தனர். அதாவது வாசிக்கக் கூடியவர்கள் அந்த அறிவிப்பில் உள்ளவற்றை வாசித்துவிட்டுப் பாதணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லலாம். கல்வி அறிவற்றவர்கள் அந்த அறிவிப்பில் உள்ள குறியீட்டுப் படங்களைப் பார்த்துவிட்டுத் தமது பாதணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லலாம்.

நாமும் அந்த அறிவித்தலிலுள்ளதைப் பின்பற்றி எமது பாதணிகளைக் கழற்றிவிட்டு உள் சென்றோம். உள் சென்று பார்த்தபோது அங்கே ஏற்கனவே வந்தவர்களில் இருவர் பாதணிகளுடன் அங்குள்ள நாற்காலியில் அமர்ந்திருந்தனர். சிறிது நேரத்தின் பின் அவர்கள் இருவரையும் பார்த்துச் சொன்னேன் "வாசலில் தொங்கும் அறிவித்தலைப் பார்க்காது வந்துவிட்டீர்கள் போல் இருக்கிறது" என்று சொல்லி அறிவித்தல் பலகையைக் காட்டினேன்.

அதில் இருந்த இருவரில் ஒருவர் உடனடியாக எழுந்து சென்று வாசலில் பாதணிகளைக் கழற்றிவிட்டு அமர்ந்திருந்தார். அவர் குனிந்து தனது பாதணிகளைக் கழற்றும் போது பார்த்தேன் அவரின் கழுத்தில் சிலுவை ஒன்று தொங்கியது. வந்து தனது இருப்பிடத்தில் இருந்து கொண்டு "மன்னிக்கவும். அறிவித்தலைப் பார்க்காது வந்து இருந்துவிட்டேன். சுட்டிக் காட்டியதற்கு நன்றி!" என்று என்னைப் பார்த்துச் சொன்னார்.

அங்கிருந்த மற்றவரோ "என்னைப் பாதணிகளைக் கழற்றிவிட்டு வரச் சொல்ல நீ யார்?" என்பதுபோல முறைத்துப் பார்த்துவிட்டு தலையைத் திருப்பிக் கொண்டார். பின்னர் நான் கேள்விப்பட்டேன் அவர் வட மாகாணக் கல்விச் சேவையிலுள்ள ஒரு அதிகாரி என்று. எனது அனுபவத்திலே அதிகம் படித்தவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களே அதிகம் சட்டத்தை மீறுகிறார்கள். அவர்களே கீழ்ப் படியவும் மறுக்கிறார்கள்.

அதி வேகத்தில் வாகனங்களை ஓட்டக் கூடாது என்கிறது சட்டம். ஆனால் அதிகம் படித்தவர்களே அச்சட்டத்தை மீறித் தண்டப் பணம் செலுத்துபவர்களாகக் காணப்படுகிறார்கள். தலைக் கவசமில்லாது மோட்டார் சைக்கிளை ஓட்டக் கூடாது என்கிறது சட்டம். அதையும் அவர்களே அதிகம் மீறுகிறார்கள். ஒரு மனிதன் நாகரீகமாக இருக்கிறான் என்று சொன்னால் அவன் அதிகம் சட்டத்தை மதிப்பவனாக இருக்கிறான். அவனே கட்டளைக்குக் கீழ் படிபவனாகவும் இருக்கிறான் என்று அறியலாம். விலை உயர்ந்த ஆடை அணிகலனோடு இருப்பதையே இன்று நாகரிகம் என்று தவறாக மக்கள் விளங்கிக் கொண்டுள்ளனர்.

முன்பு சொன்ன செருப்புச் சம்பவத்திலும் செருப்பைக் கழற்றாது அடம்பிடித்தவரும் அழகாக உடை அணிந்திருந்தார். விலை உயர்ந்த கைப்பை ஒன்றினையும் கையில் வைத்திருந்தார். கால் விளிம்புகளில் பித்த வெடிப்பென்று ஒன்றும் இல்லை. மொத்தத்தில் அவர் வெளித்தோற்றம் ஒரு மேட்டுக் குடியைச் சேர்ந்தவர் என்றதைச் சொல்லாமல் சொல்லியது. அவர் எந்த உயரத்து மனிதராகவும் இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை அவர் தாழ்ந்தவர். அந்த அச்சக உரிமையாளர் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தானே அந்த அறிவித்தலை எழுதி வைத்திருக்கிறார். சரி அதனைப் பாராது வந்திருக்கலாம். இன்னொருவர் சுட்டிக் காட்டிக் கூட அவரால் அதனை மதிக்கமுடிய வில்லை என்றால்? என்னைப் பொறுத்தவரை அவர் தாழ்ந்தவரே!

இதே போல இப்போது வட மாணக் கோயில்களில் திருவிழாக்கள் தொடங்கிவிட்டன. எங்கு பார்த்தாலும் சோடனையும், பந்தல்களும், ஒலி பெருக்கிகளுமாய் விழாக்கள் களைகட்டியிருக்கின்றன. ஆனால் கோயிலுக்குப் போகிறவர்கள் காதுச் சவ்வுகள் கிழியக் கூடியதாகச் சத்தம் வைத்துப் பாட்டுகளை ஒலிபெருக்கிக் கொண்டிருந்தனர் கோயில் சொந்தக் காரர். சரி பாட்டுகளைத்தான் சத்தமாக ஒலிபரப்புகிறார்கள் என்றால் பிராமணர் சொல்லும் மந்திரத்தையுமா இப்படிச் சத்தமாகவா ஒலிபரப்புவார்கள்? சுலோகங்களையும், மந்திரங்களையும் அமைதியாகச் சொல்ல வேண்டும் என்று சொல்கின்றன ஆன்மிக நூல்கள். சத்தத்தைக் தாங்க முடியாத அங்கு நின்றவர்களில் ஒருவர் "கடவுளுக்குமா காது செவிடாகப் போய்விட்டது?" என்று கேட்டார். எவ்வளவு வெட்கக் கேடான விடயம்.

அந்த ஒலிபெருக்கிகளின் சத்தத்தைத் தாங்க முடியாத பட்சத்தில் கோயிலுக்குள் சென்று ஒலி பெருக்கிக் கருவிகளைக் கையாளுபவரிடம் "சத்தத்தைக் கொஞ்சம் குறைக்கக் கூடாதா?" என்று கேட்டேன். "திருவிழாக் காரர்கள்தான் எனக்குப் பணந்தருகிறார்கள். அவர்கள் தான் அதிக சத்தத்தை வைக்குமாறு சொல்லி இருக்கின்றனர். அடுத்த ஊரிலுள்ள மக்களுக்கும் கேட்க வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். எனவே அவர்கள் சொல்லாது நான் ஒலியைக் குறைக்க மாட்டேன்" என்றார் அவர்.

அந்தக் கோயிலுக்கு அருகாமையில் ஒரு பள்ளிக் கூடம் உண்டு. முன்பள்ளிகள், வாசிகசாலைகள் என்று பல பொது நிறுவனங்களும் இருக்கின்றன. பாடசாலைகளிலே பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. இப்படியாக ஒலி பெருக்கிகளை வைத்துச் சமூகத்துக்கு எதுவித பயனுமற்ற வாறு நடவடிக்கைகளை மேற்கொள்வது, விழாக்களைக் கொண்டாடுவது எந்த வகையில் நியாயம் என்று தான் நான் கேக்கிறேன். வயிரமுத்து கேட்பதில், சொல்வதில் நியாயம் இல்லை என்றால் நேரடியாகச் சொல்லிவிடுங்கள். இனிமேல் இது போன்ற காரியங்கள் பற்றிப் பேசுவதை விட்டுவிடுகிறேன். சின்ன விடயங்களாக இருக்கலாம். பார்க்க நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நெறி கெட்ட மனிதர்களை நினைக்க ..நினைக்க" என்றுதான் பாட வேண்டுமோ! சொல்லுங்கள் பார்க்கலாம்.



# கடவுளுக்கு ஒரு கடிதம்

எரிகின்ற விளக்குகள் கை கூப்பி உன்னை வணங்கட்டும்.

எனக்கு அந்த வணக்கம் அலுத்து விட்டது.

இது ஒன்றும் மிருதங்கம் அல்ல, ஒரு பக்கத்தையே தட்டிக் கொண்டிருக்க!

விசுவாசம் என்பது ஒரு பக்கத்தில் மட்டுமே இருப்பதில் பொருளில்லை: அந்தப் பக்கத்திலும் அது இருந்தாக வேண்டும்.

பொல்லாத மனைவியைக் கூட கணவன் ஓரிரவில் இணங்க வைத்து விடுகிறான்.

இறைவா, நீ கல்தானா?

உன்னை நேசித்தவர்கள், உனக்கு லட்சோப லட்சமாகக் கட்டிக் கொடுத்தவர்கள். அனைவரையும் நீ உன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டாய்.

யார் யார் என்னை மதிக்கவில்லையோ அவர்களே நிம்மதியாக வாழ்கிறார்கள்.

மேகத்தை மதிக்காத கடலில் தான் மழை பெய்யும் என்றால், உன் யோகத்துக்கு என்ன பெயர் வைப்பது.?

நீ செவிடல்ல என்றால், என்னைக் கேள்!

நீ குருடல்ல என்றால் என்னைப் பார்!

நீ நொண்டியல்ல என்றால், என்னிடம் வா!

நீ முடமல்ல என்றால், என்னை அணைத்துக்கொள்!

உனது சௌந்தர்ய லஹரியில் நான் என்னைப் பறிகொடுத்தது போல எனது தத்துவ விசாரத்தில் நீ உன்னைப் பறி கொடுத்திருக்க வேண்டும்.

உனது சகஸ்ரநாமத்தை நான் உச்சரிப்பது போல, எனது ஒரு பெயரை நீ உச்சரித்திருக்க வேண்டும்!

உன்னை நான் நினைப்பது போல, என்னை நீ நினைக்கவில்லையே, ஏன்?

நமது இருதயங்கள் வேறு வேறு திசைகளில் பயணம் செய்கின்றனவா?

நான் மலரைப் பாதுகாக்கும்போது, நீ முள்ளைப் பார்க்கிறாயா?

நான் கயிலையங்கிரியைப் பார்க்கும் போது, நீ கன்னியாகுமரிக் கடலைப் பார்க்கிறாயா?

நான் பூபாளம் பாடும்போது, நீ நீலாம்பரி பாடுகிறாயா?

என் இறைவனே!

அசல் ஒட்டகங்கள் பாலைவனத்தில் பயணம் செய்யும், நீயே கடலுக்குள் நீச்சலடிக்கும் விசித்திரமான ஒட்டகம்.

காளமேகம் உன்னை நையாண்டி செய்ததை இப்போதுதான் நான் நன்றாக ரசித்தேன்.

பெற்ற தகப்பன் பிள்ளையைக் கவனிக்காமல், பிள்ளையிடம் இருந்து பாசத்தை மட்டும் எப்படி எதிர்பார்க்க முடியும்?

அன்பு என்பது ஒரு வழிப்பாதையல்ல, கொடுக்கலாம் வாங்கக் கூடாது என்பதற்கு.

சரியோ, தவறோ, நீயும் சமமாக உட்கார்ந்து தான் பேசியாக வேண்டும்.

உன்னை உச்சத்தில் வைத்து நான் பள்ளத்தில் உட்கார்ந்தால், நான் வெறும் பக்தன் பக்கத்தில் உட்கார்ந்தால் நண்பன்.

பக்தர்கள் பலர் கிடைக்கலாம், நண்பர்கள் சிலர் தான் கிடைப்பார்கள்.

உனது ராமாவதாரத்தில் குகன் கிடைத்தான்

கிருஷ்ணாவதாரத்தில் அர்ஜுன் கிடைத்தான்

நீ அவதரிக்காத காலத்தில் நான் கிடைத்தேன்!

மற்றவர்களிடம் நீ எதிர்பார்ப்பதைப் போல, என்னிடம் நீ சரணாகதியை எதிர்பார்க்க முடியாது.

நான் மற்றவர்களை விட வித்தியாசமானவன்.

உன்னை விட அதிகமாகத் தவறுகளைச் சுட்டிக்காட்டும் வல்லமை படைத்தவன்.

நீயோ காலம் தாழ்ந்து நீதி வழங்குபவன்.

நானோ காலத்தால் அதைச் செய்ய விரும்புபவன்.

நமது உள்ளங்கள் விசித்திரமானவை. உறவு ஆச்சரியகரமானது.

இந்த உறவை நானே வலுப்படுத்திக் கொண்டேன், உன்னை நம்பி.

நீயோ ஏன் என் தோளில் ஏறி உட்கார்ந்து கொண்டு நாத்திகர்களை உன் தோளில் உட்கார வைத்திருக்கிறாய்!

நான் உன்னை மட்டும் சுமக்கவில்லை: அவர்களையும் சேர்த்துச் சுமக்கிறேன்.

உமது பன்னீர் எப்பொழுதுமே சாக்கடையில் தான் ஊற்றப்படும் என்றால், நான் குளக்கரையில் உட்கார்ந்து ஆவதென்ன?

இறைவா,

வாழ விடு: இல்லையேல் வழியை விடு!

எனது பாத்திரங்களை உன்னைக் கொண்டே நிரப்ப வேண்டும் என்று நான் எண்ணியதில்லை. ஆனால் அவற்றில் நீயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

உன்னிடம் நான் கோடான கோடி சொத்துக்களை கேட்கவில்லை:

நீண்ட கால வாழ்வைக் கேட்கவில்லை:

பதினெட்டு வயதில் துள்ளிக் குதித்த அந்தக் கால்கள் இப்போது வேண்டும்!

பதினாறு வயதிலேயே உன் தேரை அழுத்திய அந்தக் கைகள் இப்போது வேண்டும்.

எனக்கு நீயே தங்க புஸ்பம்: நீயே தாது புஷ்டி லேகியம்!

உலகத்தின் மகா மருத்துவமனை · நாம் அண்டி நிற்கிறோம் என்று நான் தினந்தோறும் பூரித்து நிற்பேனே, அந்த உள்ளத்தின் உற்சாகத்தை மீண்டும் எனக்குக் கொடு.

கடந்து போன எனது காலங்கள் கனவு கண்டவையாக இல்லாமல் கண்ணில் கண்டவையாக என் நினைவுக்கு வரவேண்டும். ஒரு பிறப்பிலேயே மறு பிறப்பு... எய்திய வயது பின்னோக்கிச் செல்லுதல் - சிலருக்கு இவை வாய்த்திருக்கின்றன.

அவர்களை விட, உனக்கு நான் நெருங்கியவனில்லையா?

1978 நவம்பர் 22 ஆம் திகதி இதை நான் உனக்கு விண்ணப்பிக்கிறேன்.

1978 டிசம்பர் 28 ஆம் திகதி நான் மிகவும் புது மனிதனாக வேண்டும்.

இல்லையென்றால், நீ எனது சந்நிதானத்துக்கு வரவேண்டியிருக்குமே தவிர, நான் உனது சந்நிதானத்துக்கு வரமாட்டேன்.



• கண்ணதாசன்

## ஜெருசலேம் யாத்திரை-16
## பயண அனுபவங்கள்

- ஏ.ஜே.ஞானேந்திரன்



# 2000 வருடப் படகு

நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் எங்களோடு கலிலேயாக் கடலாவது யோர்தான் நதியாவது வந்து நட்புக் கரங்கள் நீட்டின. கலிலேயாக் கடல் என்னவோ ஒரு ஆறு மாதிரித் தோன்றியது. அதைக் குளம் என்று கூட இணையதளம் வர்ணிக்கிறது. அக்கடலில்தான் இயேசு சீடர்களுடன் மீன் பிடித்தார். அத்தண்ணீரின் மீதுதான் நடந்தார். கலிலேயாக் கடலில் பெரிய படகில் ஒரு மணி நேரம் குழுவாகப் பயணம் செய்த பிறகு அருகிலிருந்த அருங்காட்சியகத்துக்கு சென்றோம். கலிலேயா அருங்காட்சியகத்தில் இருக்கும் பழமையான முதல் நூற்றாண்டின் படகை இயேசுவின் படகு என்றும், கலிலேயாக் கடலின் படகு என்றும் அழைக்கிறார்கள். இப்படகு 1986-ஆம் ஆண்டில் தான் கண்டு பிடிக்கப்பட்டது. கலிலேயாக் கடலின் வட மேற்குப் பகுதியில் இருந்து எடுக்கப்பட்டது. 27 அடி நீளம், 7.5 அடி அகலம், 4.3 அடி உயரம் உள்ள படகின் மீதமிருக்கிறது. கலிலேயாக் கடலின் நீர் வற்றியபோது, இதைக் கண்டெடுத்தார்கள்.

இப்படகைக் காப்பாற்ற முடிந்ததற்குக் காரணம் இப்படகை மண் மூடியிருந்ததால். 2000 வருடங்களாக தண்ணீர் இதை அரிக்கவில்லை. இதை மீட்டெடுத்தப் பின்பும் இப்படகை அப்படியே ஒரு இரசாயனக் கலவையில் பல நாட்கள் வைத்து காத்த பின்னரே மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. ஆனால் இதை இயேசுவோ அல்லது அவரது சீடர்களோ பயன்படுத்தினர் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இப்படகு இங்கிருப்பதால், இந்த அருங்காட்சியகத்தை இயேசுவின் படகு அருங்காட்சியகம் என்று அழைக்கிறார்கள்.

**ஏழு சுனைகளின் இடம்**

அடுத்தது டாப்கா.(Tabgha Capernaum) ஹீப்ரூ மொழியில் Ein Sheva என்கிறார்கள். ஏழு சுனைகளின் இடம் என்று பொருள்படும். வடக்கு இஸ்ரவேலில் உள்ள கலிலேயாக் கடற்கரையில்தான் கப்பர்நகூம் எனும் அழகிய ஊர் இருக்கிறது. அது அக்காலத்தில் மீன்பிடிப்பவர்கள் வாழும் இடம். அவ்வூரில் உள்ள பேதுருவுடைய மாமியாரின் வீட்டை, அவர் வாழும்போது எப்படி இருந்ததோ அதே நிலையில் பார்க்க முடிந்தது. யோவான், அந்திரேயா, யாக்கோபு, மற்றும் வரி வசூலிக்கும் மத்தேயு ஆகியவர் களுடைய வீடுகளும் அதே ஊரில்தான் இருந்தன. அதற்கு அருகிலேயே synagogue என்று கூறப்படும் யூதரின் கோயில் பாழடைந்த நிலையில் கண்டு புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். ஒரு ஓய்வு நாளில், இயேசு இக்கோயிலில் போதகம் செய்ததாகவும், பிறகு கெட்ட ஆவியுடைய ஒரு மனிதனுக்கு சுகம் கொடுத்ததாகவும் பைபிளில் வாசிக்கிறோம். பிறகு பேதுருவின் மாமியாரின் வீட்டில் ஒருவருக்கு ஜுரத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

கலிலேயக் கடலின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இங்குதான் இயேசு 5,000 பேர்களுக்கு போஷித்தது. மேலும் அவர் அமர்ந்திருந்த கல்லை அப்படியே பாதுகாத்து வருகின்றனர். இயேசு ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் மக்களுக்கு அற்புதமான விதத்தில் உணவளித்தார் என்னும் செய்தி பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. அப்பம், மீன்கள் பல்கிப் பெருகியதையும், உயிர்த்தெழுந்த பின்பு நான்காவது தடவையாக யேசு தோன்றிய பேதுருவைச் சந்தித்த இடம் என்பது இங்கேதான் என்பதை பாரம்பரியமாக இங்கே ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். 1799இல் நெபோபோலியனின் முற்றுகைக்கு இப் பிரதேசம் ஆளாகி இருக்கின்றது.

**அப்பங்களும் மீன்களும் பலுகிய கோவில்**

இங்குதான் பிரசித்தமான ஒரு தேவாலயம் இருக்கின்றது. அப்பங்களும் மீன்களும் பலுகிய கோவில் (Church of the Multiplication of Loaves and Fishes). சுருக்கமாக பலுகல் கோவில் என்பது இஸ்ரவேலில் கலிலேய கடற்கரைக்கு வடமேற்கில் டப்கா எனும் இடத்தில் அமைந்துள்ள ஓர் உரோமன் கத்தோலிக்க கோவில் ஆகும். தற்போதுள்ள கோவில் அதற்கு முற்காலத்தில் இரு கோவில்கள் இருந்த அதே இடத்தில் அமைந்துள்ளது. கி.மு.4ஆம் நூற்றாண்டில் சிறிதாக ஒரு வழிபாட்டு ஸ்தலத்தை கட்டினார்கள். யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஒருவரே இதைக் கட்டினார். 5ஆம் நூற்றாண்டில் இது பெரிய தேவாலயமாகக் கட்டப்பட்டாலும், அரபுப் படையெடுப்பில் அழிவைச் சந்தித்து,கி.மு 614இல் பாரசீகப் படையினரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. 18ஆம் நூற்றாண்டில் இந்தக் கோவில் இருந்த நிலம் ஜேர்மனியர்களால் ஒரு ஹாட்டல் நிர்மாணத்திற்காக வாங்கப்பட்டுள்ளது. இவர்கள் அகழ்வுப் பணியில், இங்கு முன்பொரு கோவில் இருந்தது தெரியவந்துள்ளது. 20ஆம் நூற்றாண்டில்தான் மறுபடியும் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. 2015இன் நடுப்பகுதியில் தீவிரவாத யூத இளைஞர்களால் இந்த ஆலயம் தீயிடப்பட்டு பல மில்லியன் ஷெக்கல் பெறுமதியான சேதம் ஏற்பட்டது. ஜேர்மனிய கத்தோலிக்க அமைப்பொன்றும், இஸ்ரவேல் நிதி அமைச்சும் இணைந்து இந்தத் தேவாலயத்தின் புனர் நிர்மாணப் பணிகள் 2017இல் பூர்த்தியாகின.



பிறகு உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவைச் சந்தித்த இடத்துக்கு விரைந்தோம். அந்த ஆலயத்துக்கு அருகில் கலிலேயாக் கடற்கரை மிகவும் அழகாக இருந்தது. அந்த இடத்தில் தான் உணவருந்தியவாறு இயேசு பேதுருவைப் பார்த்து, "என்னை நேசிக்கிறாயா?" என்று மூன்று முறைக் கேட்டதும், பேதுரு தழுதழுத்த குரலில் "நீரே அதை அறிவீர் ஆண்டவரே!" என்று பதில் கூறினார். பேதுரு மூன்று முறை மறுதலித்ததால், இயேசுவும் அவரிடம் அவ்வாறு மூன்று முறை கேட்டிருக்கக் கூடும். மேலும் நெருப்புக்கு அருகில் பேதுரு மறுதலித்தது போலவே, இயேசும் நெருப்புக்கு அருகில் இருந்து அக்கேள்வியைக் கேட்டார்.

**யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம்**

பிறகு அங்கிருந்து இயேசு யோவானிடம் ஞானஸ்நானம் பெற்ற யார்டெனிட் Yardenit baptism siteஎனும் யோர்தான் கரைக்கு சென்றோம். யோர்தான் ஆற்றில்தான் இயேசுவுக்கு யோவான் ஞானஸ்நானம் கொடுத்தார். ஆனால், ஆற்றின் எந்தப் பகுதியில் அவர் ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது தெரியவில்லை. அங்கு எங்கள் குழுவிலிருந்து பலர் போதகர் மூலம் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றனர். அங்கு வெள்ளைத் துணியணிந்தவர்களே திருமுழுக்கு எடுக்க முடியும். வாடகைக்காக வெள்ளை நிற ஆடைகளும், உடை மாற்ற தனி அறைகளும் தயார் நிலையில் வைத்துள்ளனர். யோர்தான் கரை பெரிய ஆறு போலில்லை. மாறாக ஒரு கால்வாய் அல்லது நிலத்துக்கு வந்த கடல் நீர் (Backwaters) போல அகலம் குறைவாகக் காட்சி அளித்தது. ஆனால் செடிகொடி மரங்களுடன் இயற்கையான அழகோடு மிளிர்ந்தது. எல்லாமே பச்சைப்பசேலென்று இருக்கின்றது. யோர்தான் நதி வடக்கே லெபனானில் புறப்பட்டு, சிரியா, இஸ்ரவேல், ஜோர்தான் வழியாக செல்கிறது. போகும் வழியில் நல்ல தண்ணீர் வைத்திருக்கும் கலிலேயா கடலுக்கும், உப்புத் தண்ணீர் வைத்திருக்கும் சாக்கடலுக்கும் கைம்மாறு கருதாமல் தண்ணீர் வழங்கிவிட்டு செல்கிறது. நாமும் இது போன்று நல்லவர்களுக்கும், கெட்டவர்களுக்கும் உதவ வேண்டும் என்று புரிகிறதல்லவா? அந்த இடம் மிகவும் அமைதியானதும், தியானததிற்கு ஏற்றதுமான ஓர் அருமையான இடம்.

ஒரு தடவை நீண்ட பஸ் பயணமானதால் ஒரு சிறிய கடைக்கு முன்பு வண்டியை நிறுத்தினார்கள். தேநீருக்காக இரண்டு டொலர் பணம் செலுத்தினேன். சிறிது நேரம் கழித்து, என் பெயரை அழைத்து, ஒரு கோப்பையில் சுடு நீர் மட்டும் கொடுத்தார்கள். மேஜை மீது வைத்து சுவைத்துப் பார்த்தால், உண்மையிலேயே சுடு நீர்தான்! அங்கு தனிப் பொட்டலமாக வைத்திருந்த பால், தேயிலை, சர்க்கரை ஆகியவற்றை எடுத்து நாமே கலந்து கொள்ள வேண்டுமாம். என்னைப் பார்த்து, என் நண்பர்கள் ஏளனமாகச் சிரித்தனர். காரணம், நான் காசு கொடுத்து வாங்கிய சுடுநீர் அருகிலேயே இலவசமாகக் கிடைத்தது!...

பயணிப்போம்...



## ஜென் கதை -03

இருபது வருடங்களுக்கும் மேலாக ஒரு ஜென் துறவியை அன்பொடு கவனித்து பணிவிடை செய்துவந்த பெண்ணுக்கு ஒரு ஆர்வம் ஏற்பட்டது.

துறவிக்கு வேளா வேளைக்கு உணவளித்து, தியானத்துக்குக் குடில் அமைத்துக் கொடுத்து பல்வேறு விதங்களிலும் சேவை செய்து வந்தாள் அந்தப்பெண். இந்த இடைவிடாத தியானத்தால் அவருக்கு மனப்பாங்கில் என்ன மாற்றம் நேர்ந்திருக்கிறது என்பதை அறியும் ஆர்வமே அது.

காமம் மிகுந்த ஒரு பெண்ணை வைத்து அவரை சோதிப்பது என்று தீர்மானித்தாள்.

அப்படி ஒரு பெண்ணை அழைத்து வந்தாள்.

அந்தப் பெண், தனக்குச் சொல்லித் தரப்பட்டவாறே காமம் மேலிடத் துறவியைத் தழுவினாள். அவர் கண் விழித்ததும்,

'என்ன செய்யத் தோன்றுகிறது?; என்றும் கேட்டாள்.

'முதிய மரத்துக்குக் கதகதப்பு எதற்கு' சில்லிட்ட கால்காலத்துக் கல்லிலும் அது வளருமே?;

என்று கவித்துவமாகச் சொல்லிவிட்டு தியானத்தைத் தொடர்ந்தார்.

துறவி பால் கருணைகொண்டு வருக்குச் சேவைசெய்த பெண் தைப் பார்த்ததும் ஆத்திரமடைந்தாள்.

'இப்படிப்பட்ட ஒரு துறவிக்கா இருபது ஆண்டுகளாக நான் பணிவிடை செய்தேன்!; என்று அவருக்குத்தான் கட்டியிருந்த குடிலைத் தீயிட்டுக் கொளுத்தினாள்.

அழைத்து வரப்பட்ட பெண் குழப்பமடைந்தாள்.

'ஏன் கோபப்படுகிறீர்கள்? ஒரு துறவி எப்படி நடக்கவேண்டுமோ அப்படித்தானே அவர் நடந்தார்? என் இச்சைக்கு அவர் இணங்கவேண்டும் என்றா எதிர்பார்த்தீர்கள்?; என்று கேட்டாள்.

'இல்லை. ஒரு துறவி அப்படிச் செய்யவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர் சொல்லிலும் செயலிலும் உன்பால் இரக்கமில்லை. உன் நிலையைப் புரிந்துகொண்ட சமிக்ஞைகூட இல்லை.; என்றாள்.

மேற்சொன்ன விளக்கத்தில் அந்தப்பெண் சொல்லாமல் விட்ட தொக்கி நிற்கிற ஒரு விஷயம் இருக்கிறது. துறவிகள் தான் என்கிற சிந்தனையும், சுயம் என்கிற நிலையும் இல்லாதவர்கள் என்பதே அது. பண்பட்ட துறவிகள் தன்னிலையில் பேசுவதைத் தவிர்ப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். தன்னையே அவர்கள் படர்க்கையில்தான் குறிப்பிடுவார்கள்.

காமம் கொண்ட பெண்ணின் செயலுக்கு அவர் கோபப்பட்டிருக்கலாம், இரக்கம் கொண்டிருக்கலாம், உன் நிலை எனக்குப் புரிகிறது என்பதை உணர்த்தி இருக்கலாம், ஏன் இரக்கத்தின் காரணமாக இணங்கிக்கூட இருக்கலாம்.

ஆனா அவரோ எனக்குத் தேவையில்லை' என்று மட்டுமே சொன்னார்.

தன்னைப் பற்றியும் தன் தேவைகள் பற்றியும் மட்டுமே சிந்தை இருக்குமானால், தியானம் எந்தப் பலனையும் தரவில்லை என்றே பொருளாகிறது.




# பல்துறைக் கலைஞராக மிளிரும் கலீஸ்

எப்போது பார்த்தாலும் சண்டை போட்டுக் கொண்டு இருப்பவர்களை எலியும் பூனையும் போன்று சொல்வார்கள். இந்த எலி பூனைச் சண்டையை உலகத்தவர் ரசிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட படைப்பு தான் " ரொம் ஈ ஜெரி" காட்டுன் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையுமே மகிழ்விக்கும் பூனையும் எலியும் தான் வுழஅ ஈ தநசசல ரொம் என்ற பூனை ஜெரி என்ற எலியை பிடிப்பதற்கு மேற் கொள்ளும் வீரதீர தந்திர செயல் தான் எல்லாக் கதைகளிலும் இடம்பெறும். சுமார் 75 ஆண்டுகளாக இந்தவொரு அம்சத்தை வைத்தே கதை சொல்லப்படுகின்றது. இக் காட்டுன் பலரை சிந்திக்கவும் செயற்படவும் வைத்துள்ளது.

வுழஆ ஈ துநசசல காட்டுன் தான் தன் வாழ்க்கையை நடிப்பு மற்றும் நகைச் சுவை புரிதல்களை ஏற்படுத்தியது. இந்த காட்டுனையே காட்டியே அம்மா உணவு ஊட்டுவர். இதற்காகவே எங்கள் வீட்டின் வவ வாங்கியதாக தனது சிறுவயது அனுபவத்தை குறிப்பிடுகின்றார் பீற்றர் சேவியர் கலீஸ்.

பாடசாலை காலங்களில் நாடகங்களை நடிப்பதற்கும் அரங்கு சார் செயற்பாடுகள் தொடர்ந்து இயங்குவதற்கும் என்னை நானே இணங்கண்டு வடிவமைத்து வெளிப்படுத்து வதற்கும் காட்டுனே வழி ஏற்படுத்தியது.

பன்முக ஆளுமை கொண்ட கலைஞரான கலீஸ் தொலைக்காட்சி,வானொலி, அரங்கு சார் கலைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

இயக்குனர், தயாரிப்பாளர், அறிவிப்பாளர், எழுத்தாளர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளராக முனைப்புடன் இயங்கி வருபவர். குறும்படங்கள் ஆவணப்படங்கள் மற்றும் இசை அல்பங்களை வெளியிட்டவர். அரங்கில் நடிகராக நாடக நெறியாளராக தாள வாத்திய கலைஞராக தன் அடையாளங்களை முன் நிறுத்துபவர். சென். பற்றீஸ் கல்லூரியில் உயர்தர கலைப் பிரிவில் கல்வி கற்ற இவர் யாழ். சமூக செயற்பாட்டு மையம், உலக தரிசன நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆகிய தொண்டு நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ வடக்கு மாகாண இணைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார்.






**இரா - வின்**

அனர்த்தம் சார்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடன் இணைந்து ஆசிய பசுபிக் பிராந்திய நிறுவனத்தின் மூலமாக முன்னெடுத்து வருகின்றார். நிறுவனம் சார்ந்த வகையில் பல்வேறு நலத்திட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிக அமைதியாகக் கலைசார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற கலீஸ், டான் தொலைக்காட்சியில் 3 நிகழ்ச்சி களைத் தயாரித்து அதன் நடிகராகவும் இருக்கின்ற அதேவேளை நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணியாற்றுகிறார். கதைகள் மூலமாகச் சமூகம் சார்ந்த உரையாடல்களை நகைச்சுவைப் பாணியில் தயாரித்து வழங்கும் நிகழ்ச்சியே கதை நேரம். பாரம்பரிய கலைஞர்களை நேர்கண்டு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி களரி. அறிவியல் சார்ந்து கேள்வி பதில்களைத் தொகுத்தளிக்கும் நிகழ்ச்சி பல்துறைக் கருவூலம்.

பல்துறை கலைஞராக உள்ள இவர் சிறந்த குரல்வளத்தையும், தேர்ந்த நடிப்பாற்றலையும் கொண்டவர் என்பதற்குக்




கலைசார்ந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் சான்றாகின்றன. அத்துடன் இவவு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாக அதிக ரசிகர்கள் மற்றும் பார்வையாளர்களைத் தன் வசப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"குரும்பை" "விடமேறி" என 2 குறும் படங்களையும் 4 ஆவணப்படங்களையும் தயாரித்து இயக்கியுள்ளார். சிறுவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக சமூகத்தவர்களின் பார்வையையும் அதனால் ஏற்படும் தவறுகள் மற்றும் நெறி பிறழ்வு தொடர்பாகச் சொல்லப்படுகின்ற கதையே "குரும்பை" குறும்படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

"விடமேறி" என்ற குறும்படத்தின் கதை, வழிதவறி நிலை தடுமாறும் இளம் சமூகத்துக்கு சொல்லப்படும் செய்தியாக வுள்ளது. பிள்ளைகளை பார்த்து பார்த்து வளர்க்கும் பெற்றோர் சிறியளவில் விடும் தவறு பேரிடியாக மாறுகின்றதாகப் படம் நகர்கின்றது.

4 ஆவணப்படங்களும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் சார்ந்து வெளிவந்தன. 8 இசை அல்பங்களை சமூக ஊடகங்களு டாக வெளியிட்டுள்ளார். இப்பாடல்கள் அனைத்துமே சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்டமையால் பெரு வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

திருமறைக்கலா மன்றத்தில் நாடகப் பயிலகத்தின் மூலமாக வெளிவந்த கலீஸ் அரங்கு சார்ந்த நிலையில் தபேலா, மிருதங்கம் ஆகிய தாளவாத்தியக் கருவி களை மிக லாவகமாக வாசிக்க கூடியவர். தமிழ் சிங்கள இளங் கலைஞர்களை ஒன்றிணைத்துப் "புது யுகம் நோக்கி" என்ற வார்த்தைகள் அற்ற நாடகத்தை நெறியாழ்கை செய்தவர். இத்துடன் "ஓமேக்கா" எனும் வார்த்தைகள் அற்ற நாடகமும் அவரது நெறியாளகையில் பல அரங்கு கண்டு பாராட்டுப் பெற்றவை. இவ்வாறு கலீஸின் அரங்கு நிகழ்வுகள் நீண்டு செல்லுபவைகளாகக் காணலாம்.

இளையவர்கள் ஏதோவொரு வகையில் திறமையானவர்கள். தமது திறமையை இனங்கண்டு விருப்புடன் கூடிய முழுமையான பயிற்சிகளை மேற்கொள்ளும் போது அவர்களாலும் மேற்கொள்ள முடியும். இலக்கை நோக்கியதாக அவவுகள் கவனம் இருக்கவேண்டும். எடுத்த எடுப்பில் யாரும் வெற்றி பெற முடியாது. பல தோல்விகளும் சோதனைகளும் ஏற்பட்ட பின்னரே வெற்றியே மிகப் பெரிய பலமானது என இன்றைய இளைஞர்கள் தொடர்பான தனது கருத்தை முன் வைக்கிறாவு கலீஸ்.

கலைத்துறையில் கால் பதித்து பெரும் விருப்புடன் செயற்பட்டு வரும் கலீஸ், தொடர்ந்தும் கனதியான படைப்புக்களை வெளிக் கொணர வேண்டும். இதன் மூலமாக ஆரோக்கியமான சமூகச் சூழமைவை ஏற்படுத்துவதுடன் இளையோ ருக்கு முன் மாதிரியாக அவவு மிளிர வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துவதில் தீபம் பெருமையடைகிறது.




அர்ஜுனன் கேட்கிறான்:

'பரந்தாமா, எனது காண்டீபம் நிமிர்ந்து நிற்கின்றது. அதோ அங்கே நிற்பவர்கள் எல்லோரும் என் சகோதரர்கள்? அவர்கள் மீது கணை வீசும்படியாக எனக்கு கட்டளையிடுகிறாய். என் கைகள் நடுங்குகின்றன. இந்தப் பாவத்தைச் செய்யும்படி என்னை ஏன் தூண்டுகிறாய்?"

பரந்தாமன் சொல்கிறான்:

"பல்குநா, உன் மயக்கம் நியாயமன்று. அவர்கள் உன் சகோதரர்கள் என்பதை நீ சிந்திக்க வேண்டிய நேரம் இதுவல்ல. அவர்கள் ஆட்சியில் இருப்பவர்கள். ஆகவே அவர்கள் மீது கணையெறிவதுதான் உனக்கு நியாயம்."

அர்ஜுனன் கேட்கிறான்:

"ஆட்சியில் இருக்கிறார்கள் என்பதற்காக மட்டுமே அவர்களை அழிப்பது நியாயமா கண்ணா?"

பரந்தாமன் சொல்கிறான்:

"அதுதான் தர்மம். ஏராளமான மக்கள் எதை விரும்புகிறார்களோ, அதைத்தானே ஒரு ஷத்திரியன் செய்கிறான்!. ஏராளமான மக்களால் வெறுக்கப்படுபவர்களை நீயும் சேர்ந்து வெறுப்பதுதான் தர்மம்.

"என்னைப்பார், நீங்கள் ஆட்சியில் இருந்தபோது தருமன் சூதாடினானே, அப்போது நான் துணைக்கு வந்தேனா? நீங்கள் எதிர்க்கட்சியானவுடனேயே வந்துவிட்டேன்! என்னை எல்லோரும் நேசிக்கிறார்கள். ஏன்? எப்போதுமே எதிர்க்கட்சியில் இருப்பவனை நேசிப்பது தான் ஜனங்களின் பழக்கம். எதிர்க்கட்சியில் இருப்பவனை நேசிப்பதுதான் தவறு செய்தால் கூட ஜனங்களின் பெயரால் செய்ய முடியும். இப்போது நீ செய்வது தவறேயானாலும், உன்னைத்தான் ஜனங்கள் விரும்புவார்கள். காண்டீபத்தில் கணையை ஏற்று."

அர்ஜுனன் கேட்கிறான்:

'மாதவா, நாளைக்கு நானே ஆட்சிக்கு வந்தாலும் என் கதியும் இதுதானா?"

பரந்தாமன் சொல்கிறான்:

"சந்தேகமென்ன? நாளை நீ ஆட்சிக்கு வந்தால், நானே கவுரவர் பக்கம் சேர்ந்தாலும் சேர்ந்து விடக்கூடும்! பெருவாரியான ஜனங்களின் விருப்பத்தை நான் எப்படி மீற முடியும்?"

அர்ஜுனன் சொல்கிறான்:

"நல்லது பரந்தாமா! நான் இன்று தவறு செய்தாலும் அதை ஜனங்களின் பேரால் செய்து விட முடியும், அல்லவா? மிகவும் சரி. என் கணை இன்று யார் மீதாவது பாய்ந்தாகவேண்டும். அடிக்கடி இத்தகைய போர்க்களங்கள் தோன்றி அமைதியைக் கெடுக்கக்கூடாதென்று பெருவாரியான ஜனங்களின் விருப்பத்தை நான் எப்படி மீற முடியும்?"

பரந்தாமன் கேட்கிறான்:

"அர்ஜுனா நீ என்ன சொல்கிறாய்?"


அர்ஜுனன் சொல்கிறான்:

"எப்போது எதிர்க்கட்சிகளையே ஆதரிக்கும் உன் செயல்தானே இந்தப் போர்க்களங்களுக்குக் காரணம்! இப்போது பெருவாரியான ஜனங்களின் விருப்பப்படி என் காண்டீபம் உன்னைக் குறி வைக்கிறது."

கண்ணன் மூர்ச்சடைகிறான்.

**கண்ணதாசன்**

# பிளாஸ்ரிக் புவியினைச் சிதைப்பதில் நாமும் பங்காளிகளே! எப்படி?





லம்போதரன்



"தன்னுடைய கல்லைத் தான் வைக்கும்போது, இந்த உலகத்தைக் கட்டமைப்பதில் தன்னுடைய பங்கையும் அளிக்கிறோம் என்ற உணர்வுதான் மானுடம்" என்கிறார் பிரெஞ்சு நாவலாசிரியர் எக்ஸ்பெர்ரி.

"ஒரு சிறு பிளாஸ்ரிக் துணிக்கையை நான் பயன்படுத்தும்போது இந்த உலகுக்கும் எனது எதிர்காலச் சந்ததிக்கும் மிகப் பெரும் இழுக்கை உண்டாக்குகிறேன்" என்று உணரத் தொடங்குவதே நம் இலக்கினை எட்டு வதற்குரிய இலகு வழியாகலாம்.

இன்றைய உலகம் எப்படி எப்படி எல்லாம் பிளாஸ்ரிக் என்ற அரக்கனால் ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது தெரியுமா? நாம் நம்மை அறியாதவாறு எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு பயங்கரம் மிகுந்த சூழலைக் கொண்ட உலகத்தினைப் பரிசளிக்கப் போகிறோம் என்ற உண்மை தெரியாதவர்களாக நாம் தற்காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம்.

எங்கு பார்த்தாலும் எதிலும் பிளாஸ்ரிக் என்ற பிசாசு புகுந்துகொண்டு எம்மை எல்லா வழிகளிலும் மிரட்டிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் எங்காவது ஒரு புள்ளியில் நின்றவாறு ஒரு சுற்றுச் சுற்றுங்கள் பார்க்கலாம். பிளாஸ்ரிக் இல்லாத இடம் எதுவாக இருக்கும்! அண்மையில் உலகின் உச்சியென வர்ணிக்கப்படும் எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் கூட ஏறத்தாழ ஒரு தொன்னுக்கும் அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகளைச் சேர்த்திருக்கிறார்கள் சூழலிய லாளர்கள்.

பொதுவாகப் பிளாஸ்ரிக் தொடர்பாக நாம் பேசத் தொடங்கும்போது அது நம் உலகை எவ்வளவு மாசு படுத்திக் கொண்டிருக்கிறது என்றோ அதனால் எத்தனை உயிரினங்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனவென்றோ நாம் புள்ளி விபரங்களைத் தர வேண்டிய அவசியம் இருப்பதில்லை. குப்பைத் தொட்டிகளுக்கு வெளியே சின்னஞ் சிறிய பைகள் தொட்டுப் பெரிய மூட்டைகளாகக் கட்டப்பட்டு பொறுப்பற்ற விதத்தில் குப்பைகள் எறியப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவை நாலா புறமும் சிதறிச் சிந்துண்டிருக்கும். அந்தப் பிளாஸ்ரிக் கழிவுகளைக் கொண்ட பொதிகளை நாய் ஒரு புறம் கிழித்துவிட்டிருக்கும். மாடுகளும் கிழித்துத் தின்ன முயன்று கொண்டிருக்கும். அப்படியான காட்சிகளைப் பார்க்கின்ற சந்தர்பங்களில் ஒருவித குற்ற உணர்வோடுதான் எம்மால் அந்த இடத்தைக் கடந்து செல்ல முடிகிறது.

இலங்கை ஜனாதிபதியால் சட்டமாக்கித் தடை செய்துவிட்டோம் என்று அறிவித்த பின்பும் அதை அமுலாக்கலில் சிக்கலிருப்பதாகச் சொல்லி அது சார்ந்த சகல தரப்பினரும் அது பற்றிப் பேசாதிருக்கின்றனர். பிளாஸ்ரிக் தயாரிப்பாளர்களினால் கூட இவ்வகையான சட்ட அமுலாக்கலை மறைமுகமாகத் தடுத்து நிறுத்தி இருக்கலாம் என்ற சந்தேகமும் வலுக்காமலில்லை.

நாம் ஊகித்திராத அளவுக்குப் பிளாஸ்ரிக் எல்லா இடங்களிலும் புகுந்துவிட்டது. இன்று நாம் உபயோகிக்கின்ற வாகனங்கள் தொட்டு பயணிக்கின்ற விமானங்கள் வரை பிளாஸ்ரிக் பொருட்களால் ஆன உதிரிப்பாகங்களைக் கொண்டதாகக் காணலாம். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்னவெனில் நாம் உடுக்கின்ற உடுபுடவைகளில் கூட பிளாஸ்ரிக் நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**"நீ என் கடைக்கு வந்து பொருட்களை வாங்குகின்ற அதே சமயத்தில் அவற்றைப் பாது காப்பாக எடுத்துச் செல்வதற்கு நீயே ஒரு பையினையும் கொண்டு வந்துவிடு" என்ற புதிய ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள யாரும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.**

இதோ இந்த நிமிடத்திலிருந்து பிளாஸ்ரிக் பாவனையைக் கைவிட்டு விடுகிறோம் என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டு செயற்படக் கூடிய விடயம் அல்ல. பல காலமாகப் புகைப்பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டதைப்போல இந்தப் பிளாஸ்ரிக் பாவனைக்கும் நாம் அடிமையாகிவிட்டோம். அது இல்லாவிட்டால் வாழ்க்கை இல்லை என்ற அளவுக்கு அதன் பாவனைகள் எம்மிடையே காணப்படுகின்றன. அரசினால் பிளாஸ்ரிக் பாவனை தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது பயந்திருந்து தமது கடைகளில் பிளாஸ்ரிக் பைகளின் புகைப்படத்தைக் கூட வைக்கத் தயங்கிய கடைக்காரர்களெல்லாம் மீண்டும் தைரியத்தோடு பிளாஸ்ரிக் பைகளைக் கடை முன்னே தொங்க விட்டி ருக்கிறார்கள். கேட்டால் "தற்போது பொருட்கள் வாங்க வரும் வாடிக்கையாளர்கள் வெறும் கையுடனேயே வருகிறார்கள். பொருட்களைப் பிளாஸ்ரிக் பைகளில் போட்டுத் தருமாறு அடம்பிடிக்கிறார்கள். இல்லை என்று சொன்னால் பிளாஸ்ரிக் பைகளில் பொருட்களைப் பொதி செய்து கொடுப்பவர்களிடம் போய் பொருட்களை வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். நாம் என்ன செய்வது? அதனால்தான் வேறு வழி இல்லாமல் நாங்களும் பிளாஸ்ரிக் பைகளை வாங்கி வைத்திருக்கிறோம்" என்று சொல்லுகிறார்.

உலகில் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையிலுள்ள ஆபத்தை அறிந்தபோது பிளாஸ்ரிக்கைத் தடை செய்ய வேண்டும் என்ற கோஷம் ஒருமித்து எழுப்பப்பட்டது. அதற்குத் தடை என்று ஒன்றினைக் கொண்டு வந்த ஆரம்பத்தில் எல்லா நாடுகளும் ஒருவித சிக்கலை எதிர்நோக்கிக் கொண்டன. "வாடிக்கையாளர்களுக்கும் விற்பனை யாளர்களுக்கும் இடையே காணப்படும் உளவியல் ஒப்பந்தமே காரணம்" என்று இந்தப் பிரச்சினையை வரை யறுத்தார்கள். "நான் உனது கடைக்கு வந்து பொருட்களை வாங்குகிறேன். எனக்கு அவற்றை இலவசமாகப் பிளாஸ்டிக் பைகளில் போட்டுக் கொடுத்துவிடு" என்பதுதான் அந்த ஒப்பந்தம். பல ஆண்டுகாலமாக புழக்கத்திலிருக்கும் இவ்வகையான எழுதப்படாத ஒப்பந்தத்தினால் பிளாஸ்ரிக்கைத் தடை செய்ய முடியவில்லை.

"நீ என் கடைக்கு வந்து பொருட்களை வாங்குகின்ற அதே சமயத்தில் அவற்றைப் பாது காப்பாக எடுத்துச் செல்வதற்கு நீயே ஒரு பையினையும் கொண்டு வந்து விடு" என்ற புதிய ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள யாரும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அதுவும் ஒரு போதைக்கு அடிமையாக இருப்பதை ஒத்திருக்கிறது. வாடிக்கையாளர்கள் இந்தப் பதிய ஒப்பந்தத்துக்குத் தயாரக இல்லை என்னும்போது பழைய ஒப்பந்தததுக்கே போகக் கடைக்காரரும் நிர்பந்திக்கப்படுகிறார்.

எங்கள் அடுத்த தலைமுறையினர் பிளாஸ்டிக் இல்லாத உலகமொன்றில் வாழ வேண்டும் என்னும் உயரிய இலட்சியத்தோடு உலகின் பல்வேறு பகுதிகளிலும் பிளாஸ்ரிக் குக்கு எதிரான நடவடிக்கைகளை மிகவும் மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டுக்கொண்டி ருக்கின்றன. அரசாங்கம் அப்படியான பொருட்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளை எடுக்கு முன்னரே பல சமூக நலன் விரும்பிகளாலும், சூழலியளாளர்களாலும் அது பற்றிய சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அரசுக்கும் அவர்கள் தமது செயற்பாடுகளின் மூலம் அழுத்தம் கொடுக்கத் தொடங்கி விட்டனர்.

நியூசிலாந்து நகரத்தை பிளாஸ்ரிக் பற்றிய விழிப்புணர்வு பெற்ற நாடுகளில் முதன்மை நாடாகக் கொள்ளலாம். அங்கு 65ஆயிரம் பேர் வரை பிளாஸ்ரிக்கைத் தடை செய்யக்கோரிய மனுவினைப் பிரதமரிடம் கையளித்துள்ளனர். அங்கு ஒரு சின்ன பிளாஸ்ரிக் துண்டினைக்கூடப் பயன்படுத்தாத குடும்பங்களின் வாழ்க்கை முறையை பிரதான கட்டுரைகளாக ஊடகங்கள் வெளியிட்டு மக்களை ஊக்குவித்தன. ஒருவரைப் பார்த்து இன்னொருவர் என பிளாஸ்ரிக் பாவனைக்கு எதிரான எண்ணமுள்ளவர்கள் எண்ணிக்கை கணிசமாக உணர்ந்தது.

அரசு மட்டுமல்ல நாமும் இதற்குக் காரணம் என்ற இடத்திலிருந்துதான் இது பற்றி நாம் பேசத் தொடங்க வேண்டும் என்று தான் நான் எண்ணு கிறேன்.

பிளாஸ்ரிக் பொருட்களை உபயோகிப்பவர்களுக்குச் சில நாடுகள் கடுமையான தண்டனைகளை அறிவித்திருந்தன. இலட்சக் கணக்கில் அபராதம் விதித்தன. சிறைத்தண்டனை கூட வழங்கப்பட்டிருக்கிறது. அத்தகைய அபராதத் தொகையினை அந்த நாட்டு அரசாங்கங்கள் தமது சுற்றுச்சூழல் பாது காப்புக்கும், பராமரிப்புக்கும் செலவிட்டனர். அப்படியான பொருட்களுக்கு அதிக அளவில் வரி அறவிடப்பட்டது.

ஆனால் எங்கெல்லாம் மக்கள் தாமாகத் தமது பொறுப்பை உணர்ந்து, பிளாஸ்ரிக் பாவனையைக் கைவிடுவதைத் தமது தார்மீகக் கடமை என உணர்ந்து செயற்பட்டார்களோ, அங்குதான் இந்தப் பிளாஸ்ரிக் பாவனை ஒழிப்பென்பது சாத்தியமானதாகச் சொல்லப்படுகிறது.

"இந்த இடத்தில் சிறு நீர் கழிக்கக் கூடாது" என்று எழுதி வைத்துத் தோற்றுப் போனவர்கள் அதற்குப் பதிலாக ஒரு புதிய உத்தியைப் பின்பற்றினர். அந்த இடங்களில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கப் பதிலாகக் கடவுள் படங்களை வரைந்து வைத்தனர்.

அவ்வித நம்பிக்கையும் பொய்த்துப்போன காலத்தில் தார்மீகம் பேசுவதை நடைமுறைச் சாத்தியம் இல்லாதிருக்கிறது. தார்மீகத்திற்கும் யதார்த்தத்துக்கும் இடையே உள்ள தூரத்தை நாம் அறியாதவரல்ல. ஆனால் தார்மீகத்தைத் தம் வாழ்வின் பகுதியாகக் கடைப்பிடிக்கும் சொற்பமான கூட்டம் ஒரு நேர்மறையான முன்னுதாரணமாக மாறும்போது இன்னும் கொஞ்சப்பேர் நம் இலக்கை விஸ்தரிக்க முன்வரக்கூடும்.



# அங்கதன் பதில்கள்

■ **நமது அரசியல் வாதிகள் சுயமாக சிந்திக்கவே மாட்டார்களே?**

● என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? அவர்கள் எப்போதும் எதிரணியை எப்படி சிந்திப்பதுஎன்பது குறித்து சிந்தித்து கொண்டேயிருக்கிறார்கள்.

ஆரூரன், கோப்பாய்.

■ **தீர்வை வழங்கும் நோக்கம் ஜனாதிபதியிடம் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறியிருக்கிறார்களே!**

● அப்ப தங்களை இவ்வளவு காலமும் ஜனாதிபதி இளிச்சவாயங்களாக்கியதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பிரணவன், கிளிநொச்சி.



■ **அரசு அழைத்தால் அமைச்சர் பதவிகளை மீண்டும் ஏற்றுக் கொள்வோம் என முஸ்லிம் பிரதிநிதிகள் கூறிவிட்டனரே!**

● விலகச் சொன்னார்கள் விலகினோம்... ஏற்கச் சொன்னால் ஏற்போம்... என்று தாம் மக்களை ஏமாற்றி நடத்தும் நாடகத்தை தெரிவாக்கியுள்ளார்கள். பதவிகளை கூட அவர்களுக்கிடையிலான பதவி விலகல் பேரத்தில் ஒரு நிபந்தனையாகவும் இருக்கலாம்.

அன்புக்கரசி, ஊறணி.



■ **நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலய நில விவகாரத்தில் பிக்குமார் அட்டகாசத்தை கவனித்தீர்களா?**

● புத்த பகவான் மண்ணாசை கொண்டவர் என்பதை நிரூபிப்பதில் பிக்குமாருக்கு இவ்வளவு வெறி... நல்லாட்சியினர் இதனை அடக்கப்போகிறார்களா? அல்லது மறைமுக ஆசி வழங்கப்போகிறார்களா?

கதிர்வேல், சண்டிலிப்பாய்

■ **தமது தமிழ்ப் பிள்ளைகளின் கல்வித்தரம் வீழ்ச்சி கான என்ன காரணம்?**

● ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை அதிக பட்ச இலக்கிய இலக்காக கொண்டு இயங்கும் பெற்றொர் சமூகம் தான் காரணம். ஐந்தாம் ஆண்டில் அளவுக்கு மீறி களைந்துபோன பிள்ளை அதற்குமேல் பெரும்பாலும் சலித்து போய்விடுகிறதே!.

அன்புராஜ், வவுனியா.



■ **தெய்வச்சிலைகள் படைக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் வீதியில் வீசப்படுவதும் எதனைக் காட்டுகிறது?**

● எமது மதவாதிகள் எம்மை கலாசாரமற்ற மந்தபுத்தியுள்ள இனமாக மாற்றிவருவதாக காட்டுகிறது.

அருந்ததி, வேலணை.

■ **இப்போதெல்லாம் மக்கள் வீதிக்கு இறங்கி அரச நிர்வாகத்துக்கு எதிராகத் துணிந்து போராடத் தொடங்கியுள்ளமை எதனைக் காட்டுகின்றது?**

● தமது பிரச்சினைகளை உயர்மட்டத்தில் துணிந்து பேசி தீர்வு பெற்றுத்தரும் திராணியற்ற தலைவர்களை அனியும் நம்பக்கூடாது என்ற முடிவுக்கு வந்துள்ளமையைக் காட்டுகின்றது.

அன்ரன், திருகோணமலை.

■ **அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கிறார்களே சரியா?**

● முன்பு அப்படியிருக்கலாம். இப்போது அகத்தின் அழகு அவரவர் முகப்புத்தகத்தில் என்கிறார் கவிஞர் விவேக்.

மலர், மஸ்கெலியா.

■ **மத நல்லிணக்கம் ஏற்படத் தடையாக உள்ளது யார்?**

● மதபீடங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்ப ஆட்சி நடத்தும் அரச பீடத்தவர்.

மைதிலி, பருத்தித்துறை.

■ **புதுடில்லியின் ஆதரவுடன் தீர்வை வென்றெடுப்போம் என சம்பந்தன் நம்பிக்கை தெரிவித்திருப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

● கொழும்பு கைவிட்டுவிட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இந்தியா பொறுத்த நேரத்தில் காலை வாரும் என்று தெரிந்தும் கதையளப்பதுதான் கோமாளித்தனத்தின் உச்ச கட்டம்.

பகீதா, ஏழாலை.

■ **புதிது புதிதாக பத்திரிகைகள் வெளிவருகின்றனவே. காரணம் என்ன?**

● தேர்தல் காலங்களில் காளான்கள் முளைக்கத் தொடங்கிவிட்டன. அவ்வளவுதான். அதுசரி சொல்வதற்கு செய்திகளும், எழுதுவதற்கு படைப்பாளிகள் மற்றும் ஆய்வாளர்களும் வெளியிட ஊடகங்களும் இருந்தாலும் மக்கள் வாங்கிப்படிக்க ஆர்வம் அற்றவர்களாக இருக்கின்றார்களே!

சுரேஸ், வவுனியா.



■ **சோதிடர்களின் காட்டில் இப்போது பெருமழை என்கிறான் நண்பன். என்ன காரணம்?**

● மக்கள் நிறையப் பாவங்களை தம்மையறியாமலே செய்துவிட்டு பயப்படுகிறார்கள். எனவே அதற்கு பரிகாரம் சொல்பவன் பணம் சம்பாதிப்பதில் என்ன ஆச்சரியம் உள்ளது.

கம்ஸா, குப்பிளான்.

■ **தீபம் பத்திரிகையின் அரசியல் இலக்கு என்ன?**

● 'யாமார்க்கும் குடியல்லோம்' அவ்வளவுதான்

பிரந்தா, வண்ணார்பண்ணை.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர்,உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

தூரமான கேள்விகளை அனுப்புவோருக்கு **500** ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.

பெயர் :.......................................
முகவரி :.......................................
:.......................................
தொலைபேசி இல. .......................................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● **நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லாதநிலை ஏற்பட்டுவிட்டது –பந்தலகுணவர்த்தன தெரிவிப்பு.**

■ நல்லாட்சி அரசாங்கத்துக்கு நல்லதோர் நற்சாட்சிப் பத்திரம்... நாடு கெட்ட கேட்டுக்கு கேடு கெட்டதோர் ஆட்சி... என்ன நான் சொல்றது பிழைப்போ...

● **"முஸ்லிம் பிரதிவாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" – அஸ்கிரியபீடம்**

■ நீங்க சொல்றது மெத்தச் சரிதான் பாருங்கோ... கையோடை பிக்குமாரும் கொஞ்சம் பொறுப்புடன் இருக்குமாறு பீடத்தவர் கண்டித்தால் நல்லதெல்லே...

● **இந்தியா எம்மைக் கைவிடக் கூடாது – செல்வம் அடைக்கல நாதன், பா.உ**

■ இந்தியாவும் உங்களைக் கைவிடாது, நீங்களும் இந்தியாவின் காலை விட மாட்டீங்கள். தமிழ் மக்கள்தான் பாவம் இருவரையும் நம்பி நடுத்தெருவில் நிற்கிறார்கள்...

● **போதையில் இருந்து மக்களைக் காப்பாற்ற யாழில் திறக்கப்பட்டது நம்பிக்கை இல்லம்.**

■ நம்பிக்கை இல்லத்திலும் நம்பிக்கை இல்லை என்று மக்கள் குறை சொல்லாவகையில் நம்பும்படி செயற்பட்டால் சரி...

● **காட்டிக்கொடுக்கப்படுகிறது நாட்டின் தேசிய பாதுகாப்பு – பதறுகிறார் விஜேதாச**


■ சொன்னது சரிதான்... ஆனால் யாரால் காட்டிக் கொடுக்கப்படுகிறது என்பதையும் கொஞ்சம் உரத்து சொன்னால் மக்களின் பதற்றம் தணியுமல்லே...

● **சிங்களத்தில் ஐக்கியம் பேசும் முஸ்லிம்கள் தமிழில் இனவாதம் பேசுகின்றனர் – மகிந்த ராஜபக்ஷ காட்டம்.**



■ நீங்கள் மட்டும் என்ன லேசுப்பட்டவரா? வடக்கில் வலம் வரும்போது தமிழில் ஐக்கியம் பேசிவிட்டு தெற்கில் வலம்வரும்போது சிங்களத்தில் இனவாதம் அதுவும் பேரினவாதம் பேசுகிறீர்களே! இப்படி சொல்றதுக்கு ஐயா கோவிக்கக்கூடாது.

● **'சர்வாதிகாரத்தை பயன்படுத்தி தெரிவுக்குழுவை அடக்க முடியாது. – மைத்திரிக்கு ரணில் சாட்டை"**



■ இந்த நாட்டில் நல்லாட்சி என்ற பெயரில் ஒரு சர்வாதிகாரி இதுவரை ஆட்சி செய்கிறார் என்பதை ரணில் வெளிச்சத்துக்கு கொண்டுவந்துவிட்டார். சபாஷ்.

● **அரச யந்திரத்தை முடக்கிய மைத்திரி... மைத்திரியுடன் மோத தயாராகிறார் ரணில் – செய்தி**

■ அப்ப... சபாஷ் சரியான போட்டி! என்று சொல்ல வைக்கும் கூத்துக்கள் அரசியல் அரங்கில் நிகழப்போகிறது என்று சொல்லுங்கோ.

● **நீராவியடி காணிப்பிரச்சினையை அத்துரலிய ரத்தினதேரர் தீர்த்து வைப்பாரா... – செல்வம் அடைக்கலநாதன், பா.உ.**

■ அத்துரலிய யாழ்ப்பாணத்தில் சும்மா "பம்பலாக" சொன்னதை செல்வந்தரா "சீரியஸாக" நினைச்சிருப்பார். இது தான் பொல்லுக்கொடுத்து அடிவாங்கிற வேலை பாருங்கோ.



சோதித் தாத்தா சொல்கிறார்

# விளையாட்டு உலகில்





-காவலூர் ஞானம்-

# மழையால் பிழைக்குமோ ஆரூடங்கள்?

**ஜிங் பெய்ல்ஸ்' 'Zing' bails**

ஜிய் பெயில்ஸ் என்பது பந்து ஸ்டம்பை தாக்கியதும் 'ஜிங் பெய்ல்ஸ்' ஜொலிக்கும். அதேபோல் ஸ்டம்பும் பிளிங்க் ஆகும். இதனடிப்படையில்தான் 'ஜிங் பெய்ல்ஸ்' அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், சில நேரங்களில் ஸ்டம்பை பந்து தாக்கும்போது 'ஜிங் பெய்ல்ஸ்' ஜொலித்தாலும் ஸ்டம்பில் இருந்து பெய்ல்ஸ் கீழே விழுவதில்லை. இதனால் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழப்பில் இருந்து தப்பி விடுகிறார். ஆகவே சர்ச்சை எழுந்த வண்ணம் உள்ளது. ஜிங் பெய்ல்ஸ்' குறித்து முன்னணி வீரர்கள் குறை கூறிய போதிலும், அனைத்து போட்டிக்கும் 'ஜிங் பெய்ல்ஸ்'தான் பயன்படுத்தப்படும் என்று ஐசிசி தெரிவித்துள்ளது . "நாங்கள் போட்டியின் மத்தியில் எதையும் மாற்றமாட்டோம். அப்படி செய்தால் தொடரின் கண்ணியத்தை விட்டுக்கொடுத்ததாகி விடும். 10 அணிகள் விளையாடும் 48 போட்டிகளுக்கும் ஒரே மாதிரியான பெய்ல்ஸ்தான் பயன்படுத்தப்படும்" என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.



**மழையின் குறுக்கீடு**

இந்தத் தடவை 'ஜிங் பெய்ல்ஸ்'5 தடவை வெற்றி ஈட்ட, மழை 4 தடவைகள் வெற்றி ஈட்டி, இந்தச் சுற்றுப்போட்டியின் சுவாரஸ்ஸியத்தை குறைத்திருக்கின்றது.பலமான அணிகள் மழையின் குறுக்கீட்டால் ஒரு புள்ளியோடு திருப்திப்பட வேண்டிய நிலை. தோற்றுவிடுவோமா என்ற பயத்தில் இருந்த அணிகளுக்கு இலாபந்தான். மழை விரட்டியடித்த போட்டிகள் என்பதில் கூட சாதனை படைக்கப்பட்டுள்ளது. 1992, 2003ஆம் ஆண்டுகளில், 2 போட்டிகளையே மழை குறுக்கிட்டு தடுத்தது. இந்தத் தடவை 4 மோதல்கள் நிறுத்தப்பட்டு விட்டன. இரண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களுடன் விளையாடப்பட்டுள்ளது. அழையா ரசிகராக வந்து போகும் மழையால் ஆருடங்கள் பிழைக்காது என்று நம்புவோமாக! வெள்ளியன்று மழை வரவில்லைதான்.. ஆனால் மேற்கிந்திய அணி "நனைந்த கோழி" போலாகி விட்டது. அதிரடிப் பந்து வீச்சையும் காணோம். ஆகாயத்தை நிறைக்கும் சிக்ஸ்ஸர்களையும் காணோம். வெறும் புஸ்வாணந்தான்.! மிகச் சுலபமாக மே.இந்திய அணியினை வென்றது இங்கிலாந்து. இங்கிலாந்தின் துடுப்பாட்டக்காரர் றூட் முதல் 3 சதங்கள் அடித்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனையாளராகி இருக்கிறார்.

ஒவ்வொரு கிரிக்கெட் ரசிகனுக்கும் உலகக் கோப்பை போட்டியை நேரில் பார்க்க வேண்டும் என்பது கனவாக இருக்கிறது. அந்த ஆர்வம்தான் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, அமெரிக்க ரசிகர்களை இலண்டனிற்கு வரவைக்கின்றது. ஆனால் தற்போது அந்த ஆசையை நிறைவேற்ற இங்கிலாந்து தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு இரண்டு காரணங்கள் என்றும் சொல்லலாம் ஒன்று கணிக்க முடியாத வானிலை. மற்றொன்று பெரியளவிலான விளம்பரங்கள் ஏதும் இல்லாமை. பெருந்தொகையான ரசிகர்களால் எதிர்பாக்கப்பட்ட இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான 20வது மோதல். இடம்பெற்று முடிந்திருக்கிறது. மழையின் மிரட்டல் இங்கேயும் இருக்கத்தான் செய்தது. என்றாலும் மிரட்டலான இந்தியாவின் துடுப்பாட்டமும், பந்து வீச்சும், பாகிஸ்தானை "டிஎஸ்எல்" முறையில் மிகச் சுலபமாக வெல்ல வைத்துள்ளன. இதுவைரையில் ஆருடம் பொய்க்கவில்லை...

**பைத்தியக்காரத்தனமான 24/7 கேடயம் நடுவருக்கு "பூசை"**

நடுவராக இருக்க வேண்டியவர், சண்டையின் நடுவில் அநியாயங்கள் செய்தால் என்ன செய்ய வேணடும்? செய்ய வேண்டியதை செத் ரொலின்ஸ் மேளதாளங்களோடு செய்து முடித்துள்ளார். கோர்பின் தன்னை அடிக்க கையோடு கொண்டு வந்த கதிரையை எப்படியோ பறிமுதல் செய்து, அந்தக் கதிரையால், " நடுவர் நான்தான்" என்று களத்தில் கூத்தாடிக் கொண்டிருந்த சமியை அடிஅடியென்று அடித்துள்ளார் செத் றொலின்ஸ்.கதிரையால் எத்தனை தரம் அடித்தார் என்று எண்ண முடியவில்லை.

**பெய்லியை வீழ்த்திய லேஸி**

பெக்கி லிஞ்சும் பெய்லியும் இணைந்து லேஸி-அலெக்ஸா ஜோடியுடன் மோதிக் கொண்டார்கள். முதலில் வாய்ச்சண்டையுடன் ஆரம்பம். வழக்கம் போலவே எதிராளியைத் தாக்குவதும், தந்திரமாக நழுவி விடுவதும் லேஸியின் யுக்தியாக இருந்தது. இறுதியில் பெய்லியை மடக்கி லேஸி வென்றது பலரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

**24/7 கேடயம்**

இந்த 24/7 கேடயத்தை அறிமுகப்படுத்திய காலந் தொடக்கம் ஒரே கேலிக் கூத்தாகவே இருக்கின்றது. எங்கே எப்படி இதை வெல்வது என்ற விதிமுறை இல்லை. பறக்கும் விமானத்திலும் வெல்லலாம். அர்த்தராத்திரி உறக்கத்திலும் அடிக்கடி கைமாறிக் கொண்டே இருக்கின்றது பெல்ட். இந்த வெற்றியை உறுதிப்படுத்த, நடுவரும் 24 மணி நேரமும் பிரசன்னமாக இருப்பதுதான் பெரிய கேலிக்கூத்து. ஆனால் இது ஒரு மில்லியன் பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துள்ளதாம். இதானே வியாபாரிக்கு முக்கியம்?

**மாப்பிள்ளைத் தோழராகிய ஜனாதிபதி**


ஒரு காற்பந்தாட்ட வீரருக்கு இலகுவில் கிடைக்காத ஒரு கௌரவந்தான் இது! பரம்பரை துருக்கியாக இருந்தும், பிறப்பால் ஜேர்மனியராக இருக்கும் மெசூட் ஓஸில் சிறந்தஒரு காற்பந்தாட்ட வீரர் .ஜேர்மனியின் தேசிய அணிக்காக விளையாடியவர். மதரீதியாக இனரீதியாக தன் மீது காழ்ப்புணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது என்று கூறி, கடந்த ஆண்டு ஜேர்மன் அணிக்காக விளையாடுவதை நிறுத்தியவர் இந்த வீரர்.(அணி முகாமையாளரும் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை)

இப்பொழுது இங்கிலாந்தின் ஆர்ஸனெல் கழகத்திற்காக விளையாடுபவர். சமீபத்தில் துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில், முன்னாள் துருக்கி அழகி(2014) அமின் குல்ஸேயை திருமணம் செய்திருக்கிறார். தன் மனைவியுடன் திருமணத்திற்கு வந்திருந்த துருக்கி ஜனாதிபதிதான் மாப்பிள்ளைத் தோழன்.மேலும் பல அரசியல் பிரமுகர்கள் திருமண வைபவத்திற்கு வந்திருந்தார்கள். இந்த திருமண ஜோடி அன்பளிப்பாக அளித்த நிதியின் உதவி கொண்டு, சிரிய அகதிகள் 15,000 உட்பட ஒரு பாரிய தொகையினருக்கு துருக்கி செம்பிறைச் சங்கம் Turkish Red Crescent (Kızılay) (செஞ்சிலுவைச் சங்கம் போல, இஸ்லாமியரின் நலன்புரி சங்கம் இது.) இரவுணவு அளிக்க இருக்கின்றது-அதாவது கல்யாணச் சாப்பாடு போடுகிறார்கள்.











யார் அறிவார் இந்த நகைத் தெரிவுகளின் ரகசியத்தை என்கின்ற அளவுக்கு
உங்கள் சுபநிகழ்வுகள் அனைத்துக்குமான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் 23.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.